VISIT…



'என் பிள்ளை... என் பிள்ளை... முருகா, என் பிள்ளை அவனுக்கு ஒன்றும் நேராமல் காப்பாற்று' என்று உருப்போட்டுக் கொண்டு இருந்தவள் வாயிற்புறம் சற்று ஒதுக்கமாய ஒரு கார் வந்து நின்றதையோ அதிலிருந்து சசிதரன் இறங்கி உள்ளே வந்ததையோ கவனிக்கவே இல்லை.

வந்தவனின் குரலில் திகைத்து எழுந்தவள், அவனது கேள்வியை முதலில் சரியாக உணர்ந்து கொண்டாளில்லை.

பிறகு அவனது பேச்சு புரியவும் மேலும் பிரமித்தாள்.

இவன் எதற்காக, இப்படி அவளைத் தவிக்க வைக்க வேண்டும்.

"என் பிள்ளையோடான, என் வாழ்வில் ஒன்றே முக்கால் ஆண்டுகளைத் திருடிக் கொண்டவளுக்கு இப்போது அது நன்றாகப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்."

புரிந்தது, மிகவும் பயங்கரமாகப் புரிந்தது வயிறு கலங்கி நெஞ்சு உலர்ந்து, கண்ணை இருட்டி... ஆனால் கருத்தால் கூட அறிந்திராத மகனிடம் இவன் இவ்வளவு கரிசனம் காட்டுவான் என்று அவளுக்கு எப்படித் தெரியும்?

வாயிற்பக்கம் நிழலாடியது.

வேலை செய்யும் ஆயாதான். ஓகோ!

ஆனால் அவள் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்.

சித்திக்குப் பயந்து வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும் உள்ளூர பிரியம் உள்ளவள் என்று நினைத்தாளே.

மேலே யோசிக்கவிடாமல் அவன் அவள் அருகில் வந்தான். "உன்னை ஓங்கி அறையவேண்டும் போல ஒருகிறது. ஆனால் ஒரு பெண்ணை அதுவும் மனைவியை அடிப்பது கேவலம் என்பதால் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிறேன்" என்று சீறினான். "முதலில் சொல்... என் மகனுக்கு என்ன?"

அவனது கண்களில் ஜொலித்த சீற்றமும், அதுவரை அனுபவித்த மனவேதனையும், அவன் என் மகன் என்ற விதமும் அத்தோடு கூட அந்த மகனுக்கு என்ன என்பதுமாகச் சேர்ந்து கொள்ள, தாங்க மாட்டாமல் கைகளில் முகம் புதைத்து விம்மி அழுதாள் மாதுரி.

முகம் இறுக சில கணங்கள் மனைவியைப் பார்த்துக் கொண்டு நின்றவன், அவளைப் பற்றி நடத்தி அருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்தான்.

மனமற்றவன் போல, அவள் தலையில் ஒரு கையை வைத்தபடி அருகில் நின்றவன், அவளது அழுகை சற்றுக் குறையவும் மேஜைமேல் இருந்த 'ஜக்'கில் இருந்த நீரை, 'ஜக்'கின் மேலே கவிழ்த்திருந்த தம்ளரில் ஊற்றி அவளிடம் நீட்டினான். "இதைக்குடி."

அவள் தம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டதும் அவன் சில விவரம் சொன்னான். "மனம் வெறுத்து முன்பு நீ விலகிப் போன போது எப்படியோ ஆனால் இவ்வளவு நாள் கழித்து, கழுத்தில் வெறும் மஞ்சள் சரடும், கைகளில் ரப்பர் வளையலும், உடலில் மெலிவுமாக ஒரு பதினைந்தாயிரம் ரூபாய்க்காக நீ வந்து நின்ற பிறகும் நான் சும்மா இருப்பேன் என்று எதிர்பார்ப்பதற்கில்லை."

"பதினைந்தாயிரம் ரூபாய் அப்படி ஒன்றும் பெரிய தொகை இல்லைதான். ஆனால் மிகவும் சின்னத் தொகையும் அல்ல" திடீர் என்று அவ்வளவு பணத்துக்கு என்ன அவசரம்?"

"நீயாக எதையும் வெளிப்படுத்த விரும்பாததால் நான் துப்பு வைத்து அறிந்து கொண்டேன். பதினைந்து நாட்களாக

உன்னைப் பற்றிய தகவல்களை எனக்கு வந்து கொண்டே இருக்கின்றன.

"கண்ணனின் போட்டோவைப் பார்த்ததும் அவன் என் மகன் என்பதை அறிந்து கொண்டேன். அவனுக்கு ஏதோ மருத்துவத்துக்காக அலைகிறாய் என்பதும் தெரிந்தது.

"ஆனால் டாக்டரிடம் அவனது நோய் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. தொழில்முறை ரகசியக் காப்புப் பிரமாணம்; ஒரு நோயாளி பற்றிய விவரம் இன்னொருவருக்குத் தருவதற்கில்லை என்று என் ஆளிடம் கூறிவிட்டார்.

"இப்போது சொல் கண்ணனுக்கு என்ன வியாதி!" டைனிங்டேபிள் அடியில் இருந்து இன்னொரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்து கொண்டு சசிதரன் வினவினான்.

இதற்குள் பெரும்பாலும் சுதாரித்துக் கொண்டிருந்தாள் மாதுரி. கையிலிருந்த தம்ளரை மேஜைமேல் வைத்துவிட்டு மகனின் நோய் பற்றிச் சொன்னாள். இதற்கு மேல் அவனிடம் எதையும் மறைத்து பயனும் இல்லையே.

அவன் கவனத்துடன் கேட்கவும் பிள்ளையின் நோய் பற்றித் தொடக்கத்திலிருந்து எல்லாம் சொன்னாள். சொல்லி முடித்து விட்டுத் தயக்கத்துடன். "கண்ணன் எங்கே..." என்று கேட்டாள்.

"அவன் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறான்" என்று முகத்தில் அடித்தாற் போலப்பதில் வந்தது. "நீயும் இருக்க வேண்டிய இடத்திலேயே இனி இருக்கலாம். கிளம்பு" என்ற உத்திரவும் பிறந்தது.

பேசாமல் அமர்ந்திருந்தாள் மாதுரி.

இவன் வீட்டுக்குப் போக வேண்டும் என்கிறான். எப்படி முடியும்? பதினைந்து நாட்களுக்கு முன்பு கொடும் பாலைவனமாக இருந்தது. இப்போது காரணம் இல்லாமல் குளிர் நந்தவனமாகி விடுமா?

"மாதுரி..." என்றவன் குரலில் அழுத்தம் இருந்தது

சற்றுமுன் கண்ட அவனது சினம் உள்ளுரக் குளிர் பரப்ப மீண்டும் அந்த சினத்தைக் கிளப்பி விட்டுவிடக் கூடாது என்ற கவனத்துடன் அவள் சற்றுக் கொஞ்சுதலாகவே.... "நான்... நானே முன்போல... இதுவரை இருந்த மாதிரி..." என்று தொடங்கினாள் மாதுரி.

"நோ" என்று சசிதரன் ஒற்றைச் சொல்லில் மறுத்தான். "கவனி மாதுரி. கண்ணன் என் மகன். அவன் என் வீட்டில்தான் இருக்க வேண்டும். நீ அவனுடைய தாய். நீயும் அங்கேதான் இருந்தாக வேண்டும்" என்றான் தொடர்ந்து.

பிள்ளைக்காக நீயும் வா என்கிறான். அவன் எத்தனையோ பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அவளுக்குக் கண்ணன் மட்டும்தான் கதி. இந்த ஒரு பிள்ளையை அவளுக்கு விட்டுக் கொடுக்கக்கூடாதா? இதை என்ன சொல்லி எப்படிப் புரிய வைப்பது?

திரும்பவும் மேச வாயெடுக்கு முன் வேலைக்கார ஆயா உள்ளே வந்தாள். "அய்யா சொல்றாரில்லே, கிளம்பு தாயி பாரு, புள்ளைக்கு வந்திருக்கிறது மாபாதகம். தன்னந் தனியா நீ என்னத்த பண்ண முடியும்? உங்க சித்தி கூட கிளம்பிடுறாங்க..."

"ஓ சித்தி! சி... சித்தி திட்டுவாங்களே. நான் பாட்டில எப்படிப்போக முடியும் அவர்களைக் கேட்க வேண்..."

"ஒண்ணும் வேண்டாம்" என்று அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னாள் ஆயா, "யாம்மா, அந்தம்மாவுக்கு ஆண் பிள்ளைங்களையே புடிக்காது. அது அவங்க விஷயம். அதுக்காக நீயும் அப்படி இருக்கணுமின்னா முடியுமா? அவங்களுக்குக் கூட நீ ஊருக்குப் போய் வந்ததிலே இருந்து வேற யோசனைதான் நீ தனியா தூங்கமாட்டே. புருசன் கூடப் போயிட்டாலும் பரவாயில்லைன்னு ஒரு தரம் சொன்னாங்க. மத்ததை விடு. இப்ப உனக்கு புள்ளை முக்கியம். அதுக்கு வைத்தியம் முக்கியம், நீயா தனியா எதுக்குன்னு அலைவே?

அய்யா வெளி அலைச்சலைப் பார்த்துக்கிட்டா நீ புள்ளை கூட இருந்து அதை நல்லா பார்த்துகிடலாமில்ல?"

ஆயா கடைசியாக சொன்னது சரியாகத் தோன்றவும் மாதுரி சற்று யோசித்தாள்.

சசிதரன் ஆயாவிடம் பேசினான். "மாதுரி சற்று ஓய்வெடுக்கட்டும். நீ மேலே போய் மாதுரிக்கும் கண்ணனுக்கும் வேண்டியதெல்லாம் எடுத்து வை ஆயா" என்று அனுப்பினான்.

அவள் சென்றதும். "நம் பிரச்சினையைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் மாதுரி. இப்போது முக்கியம் கண்ணனின் சிகிச்சை. ஆயா சொன்னது போல நான் டாக்டர் மருந்து என்று வெளி வேலைகளைப் பார்த்துக் கொண்டால் நீ முழு நேரமும் கண்ணன் அருகில் இருந்து அவன் மனம் வாடாமல் பார்த்துக் கொள்ளலாம்... மற்றபடி என்னால் வேறு எந்த விதமான. உன் மனத்திற்குப் பிடிக்காத எதுவும் நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.... வேறு பல பெரிய டாக்டர்களையும் கலந்து கொண்டு, ஒரு பெரிய தனி மருத்துவமனையில் அவனை வைத்துப் பார்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த நேரத்தில் முக்கியமற்ற எதையாவது எண்ணிக் குழப்பிக் கொண்டு முரண்டு பண்ணாதே. கிளம்பு முதலில் இந்த டாக்டரிடம் நானும் கொஞ்சம் பேச வேண்டும். ஆயா பெட்டி அடுக்குமுன் போய் வரலாம் வா" என்று குரலில் கண்டிப்பு தொனிக்க அழைத்தான் சசிதரன்.

அவன் குறிப்பாய் கொடுத்த உறுதிக்கு மேல் மறுக்க முடியாமல், மறுத்தாலும் பயனில்லை என்பதும் புரிந்து கூட எழுந்தாள் மாதுரி. மேலும் மகன்தான் இப்போது முக்கியம்.

சசிதரனின் யோசனைகளை டாக்டர் உற்சாகத்துடன் ஆமோதித்தார். "எனக்குக்கூட சந்தானத்தையும் டி.எம். பானர்ஜியையும் 'கன்சல்ட்' செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணம்தான் ஆனால் அந்தச் செலவு மிசஸ் மாதுரிக்கு

தாளாது என்றுதான் சும்மா இருந்தேன். நல்ல வேளையாக சரியான நேரத்தில் நீங்கள் வந்து விட்டதால் இனிப் பணப்பிரச்சினை இல்லை என்று நினைக்கிறேன்... 'தன்வந்த்ரி' யில் தான் மிக நவீனமாக மிகமிக நுண்ணிய கருவிகள் இருக்கின்றன. செலவு அதிகம் என்றாலும் மிகவும் கண்டிப்பாக நடந்து கொண்டாலும் நோயாளியைக் கவனிப்பதில் அவர்களுக்கு நிகர் இல்லை." என்றார் அவர்.

இருவரும் விடைபெற்றபோது, முதல் தடவையாக மனத்தில் நிம்மதியோடு மாதுரியை வழி அனுப்பி வைத்தார் டாக்டர்.

அவ்வளவு நாள் அவளுக்கு துணை நின்ற சித்தி ரேவதிக்கு விவரம் தெரிவித்ததோடு சொல்லாமல் செல்வதற்கு மன்னிப்பும் வேண்டி ஒரு கடிதம் எழுதி சித்தி வந்ததும் கொடுத்து விடுமாறு ஆயாவிடம் தந்து விட்டுக் கணவன் குழந்தையோடு சென்னைக்குக் கிளம்பினாள் மாதுரி.

14

"டாக்டரிடம் சென்று திரும்பும் வரையிலும்கூட சசிதரன் கண்ணனை, மாதுரியின் கண்ணில் காட்டவில்லை. மகனைப் பார்க்க வேண்டும்போல் அவளுக்கு உடம்பெல்லாம் வலிப்பது போலக் குறுகுறுத்துக் கொண்டு வந்ததும் ஆனால் முன்னைப்போல முகத்தில் அடித்தாற்போல் ஏதாவது பதில் வருமோ என்ற பயத்தில் சிரமப்பட்டுப் பேசாமல் இருந்தாள் மாதுரி.

சசிதரனிடமிருந்து வந்த ஓரிரு ஓரக்கண் பார்வைகள் அவளது ஊக்கத்தை ஊறுதிப்படுத்த, பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்தாள்.

எப்படியும் மகனிடம் சென்றுதானே ஆகவேண்டும்?

கார் தமிழ்நாடு ஓட்டலுக்குள் செல்லவும் அங்கே தான் கண்ணன் இருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்து போயிற்று.

விழுந்தடித்துக் கொண்டு பிள்ளையிடம் ஓடிச் செல்ல அவள் கை கால்கள் பரபரத்தன.

மகனிடம் தனக்குப் பிரியம் அதிகம் என்பது மாதுரி அறிந்ததுதான். ஆனால் இந்த அளவுக்கு உடம்பின் ஒவ்வோர் அணுவும் துடிக்கும் என்பது அவளுக்கே வியப்புதான்.

'ரிசப்ஷனில்' ஏதோ சொல்லி டெலிபோனில் பேசி விட்டு வந்தது கண்ணில் பட்டதே தவிர கருத்தில் ஏதும் பதியவில்லை.

ரிசீவரை வைத்து விட்டு, ரிசப்ஷன் பெண்ணிடம் முறுவலித்து விட்டு வந்தவனோடு அதுவரை இருந்த விலகல் மாறி நெருங்கி அவன் வேகத்துக்கு நடந்தாள்.

அவன் கீழ்க் கண்ணால் நோக்குவதை உணர்ந்ததும் இரண்டடி பின் தங்கி விலகி வரத் தோன்றவில்லை. மகனைப் பார்க்கவும் இரண்டு வினாடி தாமதம் ஆகிவிடுமே.

அவனது அறையை அடைந்து அவன் கதவைத் திறக்கவும், அவன் மீது உரச நேர்வதைக் கூடக் கவனியாமல் அவசரமாக உள்ளே சென்றாள்.

கட்டிலில் அமர்ந்து, பஞ்சடைத்த பெரிய கரடி பொம்மையைக் கட்டிப் பிடித்தபடி முன்னே கிடந்த பல விளையாட்டு சாமான்களில் மூழ்கி இருந்தான் கண்ணன்.

தாயைக் கண்டதும் பச்சரிசிப் பல்காட்டிச் சிரித்து "அம்மா!" என்று பொம்மையைக் கீழே போட்டுவிட்டுக் கைகளை நீட்டினான்.

ஆவலுடன் ஓடிவந்து பிள்ளையைத் தூக்கி அணைத்துக் கொண்டாள் மாதுரி.

சில வினாடிகள் சென்ற பிறகுதான், அறையில் மற்றொரு பெண் இருப்பதைக் கண்டாள்.

'க்ரஷ்-இல் பணி புரியும் பெண்களில் ஒருத்தி!'

மாதுரியின் வியப்பைக் காணவும், "புது ஆள் என்றால் குழந்தை பயப்படுவான் என்று அவனைப் பார்த்துக் கொள்ள அழைத்து வந்தார்" என்று முறுவலித்தாள் அவள்.

"மிகவும் நன்றி" என்று கூறி, அவளிடம் ஒரு கவரைக் கொடுத்து அனுப்பி வைத்தான் சசிதரன்.

கதவை மூடிக் கொண்டு அவள் சென்றதும் மணிக்கட்டைத் திருப்பி கைகடிகாரத்தைப் பார்த்தான் "ஒன்றே முக்கால் மணி நேரம் தாங்க முடியவில்லை. ஒன்றே முக்கால் வருஷம் அநியாயம் செய்தாயே" என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

இருப்பதே தெரியாத போது இழப்பின் தவிப்பு எப்படி வரும் என்று தோன்றியும் ஒன்றும் பேசாமல் மரமாகவே இருந்தாள் மாதுரி.

தெரிவிக்காமல் எப்படி இருக்கலாம் என்று வேறு வழியில் மடக்கினாள் சமாளிக்க வழியில்லை...

ஆனால் பதில் கூறும் அவசியத்தைக் கண்ணன் தவிர்த்தான்.

தந்தையின் குரலைக் கேட்டதும் ஆவலுடன் திரும்பிப் பார்த்தவன். "அப்பா!" என்று அவனிடம் தாவவும் மாதுரி பிரமித்துப் போனாள்.

மதியம் இரண்டு மணிக்கு ஆயா பிள்ளையை அழைத்துப் போனதாகக் 'க்ரஷ்'ஷில் சொன்னார்கள்.

ஒரு மூன்று, மூன்றரை மணி நேரம் சசிதரன் மகனோடு கழித்திருப்பானா? பிறகுதான் அங்கே இருந்தானே.

இந்த மூன்று மணி நேரத்தில் அவனோடு பழகி 'அப்பா' என்று அவனிடம் தாவுகிறானே பிள்ளை? அதுவும் அவளிடமிருந்து!

மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டு, "இரத்த பாசம்" என்று கேலிக் குரலில் கூறி மகனிடம் முறுவலித்தான் சசிதரன்.

அப்பா, உய்ய தூக்கு," என்ற மகனிடம் கட்டளைக் கிணங்க, அவனைச் சசிதரன் உயரே தூக்கிப் போட்டுப் பிடிக்கவும் இருவரும் இணைந்து நகைக்கவுமாக இந்த விளையாட்டை உள்ளூரப் பொறுமலுடன் பார்த்துக் கொண்டு நின்றாள் மாதுரி.

இப்படித் துக்கிப் போட்டுப் பிடித்தால் கண்ணனுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் மாதுரிக்குத்தான் பயம் விட்டு விடுவோமோ. விழுந்து விடுவானோ என்று அதிலும் இந்த மாதிரி வியாதி என்று ஆனபின் பலமாகத் தூக்குவது கூட கிடையாது.

இவனுக்கு என்ன தெரியும். அலட்சியமாகத் தூக்கி வீசுகிறான். மேலே மட்டும் விசிறி இருந்திருந்தால் இடித்து அது வேறு அடிபட்டிருக்கும்...

தறிகெட்டு ஓடிய எண்ணங்களுக்குப் பிடிவாதமாய் கடிவாளமிட்டாள் மாதுரி.

உள்ளூர ஒரு நியாய புத்தி உடையவள் என்பதால் கணவன் பிள்ளைக்கு மிகவும் கவனத்துடனேயே விளையாட்டு காட்டுவதையும் கண்டு கொள்ள முடிந்தது. தனக்கு மட்டும் உரியவனாக எண்ணியிருந்த பிள்ளை தகப்பனிடம் அதே சொந்தத்துடன் பழகுவது கண்ட தன் மனம் அசூயை கொள்வதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

மனதை வேறு புறம் திரும்பும் வழியாக, அங்கே கிடந்த விளையாட்டுச் சாமான்களை எடுத்து அடுக்கி வைத்தாள். கண்ணனுக்குச் சில துணிமணிகளும் இருந்தன, கண்ணன் நனைத்திருந்த துணிகளைப் போட்டு வைத்திருந்த பாலிதீன் பைகளும் ஒன்றினுள் எடுத்து வைத்தாள்.

அதற்குள் விளையாட்டு நிறுத்திவிட்டுச் சசிதரனும் வந்தான்.

இருவருமாகச் சாமான்களை எடுத்து வைத்தனர்.

அறைக்குரிய பில்லுடன் பணியாள் ஒருவன் வந்து சேர்ந்தான்.

ஓட்டல் கணக்கை முடித்துவிட்டு, கண்ணனுக்குப் ஃப்ளாஸ்கில் பால் மட்டும் வாங்கி எடுத்துக் கொண்டு மூவருமாகக் காரில் கிளம்பினர்.

கொஞ்ச நேரம் அதோ லைட், இதோ டாக்சி என்று பார்த்துக் கொண்டிருந்த கண்ணன் விரைவில் தூங்கி விட்டான்.

அப்போதும் புதிதாக கிடைத்த அப்பாவை விடவில்லை.

தந்தையின் மடியில் தலை வைத்து, தாய் மடியில் கால் வைத்து சுகமாக உறங்கினான்.

லேசாக முறுவலித்து "பாம்பர் பாலம்" என்றான் சசிதரன்.

லேசாக குளிர தொடங்கியிருந்ததால், மெல்லிய டவல் கொண்டு மகனை மூடி விட்டுக் கொண்டிருந்த சாக்கில் மாதுரி பதில் ஏதும் சொல்லவில்லை.

ஆனால் அவர்கள் இருவருக்கும் இடையே இருப்பது வெறும் ஜலசந்தி அல்ல; இந்து மகா சமுத்திரம் என்று நினைத்தாள்.

இரவு ஒன்பதரை மணிக்கு திருச்சியை அடைந்தார்கள். ஒரு பெரிய ஓட்டலில் லேசான உணவு அருந்தி விட்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

சசிதரன் காரை விரைவிலேயே ஓட்டினான்.

இரவு ஒரு மணிக்குள்ளாக விழுப்புரம் வந்து சேர்ந்தது.

அங்கே ஓர் ஓட்டலில் ரூம் எடுத்தான் சசிதரன்.

"காலை ஐந்தரைக்கு எழுப்பச் சொல்லியிருக்கிறேன். ஆறுமணிக்கெல்லாம் கிளம்பிவிட வேண்டும். கண்ணன் அருகில் அந்தக் கட்டிலில் நீ படுத்துக் கொள்" என்று கூறி

அடுத்த கட்டிலில் வெளிப்புறமாகத் திரும்பிப் படுத்து விட்டான் சசிதரன்.

அதன் பிறகு அவனிடம் அசைவு இல்லை.

ஒட்டிப் போடப்பட்டிருந்த கட்டில்களைப் பார்த்தபடி அசையாமல் நின்றாள் மாதுரி.

வரப்போகும் சென்னை வாழ்வை சூசகமாகக் காட்டுகிறானா.

ஆனால் அங்கே சென்னையில் இருப்பவர்கள்...

அவள் மேலே யோசிக்குமுன். "படுத்துத் தூங்கு மாதுரி. நாளைக்கே சென்னை ஸ்பெஷலிஸ்டுகளையும் பார்த்துவிட வேண்டும் என்று இருக்கிறேன் அவர்களிடம் 'எமர்ஜென்சி அப்பாயின்மென்ட் ஃபிக்ஸ்' பண்ண ஏற்பாடு செய்திருக்கிறேன். ஒரு நாலு மணிநேரத் தூக்கமேனும் இல்லாவிட்டால் நாளை உன்னால் ஒன்றும் முடியாது. சும்மாவே... ஆமாம், கண்ணனுக்கு வைத்தியம் பார்ப்பது என்றால் உன் உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமா? இப்படி மெலிய விட்டிருக்கிறாயே. கண்ணனோடு உன்னையும் டாக்டரிடம் காட்டி ஏதாவது 'டானிக்' பார்க்க வேண்டும். அதற்குள் உடம்பை இன்னமும் மோசமாக்கிக் கொள்ளாமல் படுத்துத் தூங்கு" என்றான் குரலில் கண்டிப்புடன் சசிதரன்.

மறுபேச்சின்றி, கண்ணனின் மறுபுறம் படுத்துக் கொண்டவளுக்குத் தெருவில் சென்ற ஏதோ பஸ்சின் 'ஹார்ன்' ஒலி கேட்டது.

ம். இப்படியே படுத்துக் கிடக்க வேண்டியதுதான். இன்று தூக்கமே வரப்போவதில்லை என்று நினைத்தபடி மகனை லேசாக அணைத்துக் கொண்டவளுக்கு அடுத்துத் தெரிந்தது ஐந்தரை மணிக்கு அடித்த டெலிபோன் மணிதான்.

அவள் அவசரமாக எழுமுன் சசிதரன் எழுந்து விட்டிருந்தான்.

"பல்லை மட்டும் தேய்த்துக் கொள். குளியலை வீட்டில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது காபி வரும். கண்ணனுக்குப் பாலுக்கும் இட்லிக்கும் சொல்லியிருக்கிறேன். சரிதானா?" என்று வினவினான்.

வெறுமனே தலையாட்டிவிட்டு, பல்லைத் துலக்கச் சென்றாள் மாதுரி.

அவனது திட்டப்படி ஆறுமணிக்கே மீண்டும் பயணம் தொடங்கிவிட்டது.

காரை ஓட்டியபடியே சசிதரன் ஸ்டியரிங் வீலில் இருந்த கைகளை ஒரு கை மாற்றி ஒரு கையாக எடுத்து விரல்களை நீட்டி மடக்குவதைக் கண்டாள் மாதுரி.

அவள் திரும்பித் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்து 'என்ன' வென்று வினவினான் அவன்.

"இல்லை.... நேற்றிலிருந்து மணிக்கணக்காகக் காரை ஓட்டுவது கஷ்டமாகத் தெரிகிறதோ?" என்றாள் அவள்.

சட்டென அவனது பார்வை திரும்பி. அவள் மீது படிந்து, மீண்டும் சாலைக்கு மீண்டது. "இல்லை கஷ்டமாக இல்லை. காலையில் எழுந்தவுடனேயே ஓட்டுவதால் சற்று விரைப்பாகத் தெரிகிறது. அவ்வளவுதான்" என்று விளக்கினான்.

தாம்பரம் தாண்டியதுமே அவளுக்கு வயிற்றுக்குள் பிசையத் தொடங்கிவிட்டது.

இருபுறமும் பூச்செடிகளும், அடுத்த புல்வெளியுமான ஒரு நீண்ட கார்ப்பாதை வழியே வழுக்கிச் சென்ற கார் ஓர் அழகிய பங்களாவின் முன்னே சென்று நின்றது. யாரோ பணியாள். ஓடி வந்து கார் கதவைத் திறந்து விட்டு ஒதுங்கினான்.

இறங்கும் ஆர்வம் காட்டாமல், தோளில் பிள்ளையுடன் எதிரே வெறித்தபடி அவள் அமர்ந்திருக்கவும் சசிதரனின் முகம் கடுத்தது.

காரிலிருந்து இறங்கி மறுபுறம் வந்து மனைவியிடமிருந்து பிள்ளையை வாங்கினான். "உனக்கு பிடிக்காத மாதிரி எதுவும் நடக்காது என்றுதான் உறுதி தந்திருக்கிறேனே அப்புறம் என்ன தயக்கம்?" என்று அடிக்குரலில் சீறியவன், நிமிர்ந்து, "இறங்கி வா. இதுதான் நம்ம வீடு." என்று அழைத்தான்.

பிடிக்காதது நடக்காதாமா?

இரவு நேரங்களில் கள்ளனைப் போல இவன் தன்னுடைய அக்கா மகளின் அறைக்குச் சென்று திரும்புவது கூட அவளுக்குப் பிடிக்காததுதான்.

அதற்காக அதையெல்லாம் நிறுத்தி விடுவானாமா?

உள்ளுக்குள் புகைந்தபடியே காரைவிட்டு இறங்கினாள் மாதுரி.

15

மகனைக் காணாமல் பதறித் தவித்ததும் மீண்டும் கண்டதும் பிள்ளையின் வைத்தியம் பற்றிய திட்டங்களும், பிள்ளைக்குப் பிரியமான தகப்பனாக அவளுடைய கணவன் மீண்டும் அவள் வாழ்வில் புகுந்த விதமுமாக மாதுரிக்கு மற்ற விஷயங்கள் மறந்து போயிருந்தன. மறந்திருந்தன என்பதைவிட நினைவு வரவில்லை என்று கூறுவது மேல்.

ஆனால் அவனுடைய வீடு என்று ஒன்றைக் கண்டதும் அதில் வசிக்கக் கூடிய மற்றவர்கள், அவர்களின் உறவுகள் எல்லாம் நினைவு வந்துவிட அவளுக்கு மனம் கசந்தது.

இந்த பத்மினி பாவம் சின்னப் பெண் வெகுளியும் கூட மாமா பெரிய ஹீரோ என்று மயங்கி விட்டாள்.

தனலட்சுமியும் பாவம்தான். கொண்டான் சரியில்லாத கொடுமை.

ஆனால் சசிதரனைத் தான் எந்த விதத்திலும் நியாயப் படுத்த முடியவில்லை. அவனுடைய மனைவியாக அந்த வீட்டில் நுழைவது அவளுக்குப் பிடிக்கவும் இல்லை.

ஆனால் அவளது சொந்த விருப்பு வெறுப்புகளை விடக் கண்ணனின் நலம் முக்கியம். ஏதோ வாக்கு கொடுத்திருக்கிறான்.

அந்த வாக்கு எந்த விதத்திலும் மீறப்பட்டு விடாமல் முடிந்த அளவு தூரத்தில் ஒதுங்கி நிற்க வேண்டும்.

கண்ணன் குணமடைந்த பிறகு பழைய வாழ்வுக்கு அவனை அவளுடன் அனுப்ப மாட்டான் என்பது ஒரு பெரிய பயம்.

ஆனால் உடனடியாக பெரிய பிரச்சனை கண்ணனின் சிகிச்சை.

அது நலமடையும் வரை மற்ற எதையும் நினைத்து மனதை அலைபாய விடக்கூடாது என்று முடிவு செய்தாள் மாதுரி.

அது அவ்வளவு கடினமாகவும் இல்லை.

ஏனெனில் வேறு எதையும் கிண்டுவதற்கோ, கிளறுவதற்கோ தனலட்சுமி அங்கே இல்லை. பத்மினியும் இல்லை.

"இது அறுவடை மாதம். நேரில் சென்று கவனிக்கா விட்டால் ஐந்து பத்தை அப்படியே முழுங்கி விடுவார்கள். என்று அக்கா கிராமத்துக்குப் போய் விடுவார்கள்" என்று முகத்தில் ஒரு விதமான கிண்டல் சிரிப்புடன் கூறினான் சசிதரன்.

இப்படிச் சிரிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது என்று மாதுரிக்குப் புரியவில்லை. அதை விடவும் பத்மினியால் எப்படி கிராமத்தில் இருக்க முடியும் என்கிற ஆச்சரியம்தான் அதிகமாயிருந்தது.

அதற்கு அவன் பதில் சொன்னான். 'வீடியோ டெக் ஓர் ஐம்பது வீடியோ காசெட்டுகள் படைசூழத்தான் போயிருக்கிறாள். "கூடவே அவள் அப்பா வழிப்பாட்டனாரிடம் பத்துப் பதினைந்து நாட்கள் தங்கியிருப்பாள் ஒரே மகனின் ஒரே மகள் என்று இவளிடம் அவர்களுக்குப் பிரியம் அதிகம்."

பேத்தியின் எதிர்காலத்தைப் பற்றிய கவலையே இல்லாமல் என்ன மகா பிரியம் என்று அலட்சியமாக அழுந்த முடித்தடுத்தாள் மாதுரி.

அனாவசியமாக அவன் என்ன ஏது என்று கேட்கும்படி வைத்துக் கொள்ளக் கூடாது.

சசிதரன் முன்தினம் சொன்னது போல அன்றே இரண்டு 'ஸ்பெஷலிஸ்டு'களையும் சந்தித்தார்கள். மதுரை டாக்டரிடம் ரிப்போர்ட்டையும் காட்டினார்கள்.

இருவருமே ஒருவாயாய் விரைவிலேயே அறுவை சிகிச்சை செய்யும்படி அபிப்ராயம் கூறினார்கள்.

முதுகுத்தண்டில் அறுவை சிகிச்சை செய்வதில் பெரும் புகழ் பெற்றிருந்த டாக்டர் மணிகண்டன் கண்ணனுக்கு ஆபரேஷன் செய்ய ஒப்புக் கொண்டார்.

தன்வந்திரி மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டரும், கண்ணனுக்குத் தனியறையும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இத்தனை ஏற்பாடுகளுக்கும் இடையில் நாள் முழுவதையும் மகனோடு கழிக்கும் வாய்ப்பு மாதுரிக்குக் கிடைத்தது.

கண்ணன் பிறந்து ஒரு மாதம்-முப்பது நாட்கள் அனுபவித்த சுகம். அவன் பெரும்பாலும் உறக்கத்தில் கழிந்த இந்த நாளையிலேயே அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போவாள் அவள்.

இப்போது அவனது மழலைக் குரலும், சின்னச் சின்ன பேச்சுக்களும், சிரிப்பும் அருகிலேயே இருந்து பார்க்க

ஆனந்தமாக இருந்தது. சில சமயங்களிலேயே முரண்டு பிடித்து அழுதால் அதுவும் சங்கீதமாகவே ஒலித்தது.

கட்டாயமான அலுவலக வேலை நேரங்கள் தவிர சசிதரனும் பெரும்பாலும் கூடவே இருந்தான். வைத்தியம் தொடர்பாக பிள்ளையைப் பொறுப்பான தந்தையாக அழைத்துச் சென்றான். இந்த வயதில் மகன் ரசித்து பார்க்கக் கூடிய வீடியோ காசெட்டுகள், விளையாடக்கூடிய விளையாட்டுகள், பொம்மைகள் எல்லாம் வாங்கிக் குவித்தான்.

அவ்வளவு பெரிய உயரத்தை மண்டியிட்டு குறுக்கி அவன் மகனோடு விளையாடுவதைப் பார்க்க மாதுரிக்கு வேடிக்கையாக இருக்கும். பிள்ளையை மடியில் வைத்து கொண்டு புத்தகம், பஸில் என்று அவன் வெகு சீரியசாகக் கற்றுக் கொடுக்கும் போது மனதுக்கு இதமாகவும் இருந்தது. பழைய விஷயங்களைப் பேசாததோடு, தன் வாக்குறுதியை மீறும் முயற்சி எதுவும் அவன் செய்யாதது நிம்மதியைத் தந்தது.

வரப்போகும் அறுவை சிகிச்சை மட்டும் இல்லையென்றால் இதற்குமேல் வாழ்வில் எதுவும் வேண்டும் என்கிற எண்ணமே அவளுக்கு இல்லாது போயிருக்கும்.

ஆனால் அறுவை சிகிச்சை கட்டாயம் நடக்க வேண்டியிருந்தது.

அதற்கெனக் குறித்த நாளும் இரக்கமின்றி நெருங்கி நெருங்கி வந்து கொண்டே இருந்தது.

சில சமயங்களில், 'என் மனம் இப்படிப் பதறுகிறதே வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்ததோடு வேலை முடிந்தாற் போல இவன் நிச்சிந்தையாக விளையாடுகிறானே!' என்று மாதுரி நினைப்பதுண்டு.

ஆனால் ஒருதரம் விளையாடிக் கொண்டே மாடியில் தூங்கி விட்ட மகனை வெறித்தபடி அவன் அமர்ந்திருந்ததைக் காண நேர்ந்த போது அவன் மனதிலும் கவலை இருப்பதாகவும் அவளுக்குத் தோன்றியது.

கண்ணனைப் பற்றி அவனது வைத்தியம் பற்றி... என்று கண்ணன் சம்பந்தப்பட்டவை தவிர மற்றபடி அவரவர் சொந்த விஷயங்கள் பற்றிய பேச்சை இருவருமே தவிர்த்திருந்தால் ஒருவர் மனது பற்றி அடுத்தவர் அறிய வாய்ப்பில்லாமலே போயிற்று.

பன்னிரண்டு தினங்கள் இப்படிக் கழிந்து மறுதினம் அறுவை சிகிச்சை என்கிற நிலை வந்தது.

பிள்ளை பயந்து விடுவான் என்பது மட்டும் இல்லை யென்றால் இமைப் பொழுதுகூட தவறாமல் தன் இரு கரங்களுக்குள் அவனை இறுகச் சிறை வைத்திருப்பாள் மாதுரி.

எவ்வளவோ அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட போதும். "அவனை விடு மாதுரி." என்று சசிதரன் அவளை இருமுறை கண்டிக்கும்படி ஆயிற்று.

அன்று காலையிலேயே இருவருமாகக் கண்ணனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

பலவிதமான சோதனைகளும் நர்ஸ் சித்ராவும் இப்போது அவனுக்குப் பழகி விட்டபடியால் நர்சின் கையை பிடித்துக் கொண்டு சோதனை அறைக்குச் செல்வதற்குக் கண்ணன் தயங்கவில்லை.

மாலையில் கண்ணன் தூங்கும் போது அவளை விட்டு விட்டுக் கிளம்ப வேண்டும் என்றானதும் மாதுரி தவியாய் தவித்தாள்.

தூங்கி விழிக்கும்போது தாய் முகம் காணாமல் பிள்ளை கலங்குவானே! அவனை விட்டு விட்டு அவளால் எப்படி போக முடியும்?

ஆனால் அவளது ஆட்சேபனைகளை டாக்டர் காதில் போட்டுக் கொள்வதாகவே இல்லை. "மேடம், நீங்க அவனோடு இருந்தா உங்கள் 'டென்ஷன்' அவனுக்கும் தொற்றிக் கொள்ளும். இதற்காகவே ஆபரேஷன் நோயாளிகளின் நெருங்கிய உறவினரை இங்கே தங்க விடுவதே இல்லை."

"அத்தோடு நர்ஸ் சித்ரா அவனுக்குப் புதிய முகமும் இல்லை. கண்ணனை கவனிப்பதற்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கும் அவளோடு அவன் நன்றாகப் பழகிவிட வேண்டும் என்பதற்காகத்தான் தினமும் சோதனை பயிற்சி அத்தனைக்கும் கண்ணனுக்குத் துணையாக அவளையே அனுப்பியிருக் கிறோம். சித்ரா உங்கள் பையனை மிகவும் நன்றாக உங்களை விடவும் நன்றாக பார்த்துக் கொள்வார்."

"நீங்கள் நன்றாகத் தூங்கிவிட்டு...தூக்க மாத்திரை போட்டுக் கொண்டாவது நன்றாக தூங்கிவிட்டு நாளை காலையில் ஆறு மணிக்கு வந்து சேருங்கள்."

"மிஸ்டர் சசிதரன். நீங்கள் உங்கள் மனைவியை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். நாங்கள் உங்கள் பிள்ளையை நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்று 'விட்' வேறு அடித்து முடித்தார் அவர்.

நர்ஸ் இன்னும் கொஞ்சம் இதமாகப் பேசினாள்.

"கவலைப்படாமல் போங்கம்மா, எனக்கும் இந்த வயதில் ஒரு மகன் இருக்கிறான். அவன் வேறு இவன் வேறு என்றில்லாமல் கவனமாய்ப் பார்த்துக் கொள்கிறேன்" என்று உறுதி கொடுத்தாள்.

"அவன் நன்றாகவே இருக்கட்டும் சிஸ்டர்" என்றாள் மாதுரி அழுகையை அடக்கிக் கொண்டு.

முறுவலித்து, "இவனும் நன்றாகி விடுவான்" என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தாள் சித்ரா.

அதற்கு மேல் அங்கே நின்றுகொண்டு இருப்பதற்கில்லை. ஆனால் நீர்த் திரையிட்டிருந்த கண்களுக்குச் செல்லும் இடம் தெரியவில்லை.

நல்லவேளையாக அவளது நிலையை உணர்ந்தாற் போல சசிதரன் அவளது கரத்தைப் பற்றிக் கொள்ளவும்.. அவன் நடத்திச் சென்ற வழியே அவளால் தொடர்ந்து செல்ல முடிந்தது.

வீட்டில் பிரமை பிடித்தவள் போல அமர்ந்திருந்த அவளை எழுப்பி இரண்டுவாய் உண்ணச் செய்தான்.

சாப்பிடப் பிடிக்காவிட்டாலும், பட்டினி கிடப்பது முட்டாள் தனம் என்கிற அளவு புத்தியிருந்ததால் சிரமப்பட்டு கொஞ்சம் உணவை உள்ளே தள்ளினாள் அவள்.

ஒரு தூக்க மாத்திரையைக் கொடுத்து விழுங்க வைத்து எழுப்பிச் சென்று அவளது கட்டிலில் படுக்க வைத்தபோதும் அவள் மறுக்கவில்லை.

அவனுக்குப் பணிந்து கண்களை இறுக மூடிக் கொண்டு படுத்திருந்தவள் மாத்திரையின் சக்தியினால் விரைவிலேயே துயிலில் ஆழ்ந்தாள்.

சற்றுநேரம் அவள் அருகே நின்று கொண்டு இருந்து விட்டு சசிதரன் அவனது அறைக்குச் சென்று படுத்தான்.

இரவு இரண்டு மணிவரை வீடே அமைதியில் ஆழ்ந்திருந்தது.

ஒரு பெரிய கத்தரிக்கோல் தோட்டத்தில் செடி புதர்களை 'ட்ரிம்' செய்யப் பயன்படுத்துவது. அதைக் கொண்டு முகமூடி போட்ட ஓர் ஆள் கண்ணனை வெட்டப் போகிறார்...

அலறி அடித்துக் கொண்டு அவள் விழிக்கவும் வினாடியில் சசிதரன் அங்கே ஓடி வந்தான்.

இலக்கற்று எதிரே வெறித்தபடி 'வேண்டாம் வேண்டாம்" என்று மாதுரி கதறவும் விரைந்து அருகில் வந்து அவளது தோளைப் பற்றி பலமாக உலுக்கினான்.

"மாதுரி. இதோ பார். விழித்துக் கொள் மாதுரி."

அந்த உலுக்களிலும் அழுத்தமான குரலிலுமாக ஒருவாறு நனவுலகத்துக்கு வந்தாள் மாதுரி.

ஆனால் கவலை மறக்க மாட்டாமல், "பெ... பெரிய கத்தரிக்கோல். அதால் கண்....கண்ணனை...?" என்று கண்ணீர் வழிய இயம்பியவள் மேலே முடியாமல் வெடவெடுத்தாள்.

சட்டென அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் சசிதரன்.

ஒரு குழந்தை போல் அவளை வாரி எடுத்து ஒரு புறமாய் கிடந்த சோபாவில் அமர்த்தி. அவளைத் தன் மார்பில் சாய்த்து இருகரங்களால் இறுக அணைத்தான்.

அவளுக்கும் அந்தப் பாதுகாப்பும் கதகதப்பும் தேவை இருக்கவே அவன் மார்பில் அப்படியே ஒண்டிக் கொண்டாள்.

இருவருமே அதற்குமேல் தூங்கவில்லை. உட்கார்ந்த நிலை மாறவும் இல்லை.

கிழக்கும் வெளுத்து, கீழ்வானம் சிவக்கத் தொடங்கவும் ஒருவித பயத்தோடு அசைந்தாள் மாதுரி.

அவளை விடுவித்துவிட்டுக் கையைத் திருப்பிப் பார்த்தான் சசிதரன். "இன்னும் அரைமணி நேரத்தில் கிளம்ப வேண்டும் மாதுரி" என்று கூறி, அவள் எழுந்ததும் தானும் எழுந்து சோம்பல் முறித்தான் சசிதரன்.

மருத்துவமனைக்குச் செல்கிறபோது அவளது இளகிய முகத்தை ஒருதரம் பார்த்துவிட்டு அவன் சொன்னான்.

"நம் கண்ணனுக்கு சிகிச்சை செய்யும் டாக்டர் இந்தியாவில் மட்டுமல்ல. உலகம் முழுவதிலுமே புகழ் பெற்றவர் அதனால் ஆபரேஷன் வெற்றியாகத்தான் இருக்கும். கண்ணனுக்கு... கண்ணன் உயி...கண்ணன் நல்ல படியாக வீடு வந்து சேருவான் என்பதில், எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது" என்றான் ஆறுதலாக.

கணவனது வார்த்தைகளை மெல்லத்தான் கிரகித்துக் கொள்ள முடிந்தது மாதுரிக்கு, பிறகு, "அதில்லை.... அவன் கீழே விழுந்து சிராய்த்துக் கொண்டால் கூட எனக்குத் தாங்க முடியாது அவனைப் போய் அவனைப் போய்..." என்று விசித்தாள்.

காரை ஓட்டியபடியே ஸ்டியரிங் வீலில் இருந்து ஒரு கையை எடுத்து அவளது கையைப் பற்றி அழுத்தினான் சசிதரன்.

"ஷ் மாதுரி குழந்தை போல அழுவார்களா? காயம் பட்டால் ஈ.டி.சி ஊசி போடாமல் இருப்பாயா? ஊசி குத்துவது கூட வலிதான் என்றாலும் அது நல்லது என்பதால் கட்டாயமாக ஊசி போட்டு விடுகிறோம் இல்லையா? அது மாதிரி நினைத்துக் கொள். இந்த ஆபரேஷன் செய்து விட்ட பிறகு அவன் முன்னைப் போல ஓடியாடுவான் இல்லையா?"

அந்தக் கனிவிலும் கையழுத்திலுமாகத் தன் பெருங் கவலையைக் கொட்டினாள் மாதுரி. "மதுரை டாக்டர் ஒருதரம் சொன்னார்.... இந்தக் கட்டி தண்டுவடத்தில் சிறிது பாதித்திருந்தாலும் அவனது கை கால்களை இயக்கும் சக்தி அவனுக்கு இல்லாமல் போய் விடும். அதன் பிறகு அவனது உடலில் வளர்ச்சி இருக்குமே தவிர சுயமாய்க் கையைக் காலை அசைக்கும் சக்தி இல்லாமல் போய் ஒரு தாவரம் போல ஆகிவிடக் கூடும் என்றார் அதுதான் ரொ...ம்பவும் பயமாக இருக்கிறது" என்று நடுங்கினாள் அவள்.

இந்த கவலை சசிதரனுக்கும் இருந்தது.

டாக்டர் மணிகண்டன் இது பற்றி அவனிடம் தனியே எச்சரித்திருந்தார். ஆனால் அதை அவன் மாதுரியிடம் சொல்லாமல் மறைத்து வைத்தான். வராமலே போய்விடக் கூடிய ஒரு துன்பத்தை எண்ணி அவளும் வேதனைப் படவேண்டாம் என்று நினைத்தான்.

ஆனால் மதுரையிலிருந்தே இந்தக் கவலையும் அவளுக்கு இருந்தது என்று அறியாத விஷயம்.

எல்லோரையும் போலச் சாதாரண தம்பதிகளாக இருந்திருந்தால் மகனைப் பற்றிய கவலையும் பயத்தையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் தேறுதலும் ஆறுதலும் கூறி மனப்பாரத்தை ஓரளவேனும் குறைத்துக் கொண்டு இருக்கலாம்.

சற்று நேரம் பேசாமலே காரை ஓட்டிய சசிதரன் "அப்படி ஆகிவிடக் கூடும் என்றாரே தவிர அப்படி ஆகியே தீரும்

என்று சொல்லவில்லையே. நாம் நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கும். எனக்கென்னவோ ஒரு பாவம் செய்தறியாத ஒரு சின்னக் குழந்தைக்குக் கடவுள் அப்படி ஒரு வேதனையைக் கொடுப்பார் என்று தோன்றவில்லை" என்றான் இதமான குரலில்.

ஊகூம். கொடுக்கவே மாட்டார்தான் என்று அதையே தாரக மந்திரமாகப் பற்றிக் கொண்டது தாய் மனது.

மருத்துவமனையில் கண்ணனை நெருங்கிப் பார்க்க விடவில்லை. தூரத்தில் இருந்த ஒரு பார்வை மட்டும்தான் கிடைத்தது.

என்ன பெரிய, கண்டிப்பு., என்ன பெரிய மருத்துவமனை என்று பொறுமியவளைக் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து சமாதானம் செய்தான் சசிதரன்.

தியேட்டரில் ஆபரேஷன் நடக்க, வெளியே காத்திருக்க நேர்ந்த நேரம் முழுவதும் அவன் மனைவியின் கையை விடவே இல்லை விட்டிருந்தால் அவளால் தாங்கியருக்கவும் முடியாது. அந்த இடத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவனிடம் ஒட்டிக் கொண்டுதான் அவளும் அமர்ந்திருந்தாள்.

இந்த நேரத்தைத் தனியே தாங்கி விடலாம் என்று நினைத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று தோன்றியது அவளுக்கு இப்போதே மனம் இப்படித் தவிக்கிறது!

சுமார் இரண்டு மணி நேரம் சென்ற பின், டாக்டர் வெளிவந்து, "ஆபரேஷன் சக்சஸ் சசிதர். கட்டியை முழுமையாக அகற்றி விட்டோம்" என்று புன்னகை செய்த பிறகுதான் முழுசாக நல்ல மூச்சு எடுக்க முடிந்தது அவளுக்கு.

சசிதரன் நன்றி கூற, நன்றாக மூச்செடுத்துக் கொண்டு "அப்படியானால் கண்ணனுடைய கை, கால் எல்லாம் பழைய மாதிரி நன்...றாகி விடும் இல்லையா, டாக்டர்." என்று மாதுரி ஆவலோடு கேட்கவும் டாக்டர் யோசனையோடு அவள் பக்கம் திரும்பினார்.

"பாருங்கள் மிசஸ் சசிதரன் இப்போதைக்கு உங்கள் மகனின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒரு கட்டியை வேறுவிதமான பாதிப்பு ஏதும் இல்லாதபடி வெற்றிகரமாக அகற்றி விட்டோம். இனி அவன் உயிரோடு இருப்பான். அவ்வளவுதான் சொல்ல முடியும். இதற்கு மேல் எந்தவிதமான உத்திரவாதமும் கொடுக்கக் கூடிய நிலையில் இப்போது நான் இல்லை" என்றார் நிதானமாக.

"அ.... அப்படியானால்..." என்றவளின் வாயிலிருந்து வார்த்தைக்குப் பதில் காற்றுவர லேசாகத் தள்ளாடினாள் அவள்.

சட்டென அவளது தோளைப்பற்றி நிறுத்தி, "மணிகண்டன் கெடுதலாகவும் எதுவும் சொல்லவில்லை மாதுரி" என்றான் சசிதரன் அவசரமாக.

"நல்லதாகவும் சொல்லவில்லையே?" என்று பயத்துடன் திரும்பினாள் அவள்.

"கரெக்ட்" என்றார் டாக்டர். "நான் பொய்யான நம்பிக்கை தருகிறவன் இல்லை, சசிதர் இப்போதைக்கு உங்கள் மகன் விஷயமாக நல்லது கெட்டது எதையுமே சொல்வதற்கு இல்லை. இன்றைக்கு உங்கள் மகன் உடலைக் கண்டபடி அசைப்பது நல்லதல்ல. எனவே அசைய முடியாத நிலையில்தான் அவனை வைத்திருக்கிறோம். நாளைக்கு சுமார் இந்த நேரத்துக்கு, முடிந்த அளவு சீக்கிரமாகவே வந்து அவனைப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறேன்..." என்றவர் லேசாக முறுவலித்து "சாரி அதுவரை நீங்கள் சந்தித்துத்தான் ஆகவேண்டும்" என்று முடித்தார்.



பகலும் இரவுமாக அன்றைய தினம் முழுமைக்கும் சசிதரனின் கைப்பிடி மட்டும்தான் மாதுரியை புத்தி பிசகாமல் காத்தது எனலாம்.

பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கக்கூட அவளுக்குத் தோன்றவில்லை.

அதற்கெல்லாம் அப்பாற்பட்ட நிலை ஆற்றுவெள்ளம் அடித்துக் கொண்டு போகும் போது, ஆடை அணிகலன்களையா திருத்திக் கொண்டிருக்க முடியும்? கைக்குகிட்டிய ஒரே மிதப்புக் கட்டையாக கணவனின் கைதான் அவளுக்குத் தோன்றியது. அவள் அதை விடுவதாக இல்லை.

அவனும் அவளை ஒரு தொல்லைபோல் கருதி விளக்கவில்லை. ஒருவேளை அவனுக்கும் மனைவியின் அருகாமை தேவையாக இருந்ததோ என்னவோ?

டாக்டரின் ஆலோசனைப்படி தூக்க மாத்திரை போட்ட பிறகும் மாதுரியால் முன் இரவு அளவுகூடத் தூங்க முடியவில்லை. கண்ணயர்வதும் உடனே விழிப்பதுமாக இருந்தவளுக்கு, அப்படி விழித்த போதெல்லாம் சசிதரனிடம் அசைவு காணவும் அவனும் உறங்கவில்லை என்று மாதுரியால் ஊகிக்க முடிந்தது.

அவனைப் போலவே அவளுடைய மகனுக்காக இன்னொரு மனமும் துடிக்கிறது என்பதில் அவளுக்கு ஏதோ ஓர் ஆறுதல் உண்டாயிற்று. ஒருவருக்கு இருவராக வேண்டும் போது அந்தக் கடவுள் இன்னும் கொஞ்சம் கூடுதலாக கருணை காட்டமாட்டாரா, என்ன?

கூடவே அவனைப் போலவே துன்புற்றுத் துடிக்கும் அந்த இன்னொரு உயிரிடம் அவளுக்கு அனுதாபமும் உண்டாயிற்று.

ஆனால் இந்த ஆறுதலும் அனுதாபமும் தோன்றிய உடனேயே மறைந்துவிட மகனைப் பற்றிய பயமே விசுவரூபம் எடுத்து மிரட்டியது.

அதிகாலை ஐந்தரை மணியிருக்கும்.

இருவரும் விழித்துக் கொண்டுதான் இருந்தனர்.

மருத்துவமனைக்குக் கிளம்ப வேண்டும் என்பது தெரிந்ததும் எழுந்து கிளம்ப இருவருக்குமே ஒரே திகில்.

இனித் தள்ளிப் போடுவதற்கு இல்லை என்று சொல்லாமல் சொல்வது போல எழுந்து கடிகாரத்தைப் பார்த்தான் சசிதரன்.

குறிப்பு புரிந்தாற்போல மாதுரியும் தயக்கத்துடனேயே மெல்லப் புரண்டபோது டெலிபோன் மணி அடிக்கவும் அப்படியே உறைந்து போனாள்.

இந்த நேரத்தில் யார்?

தொழில் தொடர்பாகச் சசிதரனிடம் யாராவது தொடர்பு கொள்ளுவதென்றால் குறைந்தது ஒன்பது மணியாவது ஆகவேண்டாமா?

கண்ணனுக்குத்தான் என்னவோ என்று தோன்றிவிட, இமைக்கவும் முடியாமல் அச்சத்துடன் கணவனை வெறித்தாள் மாதுரி.

ஒரு நிதானத்துடன் சென்று டெலிபோனை எடுத்த சசிதரனின் கை ரிசீவரைப் பற்றிய அழுத்தத்தில் வெறுப்பது மாதுரியின் கண்ணில் பட்டது.

மனைவியின் பயந்த பார்வையை உணர்ந்தவன் போல முகம் காட்டாமல் லேசாகத் திரும்பி நின்று பேசினான். எதிர்முனையிலிருந்து வந்த சுருக்கமான பேச்சைக் குறுக்கிடாமல் கேட்டு விட்டு, "நன்றி" என்று மட்டும் கூறி டெலிபோன் கருவியைக் கீழே வைத்தான்.

ஓர் எட்டில் மனைவியை அணுகிக் குனிந்தவனின் கண்கள் பனித்திருந்தன.

அவளுக்கு இருபுறமும் கைகளை ஊன்றிக் குனிந்து அவள் நெற்றியில் லேசாக முத்தமிட்டு "கண்ணனுக்கு நன்றாகி விட்டது. கை கால்கள் எல்லாம்" என்றான். முதலில் தொடர்ந்து, "அவர் வருமுன்பே கண்ணன் நெளிந்து விழித்து அசைந்தால் சில சின்ன சோதனைகள் செய்து பார்க்கும்படி டாக்டர் மணிகண்டன் நர்சிடம் சொல்லியிருந்தாராம். பேசியது நர்ஸ் சித்ராதான். டாக்டர் சொன்னபடி செய்து பார்த்ததில் எல்லாம் 'பாசிட்டிவ்' என்று ஆகவே உடனே நமக்கு டெலிபோன் செய்திருக்கிறாள்" என்றான் மகிழ்ச்சியோடு.

தன்னை மறந்த ஆனந்தத்தில் மாதுரியின் கைகள் கணவனின் கழுத்தில் மாலையாய்க் கோர்த்தன. சற்றே எம்பி அவன் கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்து தன் மகிழ்ச்சியைக் காட்டினாள். அவளை உணர்ந்தாற் போல அவனும் அவளை அணைத்துக் கொண்டான்.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி சற்று நேரம் கிடந்தார்கள்.

அந்த அணைப்பில், ஒரு பெரும் சோதனையான நேரத்தைச் சேர்ந்து கடந்து விட்ட நிம்மதி இருந்ததே தவிர ஆண் பெண் என்கிற பாலுணர்வுக்குச் சற்றும் இடம் இருக்க வில்லை. ஆனால் சொல்லுக்கு எட்டாத சுகம். அத்தனை வலிகளையும் தாண்டி, பிள்ளை பிறக்கிற கடைசி வினாடி நேரத்து சுகம். அந்த சுகத்தில் கண் சொக்கி, தூக்கம் கூட வந்து விடும்போல இருந்தது மாதுரிக்கு.

சற்றுப் பொறுத்து, மூடியிருந்த அவளது கண்ணிதழின்மேல் உதடுகளைப் பொருத்தி, "கிளம்ப வேண்டும் மாதுரி" என்று சசிதரன் கூறியபோது அவளுக்கு அசையக்கூட மனமில்லை.

அப்போதும், உடம்பில் கட்டுகளுடன் கிடந்த மகனைப் பார்க்க மாதுரிக்கு வேதனையாகத்தான் இருந்தது. ஆனால்

அவனுக்கு இருந்த ஆபத்தான நோய் நீங்கிக் குணமடைந்து கொண்டு இருக்கிறான் என்று அறிந்திருந்ததால் கலவரப்படாமல் இருக்க முடிந்தது.

சிறுபிள்ளை ஆரோக்கியமான உடல்நிலை, நல்ல பராமரிப்பு என்று முக்கியமான மூன்றும் சேர்ந்து கொள்ள கண்ணன் வேகமாகக் குணமடைந்தான்.

மறுநாளிலிருந்து கண்ணனுடைய நர்சுடன் கூட மாதுரியும் சேர்ந்து மருத்துவமனையிலேயே தங்கிக் கொள்ள தலைமை டாக்டர் அனுமதி கொடுத்தார்.

கட்டியின் பாதிப்பால் கண்ணனின் நடையில் ஏற்பட்டிருந்த கோணலை நீக்குவதற்கான பயிற்சிகளை மூன்றாம் நாளே டாக்டர் மணிகண்டன் தொடங்கி விட்டார்.

கண்ணனுக்காகச் சசிதரன் மருத்துவமனையில் ஏற்பாடு செய்திருந்தது ஒரு 'மினி ஸூட்' படுக்கும் அறை குளியல் அறையுடன் உட்கார்ந்து பேச ஒரு சின்ன வராந்தாவும் இருந்தது.

'காண்டீ' னில் நல்ல சாப்பாடு தயார் செய்வது அறிந்ததால் உணவையும் அங்கேயே முடித்துக் கொள்ள முடிந்தது.

காலையில் அலுவலகம் செல்லுமுன்னரும், மாலை வீடு திரும்பும் போதும் சசிதரனும் மருத்துவமனைக்கு வந்து விடுவான்.

மகனோடு விளையாடிவிட்டு, காலை உணவை அங்கேயே வரவழைத்து உண்டுவிட்டு அலுவலகம் சென்றால் மாலை டிபன் கூட அங்கேதான்.

ஏதாவது விளையாட்டுச் சாமான், சாக்லேட்டுடன் வரும் தந்தையைக் காண்பதில் கண்ணனுக்கு மிகவும் சந்தோஷம்.

கண்ணன் மட்டுமின்றித் தானும் கணவன் வரவை ஆவலாகவே எதிர்பார்ப்பதை உணர்ந்தபோது மாதுரிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த இரணடு வாரங்களில் எவ்வளவு தூரம் கணவனைச் சார்ந்திருக்கப் பழகி விட்டாள்.

வேலைக்குப் போய் வந்ததோடு, கடைக்கண்ணி வேலைகளையும் செய்து, குழந்தையையும் தன்னந்தனியே கவனித்த காலம் வெகு காலத்துக்கு முந்திய பழங்கதையாக மனதிற்குக்கூட மறந்து மறையத் தொடங்கியது.

பழைய கதைகளை எண்ணிப் பார்க்க அவளுக்கு நேரமும் இல்லை.

மருத்துவமனையில் வேலை எதுவும் இன்றிச் சும்மா இருப்பதுபோலத் தோன்றினாலும், தனித்திருந்து மனதைக் குழப்பிக் கொள்ள மாதுரிக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

விழித்திருக்கும் நேரங்களில் கண்ணன் தன்னுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டாற்போலச் சற்று அதிகமாகவே சலுகை கொண்டாடினான். எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் தோன்றுகிற வயதாகையால் இதென்ன, அதென்ன என்ற ஓயாத கேள்விகள் வீசினான்.

அவன் தூங்குகிற வேளையில் கூடவே இருந்த நர்சின் இனிமையான பேச்சு. இதிலும் நர்ஸ் சித்ரா மாதுரிக்கு மிகவும் பிரியமான தோழியாகி விட்டாள்.

பிரிய மனமின்றி வீட்டில் மாமியாரிடம் விட்டு வரும் மகனைப் பற்றியும், பள்ளிச் செல்லும் மகளைப் பற்றியும் நிறையப் பேசுகிறவள். சசிதரன் வரும் சமயங்களில் குடும்ப மகிழ்ச்சிக்குக் குறுக்கே நில்லாமல் ஒதுங்கி விடுவாள்.

சசிதரன் வந்து செல்லும் இரு வேளைகளிலுமே வந்த உடனேயும், செல்லுமுன்னும் கண்ணனைத் தூக்கி முத்தமிடுவது வழக்கம்.

எப்போதும் 'அம்மாக்கு சாக்லேட்' என்று தாயோடு இனிப்பைப் பகிர்ந்து கொள்ளும் சிறுவன், திடுமென ஒரு நாள் 'அம்மாவுக்கு கிஸ்' எனவும் இருவரும் சற்று அதிர்ந்து போயினர்.

அப்...பா" என்று மகன் அதட்டி உந்தியதும் ஒரு சின்னச் சிரிப்புடன் சசிதரன் ஒற்றைப் புருவத்தை உயர்த்த மாதுரியின் முகம் லேசாகச் சிவந்தது.

பிள்ளைவிடப் போவதில்லை என்பதை உணர்ந்து தலையை லேசாகச் சரித்து, தன் சிவந்த கன்னங்களில் ஒன்றைக் கணவனுக்குத் திருப்பிக் காட்டினாள் மாதுரி.

அவற்றிலிருந்து வரும்போதும் போகும் போதும் மகனோடு மனைவியையும் முத்தமிடுவது சசிதரனின் வழக்கமாயிற்று.

ஒரு நாள் அம்மாவையும் தூக்கும்படி தந்தைக்கு உத்தரவிட்டான் செல்வன்.

"மகாப் பெரிய மனிதன் கட்டளை". நகைத்தபடி மாதுரியை அவன் சட்டெனத் தூக்கி விடவும் கண்ணன் கிளுக்கிச் சிரிக்க, மாதுரிக்கு உடம்பெல்லாம் கிளுகிளுத்தது.

அவசரம் காட்டாமல், மெல்ல மிகவும் நிதானமாக மனைவியை இறக்கியவனின் பார்வை மாறவும் மாதுரிக்குச் சட்டென மூச்சடைத்தது.

பார்வையை விளக்கிக் கொள்ள முடியாமல் சில வினாடிகள் அப்படியே நின்றவள், பெருமூச்செடுத்து "ந நல்லவேளை அப்பாவைத் தூக்கு என்று இவன் என்னை விரட்டவில்லை. அந்த மட்டும் பிழைத்தேன்" என்று அபிநயத்துடன் கூறியபடி மகனிடம் திரும்பி, "குட்டிக் கண்ணா. இன்று சித்ரா ஆன்ட்டி உனக்கு ஒரு 'ரைம்' சொல்லித் தந்தார்களே" அதை அப்பாவுக்குப் பாடிக் காட்டவில்லையே" என்று பேச்சை மாற்றினாள்.

ஒருதரம் மனைவியை ஆழம் பார்த்துவிட்டு, உதட்டோரம் முறுவலுடன், "ஆமாமாம். அப்பாவுக்குப் பாடிக் காட்டு கண்ணா" என்று மகனை கொஞ்சலானான் சசிதரன்.

மாதுரிக்கு முன்னை விட முகம் சிவந்து போயிற்று.

பல நாட்களுக்குப் பிறகு அன்று வெகு நேரம் மாதுரியால் தூங்க முடியவில்லை.

சசிதரன் இயல்பாக அவளைத் தூக்கியதும், அவனது பார்வைகளும் மீண்டும் மீண்டும் நினைவு வந்து அவளை என்னவோ செய்தன. இந்த மாதிரி உணர்வுகளுக்கெல்லாம் வாழ்வில் இடம் கிடையாது என்று இருந்தவள் இப்போது திகைத்தாள்.

இன்னும் இரு தினங்களில் கண்ணனுக்குத் தையல் பிரித்து வீடு செல்ல வேண்டும்.

அந்த வீட்டில் அவள் கழித்த கடைசி இரு இரவுகளும் நினைவு வந்தன. எப்போர்ப்பட்ட துணையாக இருந்தான்.

மகனைப் பற்றி அறிந்த முதல் நாளன்று அவன் ஆத்திரப்பட்டான் தான். பழி வாங்குவது போல ஒரு கொடும் தண்டனையையும் கொடுத்தான்.

ஆனால் அவனது தண்டனை மீறி அவள் அழுதபின் ஒரு தரம் கூட அந்தக் கடுமை காட்டினானில்லை. கடுமை காட்டாதது மட்டுமின்றி எல்லா வகையிலும் இதமாகவே நடந்து கொண்டான். ஆனால் இதமாக நடந்து கொண்டானே தவிர வேறு எந்த உரிமையும் எடுத்துக் கொள்ளவும் இல்லை.

அன்று 'கண்ணன் நன்றாகி விட்டான்' என்று அறிவித்த போது. அவளாகவே அவனை முத்தமிட்ட நேரத்தில் கூட அவன் அதை வேறு விதமாக பயன்படுத்தி கொள்ள வில்லையே.

அவளிடம் அந்த மாதிரி உணர்ச்சிகள் ஏதும் அவனுக்கு இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. அன்று சித்ராகூடக் கேலி செய்தாளே, "என்ன உங்களவர் பார்வையாலேயே உங்களைச் சாப்பிட்டு விடுவார் போல இருக்கிறதே" என்று.

ஆனால் ஒன்று.

அவளது பார்வையில் மாறுதல் தெரிந்த போதும் முன்னைப் போல அவளை மதியாத தன்மை அதிகம் இல்லை.

அவளது 'எண்ணங்களையோ, விருப்பத்தையோ சற்றும் மதியாத, அந்த ஓர் இரவும்கூட அவளுக்கு நினைவு வந்தது. எந்த விதத்திலும் அவளை மதியாத இரவு என்னுடையது; எடுத்துக் கொள்கிறேன். அதற்கு உன்னுடைய ஒப்புதலோ அனுமதியோ தேவையில்லை என்று அலட்சியப்படுத்திய இரவு.

ஆனால் இப்போது அவன் அப்படி இல்லை அவள் தடுமாறிப் பேச்சை மாற்றியபோது அதையும் புரிந்து மறுத்தானே.

இந்த இரண்டரை ஆண்டுகளில் சசிதரனும் மாறியிருக்கலாம் இல்லையா?

ஆனால் அவன் மாறியிருந்தாலும் மாற்ற முடியாத பிசகு ஒன்று இருக்கிறதே.

பூக்குவியலில் பூநாகம்போல அந்த மறுநாள் இரவு அவளை வேதனைப்படுத்தியது.

ஆனால் அன்றுபோல, தனலட்சுமியின் வார்த்தைகளை அப்படியே ஒத்துக்கொள்ள இன்று அவள் மனம் மறுத்தது.

தனலட்சுமியே ஏதோ தவறாகப் புரிந்து கொண்டு இருக்க வேண்டும்; அன்றைய இரவுக்கு வேறு ஏதாவது விளக்கம் இருக்கும் என்று பிடிவாதம் பிடித்தது.

இல்லை, இல்லை, சசிதரன் அயோக்கியன் இல்லை.

மாதுரிக்கு அவளுடைய தாத்தாவைத் தவிர வேறு ஆண்களைப் பற்றிய அனுபவம் இல்லாதிருக்கலாம். ஓரளவு அறிந்த ரவீந்திரன் கோழையாக, மோழையாக கெட்டவனாகக் கூட இருந்திருக்கலாம். சித்தி ரேவதியின் கணிப்பில் ஆண்கள் அத்தனை பேருமே வஞ்சகர்களாகவே இருக்கலாம்.

ஆனால் மாதுரியுடைய கணவன் அந்த மாதிரிப் பாதகராக இருக்கவே முடியாது.

தனலட்சுமி சொன்னதுபோல வீட்டுக்காக மாதுரியை மணந்து, சொத்துக்காகப் பத்மினியை நெருங்கியவன் சசிதரன் என்றால் இந்த இரண்டரை ஆண்டுகளில் மாதுரியின் சம்மதக் கடிதம் வேறு கையிலிருக்கையில் அவன் ஏன் பத்மினியை மணக்கவில்லை? மணந்து கொண்ட பிறகு தானே அந்தச் சொத்து அவனது உரிமையாகும்? அப்படி பத்மினியை மணந்து கொள்ளாததில் இருந்தே அந்தக் கதை தவறு என்று தெரியவில்லையா?

ஆசை கொண்ட மனம் ஆவேசத்துடன் வாதித்தது.

வேண்டுமானால், நிச்சயமாகத் தெரிய வேண்டுமானால் அவனிடமே கேட்டு விடுவது.

நிச்சயமாய் அன்றைய இரவுக்கு குற்றமற்ற ஒரு விளக்கம் இருக்கத்தான் செய்யும் இருந்தே ஆகவேண்டும் கடவுளே கட்டாயம் இருக்கும்படி செய் என்று வேண்டியபடியே உறங்கிப்போனாள்.

ஆனால், மறுநாள் காலை வெளிச்சத்தில் அலுவலகத்துக்குச் செல்லத் தயாராக முழு வெண்ணிற ஆடையில் தன் வழக்கமான நிமிர்வும் கம்பீரமுமாக சசிதரன் காரிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்தபோது மறுபடியும் திகைத்துப் போனாள்.

"உன் அக்கா மகளுடன் உனக்குத் தவறான உறவு இருந்ததா?" என்று முகத்துக்கு நேரே இவனிடம் வெளிப் படையாக எப்படிக் கேட்க முடியும்?

தன் வழக்கப்படி முதலில் டாக்டரிடம் சென்று மகனைப் பற்றி விசாரித்து விட்டு சசிதரன் திரும்பி வருமுன் எவ்வளவோ

முகத்தைச் சரிப்படுத்திக் கொண்ட பிறகும் அவளது கன்னத்தில் சிறு முத்தமொன்றைப் பதித்துவிட்டு "என்ன" வென்று வினவினான் அவள் கணவன்.

சமாளித்து, "ஒன்றுமில்லையே" என்றாள் மனைவி.

தந்தையிடம் பெற்ற "சாக்கோபாரை" உரித்து ரசனையுடன் அதில் பற்களைப் பதித்த மகனிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, "ஒன்றுமே இல்லை என்றால் அதில் உண்மை என்று ஒன்றுமே இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது... கண்ணனைப் பற்றி இனிக் கவலைப்படத்தேவையில்லை என்று டாக்டர் சொல்லிவிட்டார் தெரியுமா? அல்லது நேற்று உன்னிடம் வேறேதும் சொன்னாரா?" என்று வினவினான்.

மகனுடைய ஆரோக்கியம் பற்றிய நிம்மதியில் தானாக முகம் தெளிய சித்ராகூட அப்படித்தான் சொன்னார்கள்" என்றாள் மாதுரி.

"பின்னே?"

திகைத்து நிமிர்ந்தவளிடம், "பின்னே இந்தத் தாமரை முகம் வாடுவானேன்?" என்று விடாமல் விசாரித்தான் சசிதரன்.

திருமணம் செய்தால்தான் பைத்தியம் தெளியும்; ஆனால் பைத்தியம் தெளிந்தால்தான் திருமணம் நடக்கும் என்று ஒன்று சொல்வார்கள்.

மாதுரிக்குக் கிட்டத்தட்ட அந்த மாதிரி நிலைதான்.

கணவனின் அன்பில் முழு நம்பிக்கை இருந்தால் அவனிடம் எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த விஷயம் பற்றித் தெளிவு ஏற்படாமல் எப்படி அவளால் கணவனின் அன்பில் உறுதி கொள்ள முடியும்?

சில வினாடி யோசித்தவள் சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள். அவனிடம் கேட்டுவிடுவது ஒருவேளை - பெரும்பாலும் அப்படித்தான் இருக்கும் - அவன் வேறு செய்யவில்லை என்றாகி, தன்னை இவ்வளவு கேவலமாக

நினைத்ததற்காகக் கோபம் கொண்டான் என்றால் கவுரவம் பாராமல் அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுவிட வேண்டியதுதான் என்று நினைத்தாள் மாதுரி.

வேறு யார் கால்! கணவனின் கால்தானே, திருமணத்தன்று அவன் கூடத்தான் அம்மி மிதிக்கையில் அவள் காலைப் பிடித்தான்!

எவ்வளவோ தைரியமாக முடிவு எடுத்த பிறகும் அவனிடம் நேருக்குநேரே அந்தக் கேள்வி கேட்க மாதுரிக்கு ஒருமாதிரி இருக்கவே, லேசாகத் திரும்பி, சன்னல் வழியே வெளியே பார்த்தபடி, "வந்து... வந்து, முன்பு அங்கே பங்களூரில்...."என்று ஒருவாறு தொடங்கினாள்.

அவளை மேலே பேசவிடாமல் சசிதரன் குறுக்கிட்டான். "முன்பே நடந்து முடிந்துபோன குப்பைகளை இப்போது கிளறுவானேன்? முன்பு என்ன நடந்திருந்தாலும் அது முடிந்து பலகாலம் இறந்தகாலம். வாழ்க்கை என்பது கடந்த காலம் அல்ல மாதுரி. வாழ்கிற நிகழ்காலமும் வாழப்போகிற எதிர்காலமும் தான் முக்கியம். வேண்டாத பழைய கதைகளை மறந்துவிடவும் கற்றுக் கொள் மாதுரி" என்றான் அழுத்தமான குரலில் அவசரமாக.

ஏன் இந்தப் பதட்டம்? அவனது பிழைபற்றிப் பேசிவிடப் போகிறாளே என்றா?

மீண்டும் மகளிடம் பார்வையைச் செலுத்தி, அவன் சாக்லேட்டிலும் பொம்மையிலும் மட்டுமே ஈடுபட்டிருப்பதை உறுதிசெய்து கொண்டு, மனைவியிடம் திரும்பினான் சசிதரன்.

அவளை நெருங்கி, மீண்டும் அவளைத் தன்புறமாகத் திருப்பி, ஒருவிரலால் அவளது முகத்தைத் தூக்கி, இதமான குரலில், "நானும் நீயும் கணவன் மனைவி, மாதுரி. கண்ணன் நம் குழந்தை; கடந்த காலக் குப்பைகளை அறவே ஒதுக்கி, இனிவரும் காலத்தில் நம் மகனுக்கு நல்லதொரு முன் மாதிரியாக வாழவேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறேன்.

அதற்கு உன் ஒத்துழைப்பு முழுமையாக கிடைக்குமல்லவா?" என்றான் குரலில் உணர்ச்சியோடு.

மாதுரிக்குக் கணவனின் பேச்சு புரிந்து போயிற்று. "ஒரு காலத்தில், பணத்தாசை வசப்பட்டு பிழை செய்தேன் தான். ஆனால் இனி மகனுக்கு நல்லதொரு தந்தையாக இருப்பேன்" என்கிறான்.

பிள்ளைப் பாசம் மனிதர்களை என்னவெல்லாம் செய்கிறது!

சும்மாவா சொல்கிறார்கள். 'திருமணமாகி ஒரு பிள்ளை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும்' என்று.

இந்தக் குப்பை விஷயம் சரியாகிவிடும் தான்.

ஆனால் பத்மினி?

அவளுக்குச் சசிதரன் செய்த பிழை பெரிதல்லவா? அதனால் பத்மினியின் வாழ்வே அழிந்துவிடாதா?

ஒரு வினாடி யோசித்தாள் மாதுரி.

ம்... பத்மினி ரசித்துப் பார்த்த வீடியோ படங்களும், உடுத்திய ஆடைகள், பேசிய பேச்சுக்களும் கூட அவள் அந்த மாதிரி வாழ்வை வீணாக்குகிற ரகம் இல்லை என்று கூறின முழுக்க முழுக்க இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்! எனவே அவள் எழிலாகத் தோளைக் குலுக்கிக் கொண்டு போய்விடுவாள். அத்தோடு... அன்று பெரும் பிழை நடந்தது என்றுதான் நிச்சயம்?

எனவே மாதுரி தன் குடும்பத்தைப் பற்றி நிம்மதியாகவே யோசிக்கலாம்.

சொத்து கைவிட்டுப் போனாலும் பரவாயில்லை என்று மகனுக்கு உதாரணமாக வாழ முன்வந்திருக்கும் கணவனைப் பாதி வழி சென்று எதிர்கொள்ளவேண்டியது அவளது கடமையில்லையா? பழசை ஒதுக்கிவிட்டு அவன் வரும்போது அவளும் அதை ஒதுக்கிவிடத் தானே வேண்டும். தன் சொந்த நலனுக்காக இல்லை என்றாலும் பெற்ற பிள்ளைக்காக.

பார்வையை உயர்த்திக் கணவனை நோக்கி, 'ஆமாம்' என்றாள் மாதுரி குரலில் உறுதியோடு.

சட்டெனத் தோளில் அவனது பிடி இறுகிப் போயிற்று. அடைப்பட்டிருந்த காற்றை ஒரு பெருமூச்சாக வெளியிட்டவன் "மிகவும் நல்லது மது" என்றான் நிம்மதியோடு.

விருக்கென நிமிர்ந்து, "தாத்தா... தாத்தா என்னை எப்போதும் அப்படித்தான் அழைப்பார்" என்றாள் லேசாகக் குரல் நடுங்க மாதுரி.

"நினைவு இருக்கிறது? மதுக்குட்டி என்பார். அதனாலேயே எப்போதும் உன்னை மனதில் நினைக்கையில் 'மது' என்றே தோன்றும். இன்று அதுவே வாயிலும் வந்துவிட்டது. ஆனால், உனக்கு ஒன்றும் ஆட்சேபனை இலலையே."

ஆட்சேபனையா? கன்னங்கள் பனிக்க "இல்லை" என்று மூலுவல் செய்தாள் மாதுரி.

அந்த அழைப்பிலேயே பழைய சந்தோஷங்கள் எல்லாம் திரும்பி வருகிற மாதிரி உணரத் தொடங்கி விட்டாள் மாதுரி.

கொடியவனாக இருந்த கணவன் திருந்திவிட்டான். கவலைக்கிடமாக இருந்த குழந்தையின் உடல்நிலை தேறிவிட்டது. ஒழுக்கம் உயர்வுமாக ஓர் எடுத்துக்காட்டான குடும்பமாக வாழப் போகிறார்கள்.

இதற்கு மேல் ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்?

தன்னந்தனியே பெரும் பொறுப்புகளைத் தாங்க மாட்டாமல் 'தாங்கி, புயலில் சிக்கிய கொடிபோலத் தவித்து வேதனை பட்டுப் பழகியிருந்த மாதுரிக்கு வேறு எதுவும் வேண்டும் போலத் தெரியவில்லை - அப்போது.'

சசிதரனிடம் வேறுபல மாறுதல்களையும் கண்டாள் மாதுரி; எல்லாமே மனம் குளிர வைத்த மாறுதல்கள்.

மகனோடு விளையாடுவது போல அவன் அறியாமல் செய்த செல்லக் குறும்புகள், விலகலே மனமற்றவைபோல அவள் மோனியில் படிந்த பார்வைகள், சிரிப்புகள்.... பரிசுகள்..

வீட்டுக்குச் செல்லும் நாளை ஓர் இனிய படபடப்புடன் வெகு ஆவலாக எதிர்பார்க்கத் தொடங்கினாள் மாதுரி.

"இன்னும் எத்தனை நாட்கள் இங்கே கட்டாயமாக தங்க வேண்டியிருக்கும்?" என்று தன் போக்கில் நர்ஸ் சித்ராவிடம் கேட்டுவிட்டு அவளிடம் நன்றாக மாட்டிக் கொண்டாள்.

"என்ன, என்ன, அவ்வளவு அவசரமா?" என்று கண்ணைச் சிமிட்டி, சிமிட்டி ஒரேயடியாய் கேலி செய்யத் தொடங்கிவிட்டாள் சித்ரா.

அன்று தையல் பிரித்து, எதற்கும் ஒருநாள் டாக்டர் பார்வையிலேயே கண்ணைத் தங்க வைத்து, மறுநாள் அனுப்புவதாக மணிகண்டன் கூறிவிட, அந்த மறுநாள் அதிகாலையிலேயே வந்துவிட்டான் சசிதரன்.

காலை ஒன்பது மணிக்கு, மருத்துவமனை ஆபீஸ் தொடங்கியதும் முதல் ஆளாகப் பணத்தைக் கட்டிவிட்டு எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு சசிதரன் குடும்பமே வீட்டுக்குக் கிளம்பிச் சென்றது.

பாதை ஓரத்துப் பூச்செடிகளும், பசிய புல்வெளியும் இவ்வளவு அழகென்று மாதுரி நினைத்தது இல்லையே.

காரில் இருந்து இறங்கியதும், பூச்செடிகளூடே பறந்த வண்ணத்துப் பூச்சிகளைக் கண்டுவிட்ட கண்ணன் "அம்மா பட்டாஃபை, அப்பா பட்டாஃபை" என்று அவற்றின் பின்னே ஓடத் தொடங்கினான்.

சசிதரனின் பார்வையில், ஒரு பணியாள் கண்ணனின் பின்னே சென்று அவனைக் கவனித்துக் கொள்ள ஒருவரை ஒருவர் பார்த்து பெருமிதமாக முறுவலித்தபடி இருவரும் படியேறி வீட்டினுள் சென்றனர்.

கணவன் பின் தொடர மாதுரி வீட்டினுள் ஓர் எட்டுஎடுத்து வைத்தபோது, சர்ரென்று வேகத்துடன் வந்த இன்னொரு கார். இவர்கள் வந்த காரின் பின்னே சட்டென 'பிரேக்' போட்டு நிற்கவும் சற்றுத் தயங்கி தயங்கி இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

"அட சனியனே, மரம் மாதிரி பார்த்துக் கொண்டு சும்மா நிற்கிறாயே? ஓடிவந்து கதவைத் திறவேண்டா, அடே முத்து, வந்து சாமான்களை இறக்கிவிட்டு வண்டிக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பு. மீட்டருக்கு மேலே ஒரு பத்து ரூபாய் போட்டுக் கொடுத்தனுப்பு" என்று உரக்கக் கூறியபடி, பணியாள் கதவைத் திறந்துவிட்ட பிறகு டாக்சியிலிருந்து இறங்கினாள் தனலட்சுமி.

"அக்கா, நீங்கள் எங்கே இப்போதே இங்கே..." என்று ஆச்சரியத்துடன் தம்பி கேட்கவும், "அடுத்த வாரம் தான் புறப்பட்டிருக்க வேண்டியது. நீ என்னவோ உங்களுக்கு சந்தோஷமான அதிசயம் காத்திருக்கிறது என்று எழுதி விட்டாயா. என்னால் அங்கே வினாடி நிற்க முடியவில்லை என்ன அதிசயம் தம்பி? நீ என் சொல்படி இரண்டாவது..." என்று பேசிக் கொண்டே போனவள், "அப்பா, அப்பா, ஃளு பட்டாஃபை" என்று ஆர்ப்பரித்த வண்ணம் ஓடி வந்த கண்ணனைக் கண்டதும் திகைத்து விழித்தாள்.

வீட்டினுள் ஆனந்தமாக இரண்டு எட்டு எடுத்து வைத்த மாதுரிக்கு தனலட்சுமியின் குரலைக் கேட்டதும் ஒரு மாதிரியாகிப் போயிற்று.

கணவனோடு அவள் விரும்பிய தனிமை அவனும் விரும்பியதுதான். இனி எந்த அளவு சாத்தியம்!

ஆனால் தனலட்சுமி அவளுடைய நாத்தனார், அதிலும் கொண்டவன் துணையற்ற பேதை.

கணவனின் துணை இல்லாத ஒரே காரணத்தால் எத்தனையோ துன்பங்களை அனுபவித்து அறிந்திருந்த மாதுரியே அவளை ஒதுக்குவது எவ்வளவு தவறு?

தன்னைத்தானே கடிந்து கொண்டபடி திரும்பி வந்தாள் மாதுரி.

ஆனால் வாயில் அருகே நின்றபடி சசிதரன் பேசியதால் தனலட்சுமியின் பார்வை கோட்டுக்கு சசிதரனால் மாதுரி மறைக்கப்பட்டிருந்தாள்.

கணவன் சற்று விலகியதும் முன்னே வந்து, நாத்தனாரை வரவேற்று உபசரிக்க எண்ணியவள். ஓடிவரும் வேகத்தில் பிள்ளை விழுந்து விடக் கூடாதே என்ற பயத்தில் மற்றதை மறந்து. "மெள்ளடா கண்ணா" என்று கணவனைத் தொட்டு விலக்கிக் கொண்டு முன்னே ஓடி வந்தாள்.

இவளைச் சற்றும் எதிர்பாராததால், அதிச்சியில் திறந்த வாயை மூடத் தோன்றாமல் வாய் பிளந்து நின்றாள் தனலட்சுமி.

குனிந்து மகனைத் தூக்கிய சசிதரன் பெருமையோடு "அதிசயம் எப்படி இருக்கிறது அக்கா?" என்று சிரித்தான்.

அதற்குள் டாக்சியின் மறுபுறம் வழியே ஒருவாறு இறங்கி வந்து சேர்ந்த பத்மினி "அய்யா, குட்டிப்பையன் இது யாரு மாமா?" என்று மழலையாக மிழற்றியபடி மாமனை நெருங்கி வந்தாள். மாதுரியைப் பார்த்ததும். "இவளா?" என்று முகத்தைச் சுளித்தாள்.

"ஊகூம் .... அத்தையிடம் இப்படிப் பேசுவார்களா? அவளிடம் உனக்கு என்ன கோபம்? நல்ல அத்தை. உன்னைவிட இரண்டே வயதுதான் பெரியவள். உன்னோடு

சிநேகிதியாய்ப் பழகக் கூடிய வயது, அழகான அத்தையும் கூட" என்று சின்னக் குழந்தையிடம் எடுத்துச் சொல்வது போலப் பேசினான் சசிதரன்.

கடைசி அடைமொழி பிசகாகிப் போயிற்று.

"ம்ம் நான்தான் அழகு" என்றாள் பத்மினி ஆத்திரமாக.

"சரி இரண்டு பேருமே அழகுதான். சூரியனும் சந்திரனும் போல" என்றான் மாமன் சமாதானமாக.

"நான்தான் சூரியன்" என்றாள் மருமகள் விடாமல்.

"நிச்சயமாய்!" என்று ஒத்துக் கொண்டான் தாய் மாமன். "அப்ப்...பா! என்ன சூடு?" என்று அவன் பாவனையுடன் சிரிக்கவும் மாதுரிக்கும் சிரிப்பு வந்து விட்டது.

என்ன சிரிப்பு என்று புரிபடாமல் இருவரையும் மாறி மாறி பார்த்தாள் பத்மினி. மாமனிடம் விளக்கம் கேட்க வாயைத் திறந்தவள், அவன் தன் மனைவியைப் பார்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டதும், கோபத்துடன் கைப்பையை எறிந்து விட்டு முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு தொம் தொம்மென்று தரையதிர நடந்து உள்ளே சென்றாள்.

பை திறந்து கொள்ள, பையிலிருந்த லிப்ஸ்டிக்பவுடர், காம்பாக்ட் எல்லாம் இங்கும் அங்கும் சிதறி ஓடின.

"அக்கா..." என்று சசிதரன் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன், "அடே மணி, எங்கேடா தொலைந்தாய்? வா, வந்து இதையெல்லாம் எடுத்துப் பையில் போடு. சின்னம்மா ரூமில் கொண்டு வை.... என்ன தம்பி. வந்ததும் வராததுமாய் இப்படிப் பண்ணிவிட்டாய்? பாவம் பிள்ளை அழப்போகிறாள்" என்றாள் தனலட்சுமி கோபமும் வருத்தமுமாக.

"அழுவதா? பத்மினியா? வீட்டுச் சாமான்களுக்கு ஆபத்தாய்க் கையில் கிடந்ததைத் தூக்கி எறிந்து ஆர்ப்பாட்டம் செய்வாளே தவிர அவளாவது அழுவதாவது?"

"இல்லை தம்பி அவள் அ...அது நீ சொல்வதும் சரிதான். அவள் தகப்பன் இருந்தும் இல்லாத குழந்தை. அடிப்பதற்கும் அணைப்பதற்கும் உன்னைத் தவிர அவளுக்கு யார் இருக்கிறார்கள்? மாமாவைப் பார்க்கப் போகிறோம் என்று குதித்துக் கொண்டு வந்தாள். நீயே மட்டம் தட்டினால் எப்படித் தாங்குவாள்?"

"என்னக்கா, ஒரு சின்ன கேலி..."

"சின்ன கேலிதான், ஆனால் செய்கிறவன் யார்? நீயில்லையா? அவள் தாங்குவாளா? உன்னை அவள் நினைக்கிறாள் என்று உனக்குத் தெரியாதோ? ஏதோ, அப்பாவுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை நீ மறக்காமல் இருந்தால் சரிதான்" என்று வருத்தமாகப் பேசி முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் தனலட்சுமி.

"ஷ்... என்னக்கா இது? உப்புப் பெறாத விஷயத்தைப் போய் இவ்வளவு பெரிது படுத்திக் கொண்டு... அப்பாவுக்கு கொடுத்த வாக்கை மறுக்கக் கூடியவனா நான்? அந்த மாதிரி கவலை உங்களுக்கு வருவதே தவறு பிரயாணத்தில் களைத்துப் போனீர்கள் போலத் தெரிகிறது. போய் நல்ல வெந்நீரில் குளித்துச் சாப்பிட்டுவிட்டு நன்றாக ஒரு தூக்கம் போடுங்கள் எல்லாம் சரியாகிவிடும்" என்றான் தம்பி தேறுதலாக.

நின்று இந்தப் பேச்சைக் கேட்கவும் முடியாமல், அங்கிருந்து அகன்று செல்லவும் முடியாமல் சுடுமணலில் நிற்க வேண்டிய கட்டாயம் போலத் தவித்தாள் மாதுரி.

மீண்டும் தனலட்சுமியின் மறைமுகப் பேச்சு அவளது மனத்தைக் கலக்கியது. சசிதரனின் வாக்குறுதி சாக்குப் பேச்சு மேலும் வயிற்றைக் கலக்கியது.

ஆனால் அவன் அவளிடம் ஓர் உறுதி கூறியிருக்கிறான். அவர்களுடைய மகனுக்கு முன் மாதிரியாக வாழப் போவதாகச் சொல்லியிருக்கிறான்.

அத்தோடு ஒரு பெண்ணின் பொறுப்பை ஏற்பது என்றால் அவளை மணந்துதான் ஆகவேண்டும் என்று இல்லை. தங்கை உன் பொறுப்பு என்று அண்ணனிடம் சொல்வது இல்லையா? அந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுப்பதும் பொறுப்பேற்பதுதானே. அந்த மாதிரியும் மாமனார் சொல்லியிருக்கலாமே.

உள்ளூர நடந்த இந்த வாதப் பிரதிவாதங்களுக்கு இடையே, மாதுரி தன் முகம் மாறாமல் காக்க வேண்டியிருந்தது.

இம்மென்றால் கண்டுபிடித்து விசாரிக்கிறானே.

திடுமென தனலட்சுமி தன்னை விளித்துப் பேசுவதை உணர்ந்து அவசரமாகக் கவனித்தாள். "அடி என் கண்ணா உன்னைத் திரும்பிப் பார்ப்பேனா என்று ஏங்கிக் கிடந்தேன். எப்படியோ வந்து சேர்ந்தாயே!" என்று கூறி மாதுரியின் அருகில் வந்து அவளது கரத்தைப் பற்றிக் கொண்டாள். தம்பியிடம் திரும்பி, "எப்படி இந்தத் தங்கத்தையும், பிள்ளையையும் எப்படிக் கண்டுபிடித்து கூட்டி வந்தாய் என்று சொல்லு..." என்றவள், தம்பி பேச வாயெடுக்கவும் "அல்லது நான் மாதுரியிடமே கேட்டுக் கொள்கிறேன். நீ போய்க் குளித்துவிட்டு, குளித்து ரெடியாகிவிட்டாய் போல் இருக்கிறதே, முதலில் ஆபீசுக்குக் கிளம்பு நேரமாகுது பார். ஆபீஸ் போனதும் முதலில் ஒரு போன் போட்டு காரியக்காரரிடம் "நல்லபடியாக வந்து சேர்ந்தோம். இங்கே கவலைப்படுகிற விஷயம் ஒன்றும் இல்லை. எல்லாம் நல்ல காரியம்தான்" என்று ஒரு வார்த்தை சொல்லு.

"...அதற்கு மேலே விவரம் வேண்டாம் தம்பி. மற்றதை நேரில் சொல்லிக் கொள்ளலாம். போனில் அரையும் குறையுமாகச் சொன்னால் பிறகு அண்டங்காக்கையாக வாந்தி எடுத்த கதையாக நம்முடைய கவுரவமே ஊரில் கெட்டுவிடும்... தம்பி, கொஞ்சம் சீக்கிரமாகவே கிளம்பிப் போ. அனேகமாக அவரே உனக்கு ஆபீசுக்கு போன் போட்டுவிடுவார். நாங்கள் திடுமெனக் கிளம்பினதில் அவருக்கு ஒரே கவலை... அட..

கிளம்பு சசி, நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேனில்லை?" என்று தன் உடன் பிறந்தவனை விரட்டினாள்.

அதற்குள் அங்கே வந்து நின்ற சமையல்காரர், "அய்யா காலையில் சாப்பிடாமல் சீக்கிரம் கிளம்பிப் போய்விட்டீர்களே. இப்போது எடுத்து வைக்கட்டுமா?" என்று பவ்வியமாக வினவினார்.

"ஊகூம். வேண்டாம் நாங்கள் மூவரும் நர்சிங் ஹோமிலேயே சாப்பிட்டு விட்டோம். நர்சிங்ஹோம் என்றதும் பயந்து விடாதீர்கள் அக்கா. கண்ணன்-என் பிள்ளைக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தது. இப்போது ஓ.கே. நீங்கள் அக்காவுக்கும், பத்மினிக்கும் பாருங்கள் சிவம்..."

"சசி, இதெல்லாம் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? புறப்படு என்றால் தாயமாடிக் கொண்டு நிற்கிறாயே."

"இதோ...இதோ கிளம்பிவிட்டேன்" அக்கா, மது மதியம் நான் வீடு திரும்ப வழியில்லை? மாலையில் முடிந்த அளவு சீக்."

"ஊகூம், சாயங்காலம் நீ கொஞ்சம் லேட்டாகவே வா. இன்றைக்கு நல்ல நாள். நான் மாதுரியையும் குழந்தையையும் கோவிலுக்குக் கூட்டிப் போய்விட்டு வந்து விடுகிறேன். ஏதோ இவ்வளவு காலம் கழித்துப் புதையல் மாதிரி ஒரு பிள்ளையோடு வந்து சேர்ந்திருக்கிறாள். வேற்காட்டுக்கும், வடபழனிக்கும் போய் திருஷ்டி கழித்து வருகிறேன்" என்றாள் தனலட்சுமி கரிசனத்துடன்.

கோவிலுக்குக் கணவன் மனைவி குழந்தை எனக் குடும்பமாகச் செல்ல வேண்டும் என்று தோன்றியது மாதுரிக்கு. இந்த நாத்தனார் அவளிடம் ஒரு வார்த்தை கலந்து கொள்ளாமல் தன் இஷ்டம்போலத் திட்டம் போடுகிறாளே என்று கொஞ்சம் எரிச்சலும் வந்தது. ஆனால் தங்கம், செல்லம் என்று உருகுவதைக் காண்கையில் பாவமாகவும் இருந்தது.

அவளைப் போலவே அவளுடைய கணவனும் நினைத்தான் போலும். "நான் வந்த பிறகு சேர்ந்து கோவிலுக்கு போகலாமே அக்கா" என்றான்.

"ச்சு, சொன்னால் உனக்குப் புரியவில்லையே தம்பி நீ என்னதான் சீக்கிரம் வந்தாலும் நீ வந்து கிளம்பிப் போவதானால் கட்டாயம் லேட்டாகி விடும். அதிலும் தாய்க்கும் பிள்ளைக்கும் திருஷ்டி கழிக்க நீ எதற்கு? நீ மெள்ள வா. போதும். ஆனால், இப்போது சீக்கிரம் கிளம்பு. காரியக்காரரின் மனைவி சரியான வம்பி. பண்ணை வீட்டுக் கதை பேசுவது- அதிலும் அதற்குக் கையும் காலும் வைத்துப் பேசுவது என்றால் அவளுக்கு அல்வா சாப்பிடுகிற மாதிரி, அவள் ஏதாவது கிளப்பி விடுமுன் நீ இரண்டு வார்த்தை பேசி நிறுத்தி விட்டால் தேவலை" என்றாள் தனலட்சுமி. அவள் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு பேசுவது நன்றாகவே தெரிந்தது.

லேசாகத் தோளைக் குலுக்கி, சிறு முறுவலுடன், மனைவியிடம் தலையசைத்து விடை பெற்றான் சசிதரன்.

அதே முறுவலு விடை கொடுத்து கணவனின் கார் கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்ற மாதுரியை வெறித்து நோக்கினாள் தனலட்சுமி.

அவளது மூளை வெகு வேகமாக வேலை செய்தது.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பாக அன்றொரு நாள் ஒருவரும் அறியாமல் வீட்டை விட்டு வெளியேறியதாக மாதுரி நினைத்தது ஒரு வகையில் சரியில்லை.

மாதுரியின் நடவடிக்கைகளை அவள் அறியா வண்ணம் தனலட்சுமி கவனித்துக் கொண்டேதான் இருந்தாள்.

இரவெல்லாம் தம்பி மனைவி துடியாய்த் துடித்ததையும், வாந்தி எடுத்ததையும்கூட, அவள் ஒரு குரூர நிம்மதியுடன் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

மாதுரிக்குத் தெரியாமலே பல வேலையாட்களை வேறு வேலை கொடுத்து அவளது வழியிலிருந்து அகற்றி உதவியும் செய்தாள்.

மாதுரி ஒருவாறு வீட்டைவிட்டு வெளியேறியதும் அவசரமாகத் தன் தம்பியின் அறைக்குச் சென்று பார்த்தாள்.

மேசை மேல் பெட்டியில் இருந்த நகைகளைக் கண்டதும் ஒருகணம் அவளது கண்களில் ஆசை வெறி பளபளத்தது. நகைகளை எடுத்துக் கொண்டு விஷயத்தை அடியோடு மறைத்து விட்டால் என்ன என்று யோசித்தபடி கடிதத்தை படித்துப் பார்த்தாள்.

அதில் இருந்த சேதி சசிதரன் அறிந்தாக வேண்டிய விஷயம் என்று தோன்றவும், மனமற்று, நகைகளைப் பழையபடி வைத்தாள்.

மாலையில் திரும்பி வந்து கடிதத்தைப் படித்த சசிதரன் அவசரமாக தமக்கையை அழைத்து விசாரித்தபோது "அய்யோ, காணோமா? அவள் சும்மா அவளுடைய அம்மா அப்பா அறைக்குள் கதவைப் பூட்டிக்கொள்ளுவாளே அதுபோல அங்கே இருக்கிறாள் என்றல்லவா நினைத்தேன். அது மாதிரி நேரத்தில் கூப்பிட்டாலும் மிகவும் கோபப்படுவாளே என்றல்லவா பேசாமல் விட்டு விட்டேன். அய்யோ, இப்போது கேவலமாய்ப் போயிற்றே.

"ம்... தம்பி, ஆனாலும் நேற்று அந்தப் பையன் வந்து போன பிறகு ஆளே மாறி விட்டாளப்பா, ராத்திரி முழுவதும் ஒரே புலம்பல்தான், என்னமோ... 'எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்து விடுகிறேன். உதறி எறிந்து விட்டு உங்களோடு கூட வந்து விடுகிறேன்' என்று ஒரே பிதற்றல். பாவம் அந்த பையனிடம் மிகவும் ஆசை வைத்திருந்தாள் போல... சேச்சே ஒன்றும் விசாரியாமல் நீ வேறு குழிக்குள் விழுந்தாயே?"

"ஆமாம் அந்தப் பையன் இங்கே இருக்கிறானா என்று விசாரித்தாயா?" என்று பொடி வைத்து ஊதி விட்டாள். அந்த ரவீந்திரனும் முன் தினம் அவள் ஒட்டுக்கேட்டதன்படி அதற்குள் கண்காணாமல் போயிருக்கவேண்டுமே என்று உள்ளூர வேண்டிக் கொண்டபடி.

வேகமாக வெளியே சென்று திரும்பிய சசிதரன் முன்னிலும் இறுகிய குரலில், "அவனும் போய்விட்டான்" என்று உரைத்த பிறகுதான் அவளுக்கு முழுமையாய் நிம்மதியாயிற்று.

பெண்ணுக்குப் பெண் பகையாக அவள் செய்த இந்த காரியத்துக்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று காலகாலமாய் வரும் 'நாத்தனார் புத்தி.'

அந்த வீட்டில் பிறந்து வளர்ந்து என் வீடு, என் கார், என் சகோதரன் என்று உரிமை பாராட்டி பழகிவிட்டபடியால் திருமணமாகி அவள் வேறுவீடு சென்றுவிட்ட பிறகும், இன்னொரு வீட்டை அவளுடையதாக ஏற்றுக் கொண்ட பிறகும்கூட அவள் பிறந்த வீட்டைத் தனது என்று சொந்தம் கொண்டாட இன்னொருத்தி வரும்போது இந்த நாத்தனார்களால் அதை ஒத்துக் கொள்ள முடிவதில்லை.

அட, நாய்க்கு லைசன்ஸ் தகடு மாதிரி கழுத்தில் ஒரு தாலியைக் கட்டிக்கொண்டு விட்டதால் மட்டும் என் வீடு இவளதாகி விடுமா? என் தம்பியிடம் இவளுக்கு அதிக உரிமை எப்படி வரும்? கிட்டதட்ட இருபது ஆண்டுகள் என்னுடையதாக இருந்தது; இதில் இன்று வந்தவளுக்கு ஏது உரிமை என்று நினைக்கத் தொடங்கி விடுகிற அற்ப புத்தி.

இந்த புத்தியைக் கொஞ்சம் விசாலப்படுத்தி இதே போலத் தாலி கட்டிக் கொண்டுவிட்ட ஒரே காரணத்தினால் இங்கொரு புதிய வீடு தனதாகி விடவில்லையா? இதே போலத்தானே நான் பிறந்து வளர்ந்த வீடும் புதியவளான தம்பி மனைவிக்கு உரியது ஆகும் என்று சற்று சிந்தித்தால் இந்த நாத்தனார் தொல்லையே இந்த உலகிலிருந்து மறைந்துவிடும்.

ஆனால் தனலட்சுமி அப்படி யோசிக்கவில்லை. எனவே தம்பி மனைவியைத் தன் பிறந்த வீட்டின் உரிமைக்காரியாக அவளால் ஒப்ப முடியவில்லை.

இன்னொரு காரணம் இந்த உரிமையை மாதுரி தானாக எடுத்துக் கொண்டு விடுவாளோ என்கிற பயம்.

சீருடன் வளர்ந்து, சிறப்பாகத் திருமணம் முடிந்து செல்வத்தை இழந்த கணவனும் கைவிட்டுச் சென்ற பின் மீண்டும் பிறந்த வீடு திரும்பியவளுக்கு அன்பான உறவினர்களால் பழைய உரிமைகள் இயல்பாகவே கிடைத்தன. தாயார் மறைந்ததும் வீட்டுப் பொறுப்பும் அதிகாரமும் தானாக அவளதாயிற்று.

கொத்துச்சாவி இடுப்பில் குலுங்க வேலையாட்களை ஆட்டிப் படைத்தபடி வளைய வந்த தனலட்சுமிக்கு இந்த உரிமை என்றாகிலும் பறிபோய் விடுமோ என்கிற பயம் எப்போதுமே உண்டு. அப்படிப் பறிபோய் விடாமல் இருப்பதற்காக அவள் ஒரு திட்டம் தீட்டியிருந்தாள்.

அவளுக்கு ஒரு மகள்-பத்மினி இருந்தாள். பத்து ஆண்டுகள் வயது வித்தியாசம் இருந்தபோதும் உரிய வயது வந்ததும் அவளைத் தம்பிக்குத் திருமணம் செய்து வைத்து வீட்டைத் தன் ஆதிக்கத்தின் கீழேயே வைத்துக் கொள்ள எண்ணியிருந்தாள்.

இதற்காகவே சசிதரனுக்கு வேறு பெண்ணோடு திருமணம் நடந்து விடாமல் மிகவும் எச்சரிக்கையோடு கண்காணித்து வந்தாள்.

அவளையும் மீறி வெளியூர் சென்ற இடத்தில் சசிதரன் திருமணம் செய்து கொண்டது அவளுக்கு ஒரு பெருத்த அடிதான்.

எப்படியோ அவளை விரட்டி அடித்துவிட்டு இரண்டரை ஆண்டுகள் 'அப்பாடா!' என்றிருந்தால் அவள் மீண்டும் வந்து நிற்கிறாளே! அதுவும் பிள்ளையோடு!

முன்பு தனக்கும் மாதுரிக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் தம்பியின் காதுக்கு எட்டி விட்டனவா என்று அறியத்தான் அவள் தங்கள் தந்தையைப் பற்றிப் பேசியது.

சசிதரன் பதிலிலிருந்து அது இல்லை என்று ஆனதும் தனலட்சுமியின் மனம் ஓரளவு அமைதியடைந்தது.

இல்லை, இன்னமும் எதுவும் ஒரேயடியாய் நாசமாகி விடவில்லை.

ஒரு தடவை அவளால் விரட்டிவிட முடிந்த முட்டாள் பெண்தானே. ஒரு தரம் செய்ததை இன்னொரு முறை செய்ய முடியாதா, என்ன?

முதல் இடைஞ்சலாகக் கூடக்கூட நின்ற தம்பியை அலுவலகத்துக்கு விரட்டி தன் வழியிலிருந்து அகற்றினாள்.



அடுத்து, தம்பி மனைவியோடு அமர்ந்து, ஆரோக்கியமாய் ஆலவல் போலக் காட்டித் தூண்டித் துருவினாள் தனலட்சுமி.

சந்தேகப்படுகிற இடத்தில்தான் எச்சரிக்கை இருக்கும்.

தனலட்சுமியிடம் ஒரு பரிதாபம் மட்டுமே கொண்டு இருந்ததால் மாதுரி எளிதாக அவள் வலையில் விழுந்தாள்.

கண்ணனின் நோய் தீர உதவி கேட்பதற்கு மட்டுமாகவே அவள் சசிதரனைத் தேடி வந்ததாக கூறவும் தனலட்சுமிக்கு வயிறு எரிந்தது.

சே இந்தப் பையன் ஆரோக்கியமாக இருந்து தொலைந்திருந்தால் இந்தத் தொல்லையே நேர்ந்திராது.

இந்த பிள்ளை உருவாகாமல் இருந்திருந்தால் நோய் சிகிச்சை என்று எந்த சங்கடத்துக்குமே இடம் இருந்திராது.

கொஞ்சம் கவனமாக இருந்த இந்த ஒரு நாள் உறவைத் தடுத்திருந்தால் இதில் எந்தத் தொந்திரவுக்குமே வழியில்லாமல் போயிருக்கும்.

தும்பைவிட்டு வாலைப் பிடிக்கிற கதையாக இப்போது அல்லல்படும்படி ஆகிவிட்டது.

ஆனால் வாலையேனும் பிடித்து முறுக்கி விரட்டி அடித்து விட வேண்டும்.

சசிதரன் உறுதி கூறியதைப் பற்றிச் சொல்லும்போது மாதுரிக்கே கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. இரண்டாம் தாரத்துக்கும் ஒப்புக் கொள்ளும் இந்தத் தாய். 'பின்னே என் மகளின் கதியென்ன?' என்று கேட்க மாட்டாளா?

அப்படி அவள் கேட்கும்போது, என்னென்ன சொல்லிச் சமாதானப்படுத்துவது என்று யோசித்து வைத்தாள். "பாருங்கள் அண்ணி தவறுவது இயற்கை. அதைத் திருத்தி கொள்ள விடாமல் தடுப்பது தப்பு. பத்மினி சின்னப் பெண். ஏதோ... எப்படியோ பிழை நேர்ந்திருக்கலாம். அதற்காக அவள் வாழ்வு முழுவதும் அரை ரொட்டி உண்ணும்படி செய்வது அநியாயமே... இப்போதெல்லாம் இதையெல்லாம் பெரிதாகப் பெரும்பாலும் நினைப்பதில்லை.... வேறு நல்ல பையனாகப் பார்த்து..." என்று ஏதேதோ சொல்லித் தனலட்சுமியைச் சமாதானப் படுத்த வேண்டும் என்று எண்ணினாள் மாதுரி.

கூடவே அப்படியே நீயே இன்னொருவனை மணந்து கொள்வதுதானே என்று கேட்டால் என்ன செய்வது என்ற கலக்கம் வேறு இருந்தது.

ஆனால் மகள் கதியைப் பற்றிய கவலை தனலட்சுமிக்குத் தோன்றவே இல்லாதது போல, "உறுதியா? உறுதி கொடுப்பது எளிது. அதை மீறுவது அதை விடவும் சுலபம். அப்படி மீறினாலும்தான் நீ என்ன மீண்டும் அவனைப் பிரிந்து சென்று விடவா போகிறாய்?" என்றும் சற்றும் எதிர்பாராத விதமாக கேட்கவும் திகைத்தாள் மாதுரி.

மீறுவானா?

உச்சந்தலையில் அடி விழுந்ததுபோல் இருந்தது மாதுரிக்கு. பிள்ளைக்கு எடுத்துக்காட்டாக என்று கூறி விட்டு

அதையும் மீறக்கூடும் என்று மாதுரி எண்ணிப் பார்க்கவே இல்லையே.

"மீறுவார் என்றா சொல்கிறீர்கள்? அவர் சொல் மாற மா...ட்டார் என்றுதான் நா...ன் நி...நினைக்கிறேன்" என்று உரைத்தபோது அவளது குரல் மிகவும் நலிந்து விட்டது.

தன் எக்களிப்பை வெகு சிரமப்பட்டு வெளியே காட்டாமல் மறைத்தாள் தனலட்சுமி.

"ச்சு" என்றாள் அலுத்துக் கொள்வதுபோல் "என் தம்பியின் சொல்லும் சத்தியமும் பற்றி எனக்குத் தெரியாதா? அத்தோடு அவனுக்கு இன்னொரு தைரியமும் இருக்குமில்ல? அவன் என்ன மாதிரி நடந்தாலும் பொறுத்துப் போக உனக்கு வேற போக்கிடம் இல்லை என்றும் அவனுக்குத் தெரியுமல்ல? என்ன பண்ணினாலும் பொறுத்துக்கிட்டு, நாய் மாதிரி அவன் காலடியில்தான் கிடந்தாகணும்? அத்தோட இப்போது அவன் உன்னை வசதிக்குப் பழக்கி விட்டானில்ல? சொல்லு, நானும் தான் கேட்கிறேன். உன்னால இந்தக் கார், பங்களா, கட்டின்டிருக்கிறாயே ஷிஃபான் இந்த வசதியெல்லாம் அனுபவித்துப் பார்த்த பிறகு முன்னை மாதிரி உதறிவிட்டுப் போக முடியுமா?" என்று கேட்டாள் தனலட்சுமி.

"வசதியாவது மண்ணாங்கட்டியாவது?' என்றாள் மாதுரி ஆத்திரத்துடன், "ஒழுங்கு நியதிக்கு மேல் எனக்கு எதுவும் பெரிதில்லை. முன்னைவிடவும் மேலாக என்னிடம் பிழைப்புக்கு ஒரு வழி இருக்கிறது. அது என்னையும் காப்பாற்றும். என் பிள்ளைக்கும் சோறு போடும். அவர் மட்டும் மீண்டும் ஒரு தரம் தவறு செய்தாலும் போதும், அதற்குமேல் நான் இந்த வீட்டில் இருக்க மாட்டேன்" என்று உறுதியான குரலில் அறிவித்தாள்.

தனலட்சுமி வேண்டியது அதுதான். அவள் சுற்றி வளைத்துப் பேசியதெல்லாம் மாதுரியை இந்த மாதிரி நிலைக்குக் கொண்டு வரத்தான்.

மீண்டும் விலகும் எண்ணத்தை விதைத்து விட்டவள் அதை அப்படியே நிலைத்திருக்க விட்டுவிட்டு வேறு பேச்சுக்குத் தாவினாள்.

"அடேயப்பா. அத்தைக்கு மீசை முளைத்தா சித்தப்பா என்கிற மாதிரி என்ன பேச்சு இது? எல்லாம் சசி தப்பு தண்டாவுக்குப் போனால்தானே அவன் நல்லபடியாக நடந்து விட்டால் வேறே தகராறு ஏன்? அதுவும் வைரம் மாதிரி ஒரு பிள்ளையை வேறு பெற்று வைத்துக் கொண்டு மாறி நடக்க அவன் என்ன அப்பேர்ப்பட்ட அயோக்கியனா? அப்புறம் அவன் ஒரு தகப்பனாக இருப்பதற்கே லாயக்கில்லே என்றல்லவா ஆகும்; ஊகூம் சசி ஒன்றும் அந்த அளவுக்கு அப்படி மோசமில்லை. அந்தப் பேச்சை விடு...ஆமாம், இவ்வளவு நேரம் பேசியாயிற்று. என் தம்பி பிள்ளையைத் தூக்கிப் பாராமலே சும்மா தூக்கினால் வருவானா? ம்... முதலிலேயே மிரண்டு விட்டால் பிறகு பிள்ளை ஒட்டாது... ஒன்று செய்யலாம். அவனுக்கு என்ன சாக்லேட் பிடிக்கும், சொல்லு" என்று விசாரித்தாள்.

சிரமப்பட்டு மன நிலையை சமனப்படுத்திக் கொண்டாள் மாதுரியும் "நட்சாக்லேட்டும், பைவ் ஸ்டாரும் அவனுக்குப் பிடிக்கும் அண்ணி" என்று முயன்று முறுவலித்தாள்.

"இதோ, வாங்கி வரச் சொல்லுகிறேன். மிட்டாயைக் கொடுத்துவிட்டுத் தூக்கினால் பிள்ளை அப்படியே ஒட்டிக் கொள்வானில்லை. இந்தப் பயல் முத்துவைக் கடைக்கு அனுப்பி வாங்கி வரச் சொல்கிறேன்" என்று கூறியபடி அறையைவிட்டு வெளியேறினாள் தனலட்சுமி.

மீண்டும் தோட்டத்திற்குள் ஓடிவிட்ட மகன் ஒரே ஆட்டமாய் ஆடி உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்ற யோசனையில் அவனை எட்டிப் பார்த்து வரலாம் என்று மாதுரியும் கிளம்பினாள்.

கண்ணனைப் பார்த்துக் கொள்ளும்படி சசிதரன் விழியால் பணித்த வேலையாள் அருகே நிற்க பத்மினி கண்ணனை மடியில் வைத்துக் கொஞ்சுவதைப் பார்த்ததும் உள்ளூர ஒரு நிம்மதியோடு மகிழ்ச்சியும் உண்டாயிற்று மாதுரிக்கு.

இந்த உறவு இப்படியே நல்லபடியாகவே வளரட்டும் என்று எண்ணி சந்தடியின்றி அவள் திரும்பிவர... "சின்ன பாட்டில் போதுமடா. இங்கே எல்லா மருந்துக் கடையிலும் கிடைக்கும். ஆனால் நாலு கடை அலைந்தேனும் கட்டாயம் வாங்கிவா. இல்லையென்றால் உதைப்பேன்" என்று தனலட்சுமி கூறுவது அவள் காதில் விழுந்தது.

"மருந்துக் கடையா?" என்று யோசித்தபடி வீட்டினுள் சென்றாள்.

சற்றுப் பொறுத்து மீண்டும் ஹாலுக்குள் வந்த தனலட்சுமியைக் கவனித்துப் பார்த்து ஓரளவு திருப்தியுற்று. "உடம்பு ஒன்றும் சரியில்லையா அண்ணி? மருந்துக் கடையில் என்ன மருந்து வாங்கி வரச் சொன்னீர்கள்?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

ஆனால் தனலட்சுமிக்குச் சட்டென முகம் வெளுத்துப் போயிற்று. "அ...அ...அது...அது சாக்லேட்டு... சாக்லேட்டு தான். இப்போதுதான் மருந்துக் கடையிலேயேதான் சாக்லேட், மிட்டாய், பிஸ்கட், சோப்பு, ஷாம்பூ எல்லாம் விற்கிறாளே, அங்கேயே வாங்கி வா என்று அனுப்பினேன். அவ்வளவுதான் அவ்வளவேதான்" என்று திக்கித் திணறி ஒருவாறு சமாளித்து முடிக்கவும் மாதுரிக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று.

வியந்த பார்வையுடனேயே, "உங்கள் தம்பி சொன்னது போல் பயணத்தால் ரொம்பவும்தான் களைத்துப் போய் விட்டீர்கள் போலத் தெரிகிறது. நான் வேறு இவ்வளவு நேரம் வளவளத்து விட்டேன், அவர் சொன்னது போல முதலில் நல்ல வென்னீரில் நன்றாகக் குளித்து விட்டு வாருங்கள். சாப்பிட்டு

விட்டுக் கொஞ்சம் ஓய்வு எடுங்கள். பிறகு, மற்றதைப் பார்க்கலாம்" என்று உபசரித்தாள்.

ஆனால், என் வீட்டிலேயே என்னையே உபசரிக்கிறாயா என்று காந்தியது தனலட்சுமிக்கு. காட்டிக் கொள்ளாமல், "இல்லை, முத்து வந்த பிறகு குளிக்கப் போகிறேன்... அவன்... முத்து பொல்லாத பயல் கணக்கில் ஏமாற்றப் பார்க்கலாம்" என்றாள்.

"பரவாயில்லே அண்ணி, கணக்கை உடனே கேட்டால் தானா? அவன் வர எவ்வளவு நேரம் ஆகுமோ? அதுவரை நீங்கள் காத்திருப்பானேன். நீங்கள்... பாட்டில் குளித்துவிட்டு வந்து அப்புறமாய்க் கணக்கு கேட்டால் போகிறது" என்று முறுவல் செய்தவள், "அல்லது எவ்வளவு கொடுத்தீர்கள் என்று சொல்லுங்கள். நானே பில்லையும் வாங்கி வந்ததையும் சரிபார்த்து விடுகி..." எனுமுன் "வேண்டாம் வேண்டாம்" என்று தனலட்சுமி அவரசமாகக் குறுக்கிட்டாள்.

மாதுரியின் கண்கள் மேலும் விரியவும், "ஹிஹி... நீ வந்து பாக்கெட்டை எல்லாம் பிரிக்க வேண்டாம்... வந்து இந்த முத்து ஒரு மாதிரி பையன். நீ ஏதாவது கேட்டு, அவன் எடுத்தெறிந்து பேசிவிட்டால் அசிங்கம் அப்புறம் வேற ஒரு வேலைக்காரன் உன்னை மதிக்க மாட்டான் அதனால்தான்... இந்தக் கணக்கு கிணக்கெல்லாம் நானே பார்த்துக் கொள்ளுகிறேன். அவன் வாங்கி வருவதை அப்படியே மேசைமேல் வைக்கச் சொல்லு" என்று கூறி ஒரு தரம் வாயில்புறம் எட்டிப்பார்த்துவிட்டுப் "போனால் போன இடம் இந்த கழுதைக்கு" என்று முணுமுணுத்தபடி உள்ளே சென்றாள் தனலட்சுமி.

அவள் உள்ளே சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பிவிட்டான் பையன்!

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "அம்மா... ஊகூம் பெரியம்மா எங்கேம்மா?" என்று மாதுரியிடம் கேட்டான்.

வினாடியில் தனலட்சுமியைப் பெரியம்மா ஆக்கிய அவனது சாதுரியம் மாதுரியிடம் புன்னகையை வரவழைத்தது.

முன்பானால் தனலட்சுமியை 'அம்மா' என்று பத்மினியைச் 'சின்னம்மா' என்று அழைத்திருப்பார்கள் இப்போது இடையில் ஒருத்தி வந்ததும் வயதுக் கணக்குப்படி அம்மா 'பெரியம்மா' ஆகி இவள் 'அம்மா' ஆகிவிட்டாளாக்கும்! கண்ணனுக்கு ஒரு தங்கை பிறந்தால் யாரைச் 'சின்னம்மா' என்று அழைப்பது என்று திண்டாடி விடுவார்கள் என்று உள்ளூர நகைத்தபடி, "அண்ணி குளிக்கப் போயிருக்கிறார்கள். நீ எல்லாவற்றையும் மேசைமேல் வைத்துவிட்டுப் போவாயாம், அண்ணி சொன்னார்கள்."

"நீங்களே கொஞ்சம் கணக்குப் பார்த்து மீதியை வாங்கிக் கொள்ளுங்களேம்மா; இப்போ பெரியம்மாவும் சின்னம்மாவும் வந்திட்டதாலே இன்னும் கொஞ்சம் மீன் வாங்கப் போறதுமின்னு சமையல்காரய்யா கூப்பிட்டாங்க, நான் போவணும்" என்று சற்று கெஞ்சுதலாகக் கேட்டான் முத்து.

இவனைப் போய் ஏதேதோ சொன்னார்களே, என்று எண்ணியபடி பில்லையும் பணத்தையும் வாங்க கை நீட்டினாள் மாதுரி.

அதற்குள், ஈர உடலில் அவசரமாக சுற்றப்பட்ட சேலையுடன் வேகமாக உள்ளே வந்த தனலட்சுமி குறுக்கே கை நீட்டி முத்துவிடமிருந்து பில்லைப் பிடுங்கிக் கொண்டாள்.

இருவரும் ஆச்சரியத்துடன் நோக்கவும், "கடைக்கு மூன்று தெரு தாண்டிப் போக வேண்டும். அதற்குள் எப்படியடா திரும்பி வந்தாய்" என்று ஓங்கி ஓர் அறையும் முத்துவின் முதுகில் வைத்தாள்.

திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பவர்களைத் தாக்குவது அநியாயம். அதிலும் விரைவாக வந்ததற்காகத் தண்டனையா?

"அண்ணி!" என்று மாதுரி எழ, "உனக்குத் தெரியாது மாதுரி, இந்தப் பயல் நாலடி நடக்க மாய்ச்சல் பட்டு வாடகைக்கு சைக்கிள் எடுத்திருப்பான்" என்று மேலும் கையை ஓங்கினாள்.

"அய்யோ, இல்லை பெரியம்மா, சமையல்காரர்தான் திரும்பவும் கடைக்குப் போக வேணும். அதனால வாட்ச்மேன் சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போயிட்டு சீக்கிரம் வான்னு அனுப்பினார்...இ...இந்தாங்க" என்று தனலட்சுமியின் ஓங்கிய கைக்கு முதுகு எட்ட விடாமல் நெளிந்தபடியே சாமான் பொட்டலத்தை நீட்டினான்.

அவனை மறுபடியும் அடித்துவிட வேண்டும் என்ற வெறியோடு தனலட்சுமி வேகமாக வீசிய கைபட்டு பொட்டலம் கீழே விழுந்து பிரிந்தது.

சாக்லேட் பார்கள் சிதறிவிழ, அவற்றோடு கூட இருந்த ஒரு சிறு பாட்டில் உருண்டு, வந்து மாதுரியின் காலடியில் மோதி நின்றது.

குனிந்து அதை எடுத்துப் பார்த்தாள் மாதுரி.

அது ஒரு 'கிளிசரின்' பாட்டில்.

"என்னவோ அவள் மனதை உறுத்தியது.

ஆனால் அதை விடவும் தனலட்சுமியின் ஆத்திரம் விசித்திரமாய்ப் பட்டது.

இதற்காக வேறு மீண்டும் அடிபட்டு விடாமல் அந்தப் பையனைக் காக்க விரும்பி, "சமையல்காரர் வரச் சொன்னார் என்றால் போயேன் முத்து" என்று அவனை அனுப்பி விட்டு நாத்தனாரிடம் திரும்பினாள்.

அவள் பேச வாயெடுக்குமுன், "இந்த மழைக்கும் குளிருக்கும் உதடெல்லாம் வெடிக்குதா, இதைப் போட்டா கேட்குமே என்று வாங்கி வரச் சொன்னேன் இதோ பார்" என்று புதிதாக ரத்தம் கசிந்த கீழ் உதட்டைக் காட்டினாள்.

"அடடா!? சீக்கிரம் தடவுங்கள் அண்ணி" என்று பாட்டிலை நாத்தனாரின் கையில் கொடுத்தாள் மாதுரி.

பாட்டிலை வாங்கிக் கொண்டு தனலட்சுமி செல்ல, மீண்டும் எதையோ முரண்பாடாக உணர்ந்தாள் மாதுரி.

என்னவென்று யோசிக்க முற்படும் போது கண்ணன் உரக்கச் சிரிக்கும் சத்தம் கேட்கவும் தோட்டத்தில் எட்டிப் பார்த்தாள்.

கண்ணன் முன்னே, முயல் போலக் குதித்து விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தாள் பத்மினி.

வெகுளி இந்தப் பெண். இவளைப் போய்.. ஊகூம். அதையெல்லாம் நினைப்பது சரியில்லை, அது பழைய கதை. இப்போது அவன் உறுதி கூறியிருக்கிறான்.

பிள்ளைக்காகக் கூறியது என்றாலும், முன் நடந்து கொண்டமுறை தவறு என்பதை உணர்ந்துதானே அதை விடுப்பதாகவும் ஒழுங்கான வாழ்வு வாழ்வதாகவும் சொல்லியிருக்கிறான்.

தவறு மனித இயற்கை.

தவறை உணர்ந்து திருந்தி நல்வாழ்வு வாழ விரும்பும் போது அந்தத் தவறை மன்னிக்கவும் மறக்கவும் மறுப்பது முன்னதை விடப் பெரிய பிழை.

கூடப்பிறந்தவள் என்றாலும் தனலட்சுமி தம்பியிடம் ஐயம் கொள்வது பிசகு.

ஆனால் மாதுரி அப்படியல்ல.

அவளுடைய கணவனிடம் அவளுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது.

நிச்சயமாய் இருக்கிறது என்று உள்ளூரச் சொல்லிக் கொண்ட மறுகணமே, "இறைவா, என் நம்பிக்கை பலிக்கச் செய்" என்று மனம் உருகி வேண்டிக்கொண்டாள் மாதுரி.

அப்போது மட்டுமல்ல.

அவள் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு நாத்தனாருடன் சென்ற இரு கோயில்களிலும் இருந்த அத்தனை சன்னதிகளிலும் அவள் அதையேதான் வேண்டிக்கொண்டாள்.

ஆனால் ஒன்றில் முழு நம்பிக்கை இருந்தால் அந்த நம்பிக்கை பலிப்பதற்காக யாரிடமும்-இறைவனிடம் கூட வேண்டுவானேன்? இந்த அடிப்படை முரண்பாடு அப்போது அவளுக்குப் புத்தியில் படவே இல்லை.



அன்று சுமார் மூன்று மணியளவில் தன் 'பிசினஸ் லஞ்ச்'சை முடித்துக் கொண்டு திரும்பி வந்த சசிதரன் வீட்டுக்கு டெலிபோன் செய்தான்.

இதை ஏற்கனவே தனலட்சுமி எதிர்பார்த்திருந்தாள். தம்பியின் கண்ணில் மனைவியைப் பார்க்கையில் இருந்த ஆர்வம் இதை எதிர்பார்க்க வைத்தது.

எந்த வகையிலும் இருவருக்கும் பேச்சு வார்த்தைக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று முடிவு செய்திருந்த அவள் மாதுரியிடம், மதியத்தில் கண்ணனை உறங்க வைத்தால்தான் கோயிலில் அவன் விழித்திருப்பான் என்று கூறி, அவனோடு நீயும் ஓய்வு எடு என்று அனுப்பி வைத்திருந்தாள்-

டெலிபோன் பொறுப்பாளரிடம் தம்பியிடமிருந்து 'கால்' வந்தால் தன்னிடம் கொடுக்கும்படி திட்டம் செய்திருந்தாள்.

வீட்டில் அவளே எஜமானியாக இருந்துவரும் பழக்கத்தில் அவரும் அவள் பணித்தபடி செய்தார்.

மனைவிக்குப் பதிலாகத் தமக்கையின் குரலைக் கேட்டதும் சட்டென சசிதரனுக்குச் சிரிப்பு வந்தது.

"மாதுரியிடம்..." என்று தொடங்கிய சசிதரனை இடைமறித்து, "அவள் தூங்குகிறாளப்பா. சும்மாவே கொஞ்சம் பூஞ்சை உடம்பு போல. இப்போது மகனைப் பற்றிய கவலையில் வேறு சரியாகச் சாப்பிடாமல் கொள்ளாமல் இருந்து இன்னும் கெடுத்துக் கொண்டு இருக்கிறாள். தூங்கட்டுமே அவளிடம் என்ன சொல்ல வேண்டும் என்று சொல்லு. நானே சொல்லி விடுகிறேன்" என்றாள் பரிவாக தனலட்சுமி.

மேலும் நகைத்துவிட்டு, "முக்கியமாக ஒன்றும் இல்லை, அக்கா. அப்புறமாய் நானே அவளிடம் சொல்லிக் கொள்கிறேன். எதற்கும் கிளம்பும்போது பேசச் சொல்லுங்கள்" என்றான் சசிதரன்.

தம்பியின் குரலில் இருந்த ஆர்வம் தனலட்சுமிக்கு ஆத்திரமூட்டியது. அதற்குத்தானே காத்திருக்கிறேன் என்று மனதோடு கறுவி, டெலிபோன் கருவிக்கு வக்கணை காட்டினாள்.

குரலை மாற்றி, "சரி தம்பி, அவள் சீக்கிரம் விழித்து விட்டால் பேசச் சொல்லுகிறேன், வந்து, தம்பி நாங்கள் திரும்பி வர எப்படியும் ஓர் எட்டு, எட்டரை ஆகும். உனக்கும்தான் ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக அலைந்ததில் விட்டுப்போன வேலை நிறைய பாக்கியிருந்திருக்குமே; அதையெல்லாம் முடித்துவிட்டு ஏழரை மணிக்கு மேல் ஆர அமர வந்தாயானால் நீ வந்து குளித்து கிளித்து முடிக்கவும் நாங்கள் வரவும் சரியாக இருக்கும்" என்று இலவசமாக ஆலோசனை வழங்கினாள்.

இதில் தப்பு ஒன்றும் தோன்றாதபடியால் சரியென்று ஒப்பினான் சசிதரன். ஏனெனில் இந்த மருத்துவமனை அலைச்சலால் அவன் மட்டுமே பார்த்தாக வேண்டிய சில வேலைகள் மெய்யாகவே பாக்கியிருந்து போயின. அத்தோடு

இந்த மாதிரி வேலையில் பாக்கி சேர்ப்பது அவனுக்குப் பிடிக்காத விஷயமும்கூட.

தம்பியின் 'சைகாலஜி' அறிந்து சொன்ன அக்காவுக்கு முதல் வெற்றி கிட்டியது.

பிறகு, வேலைக்காரப் பையன் முத்துவை அழைத்து, சில வேலைகள் சொன்னாள் தனலட்சுமி.

இதை வேறு யாரிடமும் சொன்னாலோ, கொடுத்த வேலைகளைச் சரியாகச் செய்யாவிட்டாலோ முதுகுத் தோலை உரித்துவிடப் போவதாக மிரட்டிவிட்டு மகளிடம் சென்றாள்.

முதலில் மகள் சிணுங்கவும் தலையில் அடித்துக் கொண்டு நயமாகவும் பயமாகவும் சில பேச்சு உரைத்தாள்.

தன் வட்ட விழிகளை உருட்டியபடி மகள் தலையாட்டவும், "எதையும் மறந்து தொலைத்து விடாதே. அப்புறம் நம் இருவருக்கும் சாப்பாடு கூடக் கிடையாது. நடுத்தெருவில் பிச்சை எடுத்து உண்டால்தான் உண்டு. எங்கேயும் போவதானால் நடந்துதான் போக வேண்டும் இந்த கார் கிடையது; ஏ. சி. கிடையாது; டி. வி. கிடையாது; வீடியோவும் கிடையாது" என்று எச்சரித்து விட்டுப் போனாள்.

வீடியோவுக்காக மகள் உயிரையும் விடுவாள் என்பதை அறிந்தவள் எனவே நிம்மதியுடனேயே கிளம்பினாள்.

கருமாரி அம்மன் கோவிலில் நிதானமாக தரிசித்து விட்டு வந்தார்கள்.

மாதுரியின் விழிகளில் கேள்விக் குறியைக் காணவும் "திருஷ்டி கழிப்பவர் எங்கோ வெளியே போயிருக்கிறார். இன்னொரு தடவை பார்த்துக் கொள்ளலாம்" என்றாள் தனலட்சுமி.

மாதுரிக்கு இதிலெல்லாம் அவ்வளவாக நம்பிக்கை இல்லாததால் பெரிதாக எண்ணவில்லை.

வடபழனியில், "நீ சுவாமி பார்த்துக் கொண்டிரு. நான் இரவு சாப்பாடு பற்றி ஒரு வார்த்தை போனில் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்" என்று சென்றாள்.

பேசிவிட்டு வந்தவள் அதற்குமேல் வினாடி கூட வீணாக்கவில்லை. வேகம் வேகம் என்று விரட்டியடித்து, பத்தே நிமிடங்களில் கார் ஏறி, விரைவாக வீட்டுக்கும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

வீடு வந்து சேரவும் மாதுரியின் விழிகள் ஆவலாகக் கணவனைத் தேடின. ஆனால் அவன்தான் கண்ணில் படுவதாக இல்லை.

பத்மினியையும் காணவில்லை என்பதோடு வீடியோ டெக் அலறும் ஓசைகூடக் கேளாமல் வீடு நிசப்தமாக இருந்தது.

"ஏலே முத்து..." என்று தனலட்சுமி அழைக்கவும் ரெடியாக ஓடி வந்தான் முத்து.

"அய்யா வரலை?" என்று அவனிடம் மெதுவாக விசாரித்தாள் தனலட்சுமி.

"அப்...பவே வந்துட்டாங்களேம்மா" என்று கண்ணை உருட்டினான் பையன்.

"பின்ன எங்கடா?"

"சின்னம்மா... இல்லை. அய்யா வந்ததுமே சின்னம்மா ரூமுக்குள்ளாரப் போயி கதவைச் சாத்திட்டாங்க" என்று ஒப்புவித்த பையன் மூச்சுவாங்க, பயத்துடன் தனலட்சுமியைப் பார்த்தான்.

"ஆங்..!" என்றாள் தனலட்சுமி அதிர்ந்தவளாக.

"ஏலே யார் கிட்டையானும் இந்தப் பேச்சு வார்த்தை பேசினே, உன் தோலை உரித்து உப்பு கண்டம் போட்டு விடுவேன். ஓடு" என்று அவனை அனுப்பினாள்.

விட்டேன் பிழைத்தேன் என்று அவன் ஓடிவிட உடைந்து விழுந்து விடுவாள் போல ஓய்ந்து நின்ற மாதுரியிடம் திரும்பினாள்.

சற்று அதிகப்படி அலைச்சலில் களைத்து உறங்கி விட்ட மகனைத் தோளில் தாங்கியபடி சோர்ந்து நின்று கொண்டு இருந்தாள் அவள்.

"அட பிள்ளையைக் கீழே போட்டு விடாதே" என்று மருமகனை வாங்கி சோபா ஒன்றில் கிடத்தி தானும் அமர்ந்து கொண்டாள்.

தனக்குத்தானே பேசுவதுபோல, "ம்" மணி ஆறு அடித்தால் டான்னு வந்து நிற்கிறவன் மணி இப்ப... எட்டா? அடயம்மா, வர ஒன்பது ஆகுமான்னு திரும்பத் திரும்பக் கேட்டானே, ஏன்னு இப்பல்ல தெரியுது! என்ன தான் ரொம்ப நாள் கழித்துப் பார்க்கிறான் என்றாலும் நீயும் இருக்கிறபோதேயா இப்படி?

"எனக்கு வருகிற கோபத்துக்கு என்னென்னமோ சொல்லிச் சபிக்கத் தோன்றது. ஆனால் கூடப் பிறந்த தம்பி, நாளைக்கு எப்படியும் மருமகனாகப் போகிறவன், என்ன பண்ணட்டும் சொல்லு.

"...எதற்கும் சந்தேகத்துக்கு ஒருதரம், எட்டிப் பார்த்துவிட்டு வாயேன். நேரிலே இரண்டு வார்த்தை கூடா கொடுக்கவும் வசதி..."

"ஆனால் மாதுரி என்னைக் கேட்டால்... கண்டு கொள்ளாம நீ விட்டுவிடுகிறதே மேல் என்பேன். நீ பாட்டில் அவனிடம் ஏதாவது கேட்கப் போக, அவனும் கோபத்தில் காச்சுமூச்சென்று கத்தினான் என்று வை. நீ யார் கேட்க என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டான் என்றுதான் வையேன். வேலைக்காரர்கள் முன்னே எவ்வளவு கேவலம்! பொறுத்துப் போனால் இந்த ஏசி கார், நகை நட்டு என்று இதாவது நிலைக்குமில்ல? அதற்காக வேனும்... ஏன்று இழுத்தாள் தனலட்சுமி.

வாலை முறுக்கிச் சீண்டி மாட்டை விரட்டுகிற வேலைதான் அது காலைக் கிளப்பிக்கொண்டு நாலுகால் பாய்ச்சலில் ஓட வேண்டுமே!

ஆனால் மாதுரி அதைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு இன்னும் வரவில்லை.

என் கணவன் கெட்டவன் இல்லை; ஒரு வேளை ஒரு காலத்தில் சில பிழை செய்திருந்தாலும் இப்போது முழுக்க திருந்திவிட்ட நல்லவன் அவன் என்று உருப்போட்டது பொய்யாகிவிட்ட அதிர்ச்சியிலிருந்து அவளால் சுலபத்தில் மீள முடியவில்லை.

உருகி உருகித் தொழுது வேண்டிய அத்தனை தெய்வங்களும் இப்படி ஒரேயடியாகக் கைவிடக் கூடுமோ?

உடம்பில் உள்ள சக்தியெல்லாம் வடிந்துவிட்டாற் போல வெறும் கூடாய் உணர்ந்தாள் மாதுரி.

'கணவனிழந்தான் பெற்றிழந்தான் போல' என்று கம்பர் கூறியதன் பொருள் அவளுக்கு அப்போது விளங்கியது.

இல்லையே என்று அம்மாவை வேதனைப்பட்டுக் கொண்டு இருந்த ஒன்று கைக்குக் கிட்டிவிட்டதாக அவள் அகமகிழ்ந்திருந்தது இப்போது அடியோடு இல்லை என்றால் துன்பம் அவளால் சகிக்க முடியவில்லை.

உள்ளே நொறுங்கிப் போய் எண்ணிப் பார்க்க, இனி தாய் நினைக்க, கனவு காண, கற்பனை செய்ய என்று ஒன்றுமே ஏன், வாழக்கூட ஒன்றுமே இல்லாதது போல உணர்ந்தாள்.

வாலை முறுக்கியது முழுமையாக உறைக்கவில்லை என்று கண்டு தார்க்குச்சியால் குத்திவிட்டாள் தனலட்சுமி. "ஊர் உலகத்தில் பணம் காசுக்காக என்னென்ன மாதிரியோ வாழ்கிறார்களாம். உனக்கும் சொல்கிறேன் கேட்டுக் கொள். இந்தக் கார், பங்களா ஆள் அம்பு சொத்து சுகம் வேணும் என்றால் நீயும் அந்த மூன்று குரங்குகள் மாதிரி கண்ணு, காது,

வாயை மூடிக்கொள். நாலுநாள் போனால் எல்லாம் சரியாகிப் போகும். அட, நாலு பேர் பார்க்க நகை நட்டோடு திரியலாமில்ல?

"என்ன, அப்படியெல்லாம் தப்பைச் சகித்து வாழ மாட்டேன். தப்பு செய்தால் பிரிந்து விடுவேன் என்று வாய் வீராப்பு பேசினது வெட்கமாக இருக்கிறதா? அப்படி யாரிடம் பேசினாய்? என்கிட்டேதானே நான் சொல்லிக் காட்டவே மாட்டான் எப்போது என் தம்பியோடு வாழ வந்தாயோ, அப்போதே நீயும் என் மகள் மாதிரிதான் உன்னைப் போய்ச் சொல்லிக் காட்டுவேனா?

"ஏதோ, மானம், மரியாதை, கொள்கை எல்லாவற்றையும் பணத்துக்காகப் பறக்க விட்டுவிட்டோமென்று மனச்சாட்சிதான் குத்தும். என்ன பெரிய மனச்சாட்சி? அதன் கழுத்தைத் திருகிவிட்டால் யாருக்குத் தெரியப்போகிறது?" என்றாள் ஓரக் கண் பார்வையைத் தம்பி மனைவியின் முகத்திலேயே பதித்து.

மனச்சாட்சியைக் கொலை செய்வது எளிது. ஏனெனில் அந்தக் கொலையைப் பற்றிவேறு யாருக்கும் தெரியாது என்று எங்கோ படித்தது நினைவுவர, நாத்தனாரை வெறித்து நோக்கினாள் மாதுரி, 'பத்துமாதம் சுமந்து பெற்ற ஒரே மகளைத் திருமணம் என்கிற சடங்குகூட இல்லாமல் தம்பியுடன் பழகவிட்டிருக்கிறாயே மானம், மரியாதை, கொள்கை, மனச்சாட்சி என்பதை எல்லாம் நீ உயிரோடா வைத்திருக்கிறாய்?' என்று கேட்க வேண்டும் போல ஒரு கணம் தோன்றியது அவளுக்கு.

ஆனால் அந்தக் குடும்பத்தில் பழகிவிட்ட இருதார மணம் பணம் காசுக்குக் கொடுக்கப்படும் அதிக மதிப்பு. தனலட்சுமியின் ஆதரவற்ற நிலை. அத்தோடு கூட அநீதியை எதிர்த்து நிற்கும் தைரியமின்மை எல்லாம் நினைவு வந்தது அவளுக்கு. அன்றுகூடத் தன்னைக் காட்டிக் கொடுத்துவிட வேண்டாம் என்று கெஞ்சினாளே, மாதுரி என்ன, இன்னும் ஒரு பெண்ணைத் தம்பி கொணர்ந்தாலும் இவள் பேசாமல்தான் இருப்பாள்.

ஆனால் மாதுரி வளர்ந்தமுறை வேறு?

ஒருவருக்கொருவராய் வாழ்ந்து இறப்பிலும் ஒன்றாகவே போய்விட்ட பெற்றோரின் வித்து அவள். இந்த மாதிரி வாழ்வுக்குப் பணிவது அவளால் முடியாத காரியம் அதைச் சகிப்பதும் இயலாத விஷயம். அந்த மாதிரி அல்ல வாழ்வு-அது வைரமாகச் சொரிந்தாலும் அது அவளுக்கு அவசியமில்லை.

மெல்ல உயிர்த்து வளர்ந்து ஆத்திரம் சக்தியூட்ட நிமிர்ந்து, "நான் அப்படியில்லை. அண்ணி அவரிடம்" என்று தொடங்கினாள்.

மாதுரியின் முகத்தில் சினச்சிவப்பு ஏறுவதைக் கண்டதும் தனலட்சுமி அவசரமாகக் குறுக்கிட்டாள். "நேருக்கு நேரே இரண்டு வார்த்தை கேட்டுவிட்டுப் பிரிந்து போய் விடலாம் என்று நினைக்கிறாயா? யாராவது அவனைக் கேட்டாலும் தேவலைதான். ஆனால் அதிலே ஒன்று. உன்னை எப்படியோ விட்டாலும் அவன் இதுமேல் பிள்ளையை விடுவானோ என்னவோ? அதிலும் ஆண் வாரிசு. இவளால் பிள்ளையைச் சரியாக வளர்க்க முடியாது. வசதி போதாது என்று கோர்ட்டு மூலம் உன் பிள்ளையை அவன் பிடுங்கிக் கொள்வானே, உன்னால் தாங்க முடியும்?" என்று கேட்டு மாதுரியை அரள வைத்தாள்.

மீண்டும் மாதுரி குலைந்து போனாள்.

மகனைக் கணவனிடம் பறிகொடுக்க நேருமோ என்கிற ஒரே பயத்தில்தான் முன்பு பிள்ளையின் உயிரைக் காக்கும் உதவிக்காகக்கூட சசிதரனிடம் வர அவள் தயங்கியதே.

முதலில் இருந்தே அவளை மருட்டிய பிரச்சினை.

சட்டம் அப்படிப் பெற்ற தாயிடம் இருந்து பிள்ளையைப் பிரித்துவிடுமோ என்கிற ஐயம் லேசாகத் தோன்றியது. ஆனால் பணம் பாதாளம் வரை பாயுமல்லவா? அத்தோடு சசிதரனைப்போல அவளால் பிள்ளையை வளர்க்க முடியாது

தான். இன்றைக்கு வயிற்றுப் பாட்டை பார்க்க ஒருவேலை கூட இல்லாத நிலைதான்.

இந்த நிலைமையைக் காட்டி, மகன் மீது, சட்ட பூர்வமான அதிகாரத்தை சசிதரன் பெற்று விட்டால் அப்புறம் அவளால் என்ன செய்ய முடியும்? கண்ணனைப் பிரிந்து அவளால் உயிர் வாழ முடியுமா?

முகம் வெளுத்து "பின்னே நான் என்ன செய்யட்டும் அண்ணி?" என்று புலியிடம் வழி கேட்கிறோம் என்பது புரியாமல் தனலட்சுமியிடம் ஆலோசனை கேட்டாள் அந்தப் பேதை.

"அய்யோ, அதையும் என்கிட்டேயே கேட்கிறாயா? இதெல்லாம் பேசினேன்னு அவனுக்குத் தெரிந்தால் என்னைக் கொன்று போட்டு விடுவான். ஆனால் பெண்ணுக்குப் பெண், உன்னைப் பார்த்தாலும் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது" என்று தொடங்கி, தனது திட்டத்தை விவரித்தாள் தனலட்சுமி.

இதைக் கேள் மாதுரி, சசிபோல ஓர் அடாவடி ஆண் பிள்ளையுடன் நேருக்கு நேர் மோதுவதைவிட, நீ முன்னைப் போலவே ஓசைப்படாமல் ஒதுங்கி விடுவதுதான் மேல். பணம் காசு போனாலும் உனக்குப் பிள்ளையாவது தங்குமில்லை?" என்று முதலில் அஸ்திவாரத்தைப் பலமாக இட்டாள்.

பணம் காசா? பதிலேதும் கூறாமல் குனிந்து மகனின் நெற்றியில் விழுந்த கேசச் சுருளை ஒதுக்கிவிட்டாள் மாதுரி.

அவளை வெறித்து தனலட்சுமியின் பார்வையில் கற்பாறையின் கடினம் தெறித்ததைத் துரதிர்ஷ்டவசமாக குனிந்திருந்த மாதுரி கவனிக்கவில்லை.

மாதுரி நிமிருமுன் முகத்தைச் சீர்படுத்திக் கொண்ட மற்றவள் உருக்கத்துடன் வினவினாள். 'நான் சொல்கிறது சரிதானா கண்ணா?' என்று.

மாதுரி பேச்சின்றி தலையாட்டவும், "ஆனால் பாருதங்கம், இங்கே உன் பங்களூர் வீடு மாதிரி நினைத்தார் போல வெளியேற முடியாத இரவு பகல் கூர்க்கா தவிரப் பத்து வேலைக்காரர்கள் சுற்றுகிற இடம், அதிலும் பகலில் வெளியேறுவது கஷ்டம்... ஊகூம் முடியாத காரியம் அதனாலே..." என்று தொடங்கினாள்.

மறுநாள் பகல் வரை மாதுரியை அங்கே தங்கவிடக் கூடாது என்று உறுதி கொண்டிருந்தாள் தனலட்சுமி.

தம்பியும் மாதுரியும் இனி சந்திக்கக்கூடாது சந்தித்தால் இசகுபிசகாக ஏதேனும் வெளிவந்து விடலாம். அது ஆபத்து அதற்கு இடம் தரலாகாது.

முன்பொரு தரம் அவள் மாதுரியை ஓடவைத்த போது தனலட்சுமியின் திட்டத்தில் பல ஓட்டைகள் இருந்தன. ஆனால் அவள் பக்கம் அதிர்ஷ்டம் இருந்ததால் மாட்டிக் கொள்ளாமல் தப்பியதோடு முழு வெற்றியும் கிட்டியது.

ஒரு வேளை தோல்வி அடைந்தாலும், "நானே அப்படித்தான் தம்பி எண்ணிவிட்டேன். மன்னித்துவிடு!" என்று தம்பியிடம் மன்னிப்புக் கேட்டு சமாளித்து விடுவது என்று இன்னொரு வழியையும் அப்போது யோசித்து வைத்திருந்தாள்.

ஆனால் இப்போது நிலைமை வேறு.

வாரிசோடு வந்தவள் நிலைபெற்று விட்டால் தனலட்சுமியின் நெடுநாள் கனவு அடியோடு தகர்ந்துவிடும். எனவே தோல்வி என்கிற எண்ணத்துக்கே இடமில்லை.

இப்போது வெற்றி பெற்றே தீரவேண்டும் என்கிற வெறி இருந்ததால் வெகு கவனத்துடன் திட்டத்தில் ஓட்டையும் இல்லாமல் பார்த்துக் கொண்டாள்.

"அதனாலே இரவு... அதாவது விடிகாலையில் கிளம்புவது மேல். விடிகாலை நாலரை மணிக்கு நம் கூர்க்கா தெருமுனை தாண்டி இரண்டாவது கடையில் டீ குடிக்கப் போவான். தெருவில்

பால்காரர்கள் நடமாட்டம் இருக்கும் வீட்டில் நாய்களும் சுற்றிக் கொண்டு இருக்கும் என்பதால் ஓர் அரைமணி நேரம் அரட்டை அடித்துவிட்டு வருவான்... உன்னை நாய்களுக்குத் தம்பி அறிமுகப்படுத்தி விட்டான் இல்லையா? உன்னிடமோ பிள்ளையிடமோ குரைக்கக் காணோமே... அறிமுகம் செய்து விட்டானா? நல்லது நீ கிளம்பும் போதும் குரைக்காது. நாலரையிலிருந்து ஐந்துக்குள் கூர்க்கா திரும்பி வருமுன் பிள்ளையோடு நீ கிளம்பி விட்டாயானால் ஒருவர் கண்ணிலும் படாமல் போய் விடலாம்.

"உன் மகனையும் தூக்கிக் கொண்டு மூட்டை முடிச்சுகளை எடுத்துப் போவது கஷ்டம் அதனால் சேலை துணிமணிக்கு என்ன செய்வது என்று பயப்படாதே இந்த அறுவடைக்குப் போனதில் என்னிடம் ஒரு பத்... இல்லை ஐந்தாயிரம் ரூபாய் இருக்கிறது. அதை அப்படியே தருகிறேன் ஒரு வேலை கிடைக்குமட்டும் செலவுக்கு வைத்துக் கொள்."

வேண்டாம் என்று தலையசைத்தாள் மாதுரி.

மருத்துவச் செலவைச் சசிதரன் ஏற்றுச் செய்ததால் அவன் முதலில் கொடுத்த இருபதாயிரம் ரூபாயில் நிறையவே மீதம் இருந்தது. அதைத் திருப்பிக் கொடுக்கப் போனபோது, "உன்னிடமே இருக்கட்டும்" ஏதாவது தேவையென்றால் பயன்படுத்திக் கொள்" என்று கூறி விட்டான். ஆனால் அந்தத் தேவை எப்படி வரும் என்று அவளுக்கு தெரியாதே!

சட்டென விழிகளில் திரண்டு விட்ட நீருக்காகத் தன்மீதே கோபம் கொண்டவளாகத் தொண்டையில் அடைத்ததை விழுங்கிக்கொண்டு, "என்னிடம் பணம் இருக்கிறது" என்றாள் மாதுரி சுருக்கமாக.

"எவ்...அ. அது சரி. அப்போ சரி. இப்ப எதற்கும் சீக்கிரமாகக் கண்ணனைத் தூக்கிக் கொண்டு உன் அறைக்குள் சென்று உள்ளே பூட்டிக் கொள். தம்பி கேட்டால்... ஒரு வேளை தம்பி கேட்டான் என்றால் அலைந்த அசதி களைப்பில் உறங்கப் போய் விட்டாய் என்று சமாளித்து விடுகிறேன், ஒரு கால்...

அவன் சாப்பிட்டால் கூடக் கண்டு கொள்ளாமல் இருந்துகொள். அதற்கு மேல் போய்விடுவான்... விடியற்காலை நாலரை மணியை நினைவு வைத்துக் கொள். அந்த நேரம் நான் வழியனுப்ப வருவேன் என்று எதிர்பார்த்து இராதே. இதற்கு மேல் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசுவது கூட நல்லதல்ல... அவன் சந்தேகப்பட்டுவிட்டால் ஆபத்து... சந்தேகப்பட்டு என்னிடம் கேட்டால் என்னால் பொய் சொல்ல முடியாது. பார்!" என்று தனலட்சுமி கூறும்போது முடிந்த அளவு ஓசைப்படாமல் ஒரு கதவைத் திறந்துமூடும் சத்தம் கேட்க, இருவருமே அசந்து போயினர்.

விழிகள் கடிகாரத்துக்குத் தாவ தன் முட்டாள் மகளை உள்ளூர தனலட்சுமி நொந்து கொள்ள, கணவன் முகத்தில் விழிக்க விரும்பாத மாதுரி அவசரமாகக் குனிந்து கண்ணனைத் தூக்கினாள்.

மாடிப்படியில் இறங்கியபடி, "இன்னமும் ஒருவரும் சாப்பிடவில்லையே. நாம் மூவரும் சேர்ந்து சாப்பிடலாமா?" என்று வினவிய கணவனின் குரல் கேட்டுச் சட்டென நாத்தியின் பின்னே ஒதுங்கினாள் மாதுரி.

சட்டென முன்னே வந்து, தம்பியின் கையைப் பற்றி "நீ இன்னுமா சசி சாப்பிடவில்லை? இப்போதுதான் மாதுரி சொல்லிக் கொண்டிருந்தாள். சாயங்காலம் டிபன் முந்திரி அல்வா நன்றாயிருக்கிறது என்று நிறைய முழுங்கியதால் இப்போது வயிறு அடைத்துக் கொண்டு அஜீரணம்போல இருப்பதால் சாப்பாடுவேண்டாம் என்று வாம்மா, நாம இரண்டுபேரும் சாப்பிடலாம். ஏல முத்து சமையற்காரரிடம் சாப்பாடு வைக்கச் சொல்லு. அம்மா சாப்பிடவாராங்கன்னு சொல்லு ஒரு... மாதுரி, கண்ணன் விழித்துவிடாமல் போய் படுக்கவை அவனுக்கு ஒரு தம்ளர் பால் அனுப்புகிறேன் உனக்கு ஒரு வேளை லங்கணம் போட்டால் நாளை வயிறு சரியாகிவிடும் போ" என்று எல்லோரையும் ஏவி தம்பியை மட்டும் கைப்பிடியால் சாப்பாட்டு அறைப்பக்கம் இழுத்துச் சென்றாள் தனலட்சுமி.

தமக்கையோடு நடந்தாலும் நிதானித்து, அவளது வேகத்தை மட்டுப்படுத்தி, தலையைத் திருப்பி, "கொஞ்சமேனும் ஒரு சப்பாத்தியாவது சாப்பிடேன் மாதுரி" என்று மனைவியை அழைத்தான் சசிதரன்.

செல்லும் வழியே நேரே பார்த்தபடி, "இல்லை கொஞ்சமும் பசியில்லை" என்று இயம்பிவிட்டு, மாடிப்படி ஏறினாள் மாதுரி.

தனலட்சுமி, ஒரு வேளை... என்று எச்சரித்தபடி, சசிதரனின் மெதுவான அழைப்பும், கதவுக்குமிழ் மெல்லத் திறக்கப்படும் ஓசையும் கேட்டது.

இருளில் அசையாமல் அமர்ந்திருந்தாள் மாதுரி.

மீண்டும் ஒரு தரம் அழைத்துப் பார்த்துவிட்டு அவன் விலகிச் சென்று விட்டான்.

இருதயம் இருக்கும் இடத்தில் ஒரு பெரிய இரும்புக் குண்டு இருப்பது போன்ற உணர்வோடு இரவு முழுவதும் அப்படியே அமர்ந்திருந்தாள் மாதுரி.

இது 'க்ளீன்கட்' இனி இந்த உறவு அடியோடு முறிந்து விடும்... நெஞ்சம் இன்னமும் சுமை ஏற்றினாற் போலக் கனத்தது.

மணி நாலடித்ததும் எழுந்து சன்னல் புறம் சென்று பார்த்தாள்.

நாய்கள் எலியையோ பெருச்சாளியையோ விரட்டியபடி ஓட, கூர்க்கா குறுக்கும் நெடுக்குமாய் கேட்டில் நடை பயின்றான்.

ஒரு கைப்பையில் பணத்தோடு, பேஸ்ட் பிரஷ் எடுத்து வைத்தாள் டவலை நனைத்து முகத்தை அழுந்தத் துடைத்து விட்டு மீண்டும் எட்டிப் பார்த்தாள்.

கூர்க்கா தன் காலைச் சாய்க்கத் தயாரானான்.

தோட்டத்திற்கு நீர்விடும் குழாயில் வாய் கொப்பளித்து விட்டு கிளம்பிச் சென்றான்.

இனி தாமதிப்பதற்கில்லை.

ஏதோ தோன்ற மேசை மேல் கிடந்த ஆல்பம் ஒன்றிலிருந்து சசிதரன் படம் ஒன்றைப் பிரித்து எடுத்துக் கைப்பையில் வைத்துக் கொண்டாள்.

'முட்டாள்தனம்' என்று தன்னைத் தானே திட்டியபடி கண்ணன் விழித்து விடாமல் மெதுவாகத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு கைப்பை சகிதம் வந்து மெல்லக் கதவைத் திறந்தவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவளது அறைக் கதவின் முன்னே, மறித்தாற் போலக் கிடந்த சோபாவில் இருந்து மெல்ல எழுந்து கொண்டிருந்தான் சசிதரன்.

இரவு முழுவதும் உட்கார்ந்தவாறு இருந்த உடல் இறுக்கம் தளர லேசாக சோம்பல் முறித்தான்.

திகைப்பூண்டை மிதித்தாற்போல என்பார்களே அது போலச் செய்வது அறியாமல் பார்த்துக் கொண்டிருந்த மனைவியை நிதானமாகத் திரும்பினான்.

"கிளம்புவாய் என்றுதான் காத்திருந்தேன் ஏனென்றால் எனக்கு அந்தப் பார்வை நினைவு இருந்தது" என்று ஏளனமாக உரைத்தான்.

20

அருகே வந்து நின்ற மாதுரியை ஆழப் பார்த்தான் அவளுடைய கணவன்.

இன்னமும் அவள் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை என்பதை உணர்ந்து, அவளது துணியாய்த் துவண்ட கரங்களிலிருந்து மகனை வாங்கிச் சென்று கட்டிலில் கிடத்தி விட்டு வந்தான்.

மாதுரியை உள்ளே நகர்த்தி, கதவைச் சாத்தினான். கதவில் சாய்ந்தபடி நின்று "ஏதோ கடவுள் புண்ணியத்தில் நமக்குத்தான் சிவராத்திரி என்றால் அடுத்தவர்களின் விடிகாலை உயர்ந்த உறக்கத்தைக் கெடுப்பானேன் என்று கிண்டலாக உரைத்தவன், "நீ இன்னும் எந்தப் பார்வை என்று கேட்கவில்லையே. ஒருவேளை உனக்கே நினைவு இருக்கிறதோ" என்றான் தொடர்ந்து.

பிரயாசையுடன் இல்லை என்று தலையசைத்தாள் மாதுரி.

"இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பாக என்னைப் பிரிந்து சென்றாயே, அதற்கு முன் தினமும் இதே பார்வை தான் பார்த்தாய், அன்றேனும் அதற்கு ஓரிரு காரணங்கள் இருக்கக்கூடும் என்று எண்ணினேன் ஆனால் இன்று இரண்டு எட்டில் அவளை அணுகியவன் அவள் தோளைப் பற்றிக் குலுக்கிக் கேட்டான். சொல்லு நான் என்ன பிழை செய்தேன்? எதற்காக இந்த ஓட்டம்? நீ இதுவரை அனுபவித்த துன்பங்களுக்கெல்லாம் ஈடுகட்டுகிற மாதிரி உன்னைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள நான் யோசித்து யோசித்துச் செய்யும் இந்த நேரத்தில் ஏன் இப்படிச் சொல்லு."

இந்தப் பேச்சில் மாதுரி மேலும் திகைத்தாள்.

இவன் தப்பே செய்யாத மாதிரியல்லவா பேசுகிறான் தான் செய்த பிழை அவனுக்குப் புரியவில்லையா, அல்லது அதைப் பிழையாக அவன் கருதவே இல்லையா? இருதாரம் கொள்வது, சொத்துக்காக மணப்பது எல்லாம் இவனுடைய சகோதரியைப் போல இவனுக்கும் சாதாரணமாகத்தான் தோன்றுகின்றனவா?

இருவரின் எண்ணப் போக்குகளுக்கும் இடையே இருதுருவங்களுக்கும் இடையே உள்ள தூரமல்லவா இருக்கும் போலத் தெரிகிறது.

அவர்கள் இருவரும் மனம் ஒன்றி வாழ்வது ஒரு நாளும் ஒத்துவராத விஷயம் என்பது முன் எப்போதையும் விடத் தெளிவாகத் தெரிந்தது மாதுரிக்கு.

கொஞ்சமேனும் அடிப்படைக் கருத்துக்கள் ஒத்திருந்தால் மேலே பேசலாம். ஆனால் இந்த மாதிரி மனப் போக்குள்ள வனிடம் போய் ஒருவனுக்கு ஒருத்தியைப் பற்றிப் பேசிப் பயன் என்ன?

வீணான வாதப் பிரதிவாதங்களை வெறுத்து, "என் வாழ்வுக்கு இனிக் கண்ணன் மட்டும் போதும்," என்றாள் மாதுரி, தரையில் பார்வையைப் பதித்து.

"எனக்குப் போதாதே" என்று அவன் உடனடியாக உரைக்கவும் மாதுரிக்குப் பகீரென்றது.

அடுத்தவளுக்கு இடம் விட்டு இவள் வழி விலகினால் போதாதா? பிள்ளையும் வேண்டுமா? அப்புறம் அவளுக்கென்று வாழ்வில் என்ன இருக்கிறது?

நின்றுவிட்ட மூச்சை எடுக்க முயன்றபடி, அதிர்ந்து விழித்தவளைச் சட்டெனப் பற்றி இழுத்து இறுக அணைத்தான் சசிதரன்.

மனைவியின் முகத்தைத் தன் மார்பில் அழுத்தி, "அல்லும் பகலும் அரை விநாடிக் காலம்கூட விலகாமல் இருப்பத்து நாலு மணி நேரமும் உன்னை இப்படி அணைத்திருக்க ஆசைப்படுகிறேன். அதற்குமேல் எனக்குத் தேவை என்று ஒன்றும் இல்லை என்றால் உனக்குப் புரிகிறதா? என்றைக்கு நீ தலையைச் சரித்துக்கொண்டு, அப்பட்டமான காப்பி நூற்று ஐந்தாவது தடவையான ஈயடிச்சான் காப்பி என்றாயோ அன்றிலிருந்து இப்படித்தான் என்றால் என்மனம் பற்றி உனக்குக் கொஞ்சமேனும் தெரிந்து கொள்ள முடிகிறதா?" என்று கேட்டு முடிந்தபோது அவனுக்கு தொண்டையைச் செறும வேண்டி இருந்தது.

அந்தக் காற்றுப் புகமுடியாத நெருக்கத்தில் ஒரு கணம் நெகிழ்ந்து நின்றாள் மாதுரி.

ஆனால் இதை எப்படி நம்புவது? அவளும் அவனும் பிறந்தவளே அவன் மீது குற்றம் சாடும்போது குற்றத்துக்கு

நிரூபணம் காட்டும்போது, இவனிடம் மயங்குவது கூடக் கேவலம்தான்.

ஒரு திமிறலில் விலகி, "இதை நம்ப முடிந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்" என்றாள் ஏளனமாக அவள்.

"ஏன். நம்புவதற்கென்ன? வேறு எதற்காக உன்னை நான் மணந்தேன் என்று நினைத்தாய்?" என்று கேட்ட போது அவன் குரல் கடுத்திருந்தது.

"அந்த வீட்டுக்காக" என்றாள் மாதுரி தயங்காமல். "அவ்வளவு பெரிய வீடு எந்த வில்லங்கமும் இல்லாமல் சும்மா கிடைக்கும் என்பதற்காக."

"பெரிய வீடு!" என்று அலட்சியமாகக் கையை வீசினான் சசிதரன்: "கிட்டத்தட்ட கடனிலேயே என்னிடமே முழுகிவிட்ட நிலையில் இருந்த வீடு குறைத்துக் கால்வட்டி அரைவட்டி போட்டாலும் ஒன்றிரண்டு லட்சங்கள் மிஞ்சக் கூடுமா? இதற்காக நான் உன்னை மணக்க வேண்டுமா? முட்டாள்" என்றான் அவன் எகத்தாளமாக.

முதலில் தனலட்சுமி கூறியது, பிறகு அவ்வப்போது ரேவதி சொன்னது எல்லாம் வைத்து பங்களூர் வீட்டுக்காகத்தான் சசிதரன் தன்னை மணந்திருக்க வேண்டும் பணக் கணக்கு பற்றி கேட்டதும் ஏதோ சொல்லி அப்போது தன்னை ஏமாற்றி விட்டான் என்ற முடிவுக்கு மாதுரி வந்திருந்தாள். எனவே சற்றும் தயக்கமின்றி 'வீட்டுக்காக' என்று கூறவும் முடிந்தது.

ஆனால் சசிதரனின் எகத்தாளம் அவளைத் திகைக்க வைத்தது. மற்றவர் பேச்சும் அவளது முடிவும் தவறாயிருக்குமோ என்று விழித்தாள்.

அவள் முகத்தில் பதிந்திருந்த சசிதரனின் பார்வை சட்டெனக் கனிந்தது.

"மது" என்று விளித்து, "நம் கண்ணனைச் சேர்த்திருந்த மருத்துவமனையில் ஒருநாள் அறை வாடகை மட்டும் எவ்வளவு

என்று உனக்குத் தெரியுமா? ஆயிரம் ரூபாய். அதுபோக மருத்துவச் செலவு எத்தனை நாட்கள்? நினைத்துப்பார். எல்லாமாக முப்பது ஆயிரம் ரூபாய்க்கு மேல்ஆகியிருக்காது. இந்தச் செலவு நம் நிலைமைக்கு ஒன்றுமே இல்லை என்றால் உனக்குப் புரிகிறதா? மாதாந்திரச் செலவுகள் போக நம் கம்பெனிகளின் நிகரலாபம் பல லட்சங்கள் என்றால் தெரிந்து கொள்ள முடிகிறதா?" என்று அவன் உரைக்கவும். லட்சம்! லட்சங்கள்' என்று பிரமிப்புடன் தலையசைத்தாள் மாதுரி.

பார்வையோடு குரலும் மென்மையுற "தெரியா விட்டால் கேட்பதுதானே என்னிடம் எல்லாம் நான் கற்றுத் தருவேனே?" என்று இயம்பினான் அவன்.

அந்த மென்மையில் கிறங்கிய மனதைக் கஷ்டப்பட்டு திடப்படுத்திக் கொண்டாள் மாதுரி.

இவன் உருக உருக இரண்டு வார்த்தை சொன்னால் தீர்ந்ததா? அன்று ரவீந்திரன் கூடச் சொல்லவில்லையா? திருமணத்தில குழப்பத்தைக் கிளப்பிவிட்டுத் திருமணத்தை நிறுத்தி மணந்தது வீட்டுக்காக என்று?

அவனது பார்வை அவள் முகத்தை விட்டு விலகுவதாகவே இல்லை போலும். "மீண்டும் என்ன?" என்று விசாரித்தான்.

ரவீந்திரன் பேச்சை அவள் கூறியதும், "திருமணத்தை நிறுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு நான் வரவில்லை மாதுரி. உன்னைப் பார்த்ததும் மனதில் சலனம் தோன்றியபோதும் உடனே திருமணம் என்று அறிந்ததால் அடக்கிக் கொண்டேன் வருத்தம் இல்லை என்றும் சொல்ல மாட்டேன்.

"அன்று ரவீந்திரனுடைய தந்தையின் அருகில்தான் உன் தாத்தா என்னை உட்கார வைத்தார்.

அப்போது மிஸ்டர் சிதம்பரத்தின் நண்பர் ஒருவர். அவரிடம் 'பைசா வாங்காமல் மகனுக்குத் திருமணம்

செய்கிறாயாமே, பணம் என்றால் அப்படிப் பறக்கிறவன் மாறி விட்டது. ஆச்சரியமாய் இருக்கிறதே ஒருவேளை மகன் மயங்கி இவளைத்தான் என்று நின்று விட்டானா?' என்று விசாரித்தார்.

"மது, சிதம்பரம் என்ன சொன்னார் தெரியுமா?" கடகடவென்று சிரித்து விட்டு, தன் நண்பரிடம் "இந்த வீட்டைப் பார்த்தாயாடா குறைந்தாலும் இருபது லட்சம் பெறும். ஒரு நிரந்தர வேலைகூட இல்லாமல் மாதம் மூவாயிரத்துக்கு அல்லாடு கிறவனுக்கு எந்த இளிச்சவாய் இவ்வளவு தரும்? எத்தனை அறைகள் என்று பிறகு காட்டுகிறேன் பார். பாதிக்குமேல் "பாத்ரூம் அட்டாச்டு" மற்றதற்கும் பாத்ரூம் கட்டிவிட்டு தனித்தனி அறையாக வாடகைக்கு விட்டால் குறைவாகக் கொடுத்தாலும் இருபது அறைக்கு மாதம் பத்தாயிரமாவது தேறும்.

"கல்யாணம் முடிந்ததும் கிழவனை விரட்டிவிட்டு, பேத்தியை அந்த வீட்டில் அடைத்து மொத்தப் பணமும், அப்படியே கையிலே.

"இந்த ஐடியா வேற எவனுக்காவது தோன்றிவிட்டால் போயிற்றே. அதனால்தான் ரவிப்பயலைப் பிடித்து அந்தப் பொண்ணை 'லவ்' பண்ணுகிற மாதிரி பாவ்லா பண்ணு என்று நானே அனுப்பினேன்... என்றார்... மாதுரியின் முகம் அடிபட்டாற் போல வாடுவதைக் கண்டதும், தோளைத் தொட்டு, "சாரி கண்மணி இதைச் சொல்லி உன்னை வருத்தப்படுத்த எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனால் அன்றைய என் நிலையை நீ தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். என்றால் சொல்லாமல் இருக்க வழியில்லை" என்று மெல்ல அவளைத் தன் தோளில் சாய்த்து, கூந்தலை மிருதுவாக வருடினான்.

சற்று திடமுற்று, " பரவாயில்லை சொல்லுங்கள்" என்றாள் மாதுரி.

திருமணம் நடந்த பின் வீடுபற்றிய உண்மை தெரிய வந்தால் இந்த மிருகங்களிடையே உன் வாழ்வு என்ன ஆகும்? உன்

தாத்தா எவ்வளவு வேதனைப்பட வேண்டியிருக்கும்? அதை விடத் திருமணம் நின்றாலும் பரவாயில்லை. உண்மையைக் கூறி அதை நிறுத்தி விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன். பின்னர் சிவநேசரிடம் என் விருப்பம் பற்றிக் கூற வாய்ப்பும் கிடைக்கலாம் என்ற எண்ணம் அப்போது தோன்றவே இல்லை என்று பொய் சொல்ல மாட்டேன்.

"ஆனால் அப்போதே உன்னை மணந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவும் அதைவிட மனம் வரவில்லை...

"முதலில் மெல்ல உன்னிடம் பழகி, அதன் பின் நெருங்க வேண்டும் என்றுதான் நினைத்தேன்.

"உன் தாத்தா இறந்தது ஒரு பெரிய அதிர்ச்சி... எனக்கும்தான் மது அதற்கு நானும் ஒரு காரணம் ஆகி விட்டேனே என்ற குறுகுறுப்பு வேறு.

"உன்னை அணைத்து ஆறுதல் கூறலாம் என்றால் நீ வேண்டுமென்றே ஒதுங்குவது போலப்பட்டது. ஒரு குடும்பச் சூழ்நிலையில் நீ பிறக்கக்கூடும் என்றுதான் அக்காவை வரவழைத்தேன்.

"கோயிலில் உன் சிரிப்பையும் நிலவில் வெள்ளிப் பாவையாக நீ உலவியதையும் பார்த்த பிறகு விலகியிருக்க என்னால் முடியவில்லை, மது. ஆனால்... உன் அனாதரவான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டது போல் ஒரு அவமானமாகவும் உணர்ந்தேன்.

மகன் விஷயம் மறைத்தது பற்றி உன்னிடம் மிகவும் கோபம் வந்தது எப்படி வளர வேண்டிய பிள்ளை! எப்படிக் கவிழ்ப்பட விட்டு விட்டாள்! ஆனால் அப்போதும் நீ அழுததும் என் கோபம் நிலைக்கவில்லை."

தன்னைப்பற்றி மறைப்பதற்கு எதுவும் இல்லை என்பது போல அவன் தடங்கல் இன்றிச் சொல்லிக் கொண்டே போனான்.

இதெல்லாம் அன்பில்லாதவன் கூற்றாக இருக்க முடியாது என்று தோன்றியது மாதுரிக்கு. ஆனால் அவ்வளவு

அன்புள்ளவனால் பிரிந்து போனவள் எக்கேடும் கெடட்டும் என்று சும்மா இருக்க முடியுமா? யோசித்து "ஏதோ ஓரிரு காரணங்கள் என்கிறீர்களே, அவை என்னென்ன?" என்று கேட்டாள் மாதுரி.

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, "ஒன்று நீ ரவீந்திரனோடு சென்றிருக்கக் கூடும் என்று நினைத்..." என்று அவன் முடிக்குமுன் ஆத்திரத்தோடு விலகினாள் மாதுரி.

"என்ன சொன்னீர்கள்? வாயைக் கழுவுங்கள். நானா அப்படி நடப்பேன்? ஒருவர் கையால் தாலி கட்டிக் கொண்டு இன்னொருவரோடு... என்னை யாரென்று எண்ணினீர்கள்?" என்று சீறினாள்.

"நீ கண்ணனுக்காக வந்து போனபோது விசாரித்ததில் உண்மை அறிந்து கொண்டு விட்டேன் மாதுரி. ஆனால் முதலில் என்னைப்பற்றி நீ அறிந்திராதது போலவே உன்னைப்பற்றி நானும் சரியாக தெரிந்து கொண்டிருக்கவில்லை அல்லவா? தவறாக எண்ணி விட்டேன் சாரி" என்று சமாதானம் சொன்னான் சசிதரன்.

அது சரிதான் என்று தோன்றவே. "அடுத்த காரணம்," என்று வினவினாள் மனைவி.

சற்று முகம் கறுக்க, "என் உறவை உன்னால் சகிக்க முடியவில்லை. அதனால் விலகி ஓடினாய் என்று எண்ணினேன்" என்றான் அவன் ஒரு மரத்த குரலில்.

அன்றைய நினைவு மாதுரிக்கும் வந்தது. அன்று பிடித்தது என்று ஒரேடியாகச் சொல்வதற்கு இல்லாத போதும் இவன் சொல்கிற மாதிரியும் அவள் உணரவில்லையே அதிலும் ரவீந்திரனோடு பேசும் வரை, மனதில் ஒரு திடம் இருந்ததே! அத்தோடு...

"அதெப்படி அந்த முடிவுக்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள் மாதுரி.

"வேறு என்ன முடிவுக்கு வருவது?" என்று திருப்பிய போது அவன் குரலில் சிறு சினம் இருந்தது. "அதற்கு மறுநினைவு இருக்கிறதா? உன்னைத் தேடி வந்தபோது வெறுப்பாகப் பார்த்து அக்காவின் பின்னே ஒதுங்கினாயே- நேற்றிரவு போல அதே தோற்றம்... அதற்கு வேறு என்ன பொருள் கொள்வது?"

அன்றைய நினைவில் சட்டென மாதுரியின் முகம் கசங்கியது.

அதை எப்படி மறந்தாள்!?

நினைவு இருக்கிறதா என்று அவன் கேட்கும் அளவுக்கு மறந்ததோடு, மீண்டும் அவன் அணைப்பதற்கும் இடம் கொடுத்து.... என்ன கேவலம்!

"அன்று என்ன நடந்தது?"

தன்னால் ஒன்றுமே நடந்திராதது போலக் கேட்பதற்கு அவனுக்குத் தைரியம் இருந்தது. அல்லது அதைத் தப்பாக எண்ணாத மனம் இருந்தது. ஆனால் பாதிக்கப்பட்டவள் பதில் கூற முடியாமல் தயங்கினாள்.

சொல்லு மாதுரி, அன்று என்ன நடந்தது? நம் இருவர் வாழ்வையும் வெகுவாகப் பாதிக்கும் அளவு ஏதோ நடந்திருப்பதை உன்முகம் சொல்கிறது அது என்ன சொல்லு."

இன்னமும் பேசாதிருப்பது மடத்தனம் என்று மாதுரிக்குத் தோன்றியது.

அவனுக்குத் தவறாகக் கூடத் தோன்றாத ஒன்று எப்படி அவளுக்கு வாழ்க்கைப் பிரச்சினை என்பதை அவனுக்குப்புரிய வைத்துத்தான் ஆகவேண்டும்.

இருவரின் மனோபாவங்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை எடுத்துச் சொல்லி இதமாகவே விலகி விட முயற்சிப்பது மேல்.

அவனும் அன்பு இல்லாதவனாகவும் தெரியவில்லை. எனவே ஒருவேளை அவன் விரும்பும் பலனாகப் பிள்ளையை விட்டு கொடுக்கலாம்.

ஆனால் தனலட்சுமி பாவம், அவளைக் காட்டிக் கொடுக்காமல், மாட்டிவிட்டு விடாமல் கவனமாகப் பேச வேண்டும்.

எந்த மாதிரி எடுத்துச் சொல்வது நல்லது என்று யோசித்தபடி பார்வையை உயர்த்தினாள் மாதுரி.

அவன் முகத்திலேயே கவனமாயிருந்த பார்வையைச் சந்தித்ததும் அவளுக்குத் தொண்டையை அடைத்தது. இருபத்துநாலு மணிநேரமும் கையணைப்பில் என்கிறவனால் எப்படி முடியும்? இருதாரம் கொண்டு, இருவரையும் சந்தோஷமாக வைத்து என்கிறார்களே, அது மாதிரியா? இதென்ன விக்கிரமாதித்தன் கதையா? அல்லது அர்ஜூன் மகாராஜனா?

"என்ன சொல்லு எதையும் மறைக்காமல் கேட்டு விடு" என்று மீண்டும் உந்தினான் அவன்.

"அன்று நீங்கள்... பத்மினியின் அறையிலிருந்து.. வந்தீர்கள்..." என்று தொடங்கினாள்.

"ஆமாம்... அதற்கென்ன?" என்று கேட்டான் அவன் புருவங்களிடையே முடிச்சுடன்.

தனலட்சுமி போலச் சட்டெனக் கொச்சையாகப் பேச மாதுரியால் முடியவில்லை.

"அங்கே.... அங்கே வெகுநேரம் இருந்துவிட்டு வந்தீர்கள்."

"ஆமாம் அதிலும் தான் என்ன இருக்கிறது? பத்மினி என் தமக்கை மகள். பிறந்ததிலிருந்து நான் தோளில் தூக்கி வளர்த்த குழந்தை. அவள் அறையில் நான் எவ்வளவு நேரம் இருந்தாலும் எப்போது வந்தாலும் தான் என்ன?" என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான் சசிதரன்.

அவ்வளவு நேரம் இருந்த பாவனை மாறியது போல... பிழை புரிந்து விளக்கம் சொல்ல வேண்டிய நிலையில் இருந்த

குற்றவாளியும் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டிய நீதிபதியும் இடம் மாறி விட்டாற் போல உணர்ந்தாள் மாதுரி.

அவளிடமே கேட்ட அவனது குரல் அவளை மட்டம் தட்டுவதை உணர்ந்து. அதில் சட்டென மூண்ட ஆத்திரத்தில், "ஆனால் நீங்கள் சும்மா வரவில்லை, திருட்டுத்தனமாகக் கதவைத் திறந்து சாத்திவிட்டு; கள்ளத்தனமாகக் கலைந்த தலையைக் கோதிவிட்டுக் கொண்டு..." என்று அவன் படபடத்ததில் குறுக்கிட்டு, "ஷட்அப்" என்று அடிக்குரலில் சீறினான் சசிதரன்.

செய்வதையும் செய்துவிட்டுச் சீறல் வேறா?

சினம், மிக, 'உள்ளதைச் சொன்னால் உடம்பு எரிகிறதா' என்று சூடாகக் கேட்க எண்ணி வாயைத் திறந்தவள் நம்ப இயலாதது போன்ற வியப்புடன், 'நீயா இப்படி' என்று கேளாமல் கேட்ட பார்வையில் பேச்சிழந்து விழித்தாள்.

அவள தயக்கமும் ஆத்திரமும் அருவருப்புமாக அவன் பொரிந்து கொட்டிவிட்டான். "சீச்சீ, மாதுரி இது என்ன பேச்சு? நீ இவ்வளவு மட்டம் என்று நான் எண்ணியதே இல்லையே? பத்மினி என் உடன் பிறந்த மகள், மாதுரி. பிறந்ததிலிருந்து நான் தோளில் தூக்கி வளர்த்த பெண். தமக்கை மகள் என்றால் என்ன! தன் மகள் என்றால் என்ன? இந்த உறவில் தப்பு காணும் அளவுக்கு நீ தரம் இறங்குவாயா?

பெற்ற தகப்பன் இருந்தும் இல்லாத வேதனையில், அந்தத் தகப்பன் நினைவில் ஏங்கித் தவிக்கும் ஓர் அறியாப் பெண்ணை, அந்தத் தகப்பனின் நிலையில் இருந்து சமாதானப்படுத்தினால் அதைப் போய்க் கொச்சைப் படுத்துவதா?

திருட்டுத் தனமாம்! கள்ளத்தனமாம்!

"தந்தையின் ஏக்கத்தில் வெகு நேரம் கண்ணீர் வடித்த அந்தக் குழந்தை அழுது ஓய்ந்து ஒருவாறு உறங்கியிருக்கிறாள்?

அவள் விழித்து மீண்டும் வேதனைப் படக்கூடாது என்று ஓசை எழுப்பாமல் வெளியே வந்தால் அதன் பெயர் திருட்டுத்தனமா!

இந்தச் சிறு பெண்ணின் துன்பத்தை தீர்க்க எந்த வழியும் காணோமே என்ற கவலையில் தன் போக்கில் கையால் தலையை தடவிக் கொண்டால் அதற்குக் கள்ளத்தனம் என்று பெயர் சூட்டுவதா?

ஆக இன்னும் அதே கீழ்த்தரமான சந்தேகத்தினால்தான் அந்தப் பார்வையும் இந்தக் கிளம்பலுமா?

"முதுகு ஓடிய உழைத்து, மகனையும் உன்னையும் கவுரவமாகக் காப்பாற்றி வந்திருக்கிறாய் என்று உன்னை எவ்வளவு உயர்வாக மதித்திருந்தேன். உன்னுள் இப்படி ஓர் ஈனம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையே!"

வெறுப்பும் வேதனையுமாகக் கணவன் பேசப்பேச மாதுரி வெகுவாகக் கலங்கிப் போனாள்.

21

தன் கணவன் மகா மட்டமான மனிதன் என்று எண்ணி, இப்படி ஒருவனோடு தன்னைப் பிணைத்த விதியை எண்ணி மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தவள் மாதுரி. இப்போது அது மாறி, சசிதரன் மதிப்பும் அவள் மிகவும் கீழிறங்கிப் போன இந்த நிலைமை அவளுக்கு இன்னமும் அதிக வேதனையையே அளித்தது.

சசிதரன் நல்லவன் போல நடித்து அவளை ஏமாற்று கிறானோ என்ற எண்ணம் வரவில்லை. அவன் குரலிலும் முகத்திலும் வெளிப்பட்ட உள்ளார்ந்த வருத்தம்

பொய்யாய் இருக்க முடியாது என்று அவள் சர்வ நிச்சயமாய் உணர்ந்தாள்.

இந்த மட்டத்துக்கு இறங்கினேனே என்று கழிவிரக்கம் கொள்கையில் தானாக தெளிவாக உரைத்தாளே... மாதுரிக்குச் சுரீரென்று உறைத்தது. உரைத்தது எல்லாம் தனலட்சுமிதான்.

சசிதரனைப் பற்றி இப்படி ஓர் ஐயம் எழுமாறு முதலில் குறிப்புக் காட்டிப் பேசியதும், பிறகு வெளிப்படையாகக் கூறியதும் எல்லாம் தனலட்சுமிதான். அவள் இப்படி ஒரு கல்லைத் தூக்கித் தலையில் போடுவாள் என்று மாதுரி கனவிலும் கருதவில்லையே!

தன் சூது வெளியாகி விடக்கூடாது என்பதற்காகத்தான். கொண்டவன் துணை இல்லாதவள். ஊட்டிக் கொடுத்து விடாதே. அது இது என்று நாடகம் போட்டாளா? அதில் முழுமையாக இப்படி ஏமாந்து விட மாதுரிதான் எவ்வளவு முட்டாளாக இருக்க வேண்டும்!

இந்த நிலையில்கூட தனலட்சுமிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்று மாதுரி எண்ணவில்லை. ஆனால் அவனது மதிப்பில் இறங்கி விட்ட மனைவி கூறுவதைச் சசிதரன் நம்ப வேண்டுமே.

அவளைப் பார்க்கக் கூடப் பிடிக்காதவன் போல, சன்னல் அருகே சென்று வெளிப்புறம் நோக்கியபடி நின்ற கணவரின் முதுகை வேதனையோடு வெறித்தாள் மாதுரி.

என்ன ஆனாலும் இனி எதையும் அவனிடம் மறைக்கக் கூடாது என்று உறுதி கொண்டவளாய், "அந்த..... அந்த கொச்சைப்படுத்திப் பேசியது நான் இல்லை. உங்கள் அக்காதான்" என்றாள்.

"அக்காவா?" சரேலெனத் திரும்பினான் சசிதரன். "என்ன உளறல் இது? தன் மகளைப் பற்றிக் கேவலமாக இப்படி ஒரு கதை பரப்ப அவள் என்ன முட்டாளா? அப்படியே அவள்

சொல்லியிருந்தாலும் அது பற்றி நீ முன்பே என்னிடம் கேட்டிருக்கலாமே. ஏன் கேட்கவில்லை?" என்றான் நம்பாத குரலில்.

அவனது அவநம்பிக்கையும் 'மது' வென்ற அழைப்பு மறைந்த விதமும் அவளை மிகவும் வாட்டின. ஆனால் இது அவளது வாழ்வுக்கான போராட்டாம். போராடித்தான் ஆக வேண்டும் என்ற நினைப்புடன், எப்படிக் கேட்பது?" என்று திருப்பிக் கேட்டால் மாதுரி. "அவர்கள் உங்களுடைய சகோதரி. பிறந்ததிலிருந்து உங்களோடு பழகியவர்கள். ரத்த உறவு. உங்களைப் பெறாததாய்" என்று நீங்களே சொன்னீர்கள். அவர்களைப் பற்றி உங்களோடு இருபது நாள் கூடப் பழகியிராத நான் உங்களிடம் வந்து இப்படி குற்றம் சாட்டி எப்படிப் பேச முடியும்? உங்களைப் பற்றியும் எனக்குச் சரியாகத் தெரியாது அத்தோடு அவர்களும் கண்ணு, தங்கம் என்று பிரியம் காட்டவும் நானும் நம்பிவிட்டேன்."

"ப்ளீஸ் மாதுரி" என்றான் அவன் அலுப்புடன் "தயவு செய்து உன்னை மேலே இறக்கிக் கொண்டே போகாதே. ஏதோ கீழ்த்தரமாய் நினைத்தாய், நடந்தாய் என்றால் அத்தோடு விட்டுவிடு அந்தப் பழியை அடுத்தவர் மேல் போட்டு உன்னை உத்தமியாகக் காட்டிக் கொள்ள முயற்சி செய்து இன்னமும் நிலைமையை மோசமாக்காதே. இப்போது என்ன? இந்தப் பிழைக்காக உன்னை ஒதுக்கிவிடுவேன் என்று நினைத்தாயா? நீ என் மனைவி என் மகனுடைய தாய் நீ கொலையே செய்தால் கூட உன்னைக் காக்கும் பொறுப்பு என்னுடையது. அந்த நிலை ஒரு நாளும் மாறாது. அத்தோடு முன்பு கொண்ட என் மனம் உன்னை ஒரு நாளும் அடியோடு ஒதுக்கச் சம்மதியாது. இத்தோடு திருப்தி அடை." என்றான் அவன்.

ஆனால் இப்போது அவளுக்கு இது போதாதே!

அவனது மதிப்பு மரியாதை, முழு அன்பு அத்தனையும் அவளுக்கு வேண்டுமே!

அவனை மீண்டும் அறிந்தபின். அன்றைய இரவுக்கு ஏதாவது விளக்கம் இருக்கக்கூடும் என்று திரும்பத் திரும்ப தோன்றியதை சற்று யோசித்துப் பாராமல் ஓர் உன்னதமான அன்பை மடத்தனமாக இழந்துவிட்ட கழிவிரக்கத்தில் அவள் துடித்துப் போனாள்.

அந்த உண்மையான அன்பை மீண்டும் அடைய ஏதாவது வழியிராமல் போகாது. எதுவோ.... அவளுக்கு உதவ என்று என்னவோ இருக்கிறது என்று உள்ளூர உணர்ந்தாள் மாதுரி.

ஆனால் அது என்னவென்று சமயத்தில் புரிபடாமல் திகைத்தாள் மாதுரி உதவும் விதமாக ஏதாவது கிடைக்காதா என்பது போல இங்கும் அங்கும் பரக்க விழித்துத் தேடின அவளது விழிகள்.

கீழ்த் திசையில் சூரியன். தன் செங்கதிர் பரப்பி உலகை ஒளிமயமாக்கத் தொடங்கி இருந்தான்.

ஆமாம் அவள் வாழ்விலும் விடிவு வந்துதான் ஆக வேண்டும்.

ஆனால் எப்படி?

யோசித்தும் ஒன்றும் புரியாமல் போகவே அழுகை வந்தது அவளுக்கு.

கூடவே ஆத்திரமும் வந்தது. முழு மூளையையும் பயன்படுத்தி யோசிக்க வேண்டிய நேரத்தில் அதற்குத் தடையாக இது என்ன அழுகை..? அழுகை..?

ஏதோ தோன்ற சட்டென நிமிர்ந்து "பத்மினி இப்படி அடிக்கடி தந்தையை நினைத்து அழுவாளா?" என்று வினவினாள்.

உதட்டை ஏளனமாய் பிதுக்கினான் அவன்.

"பத்மினி அழுது நீ பார்த்திருக்கிறாயா? இம்மாதிரியான அவளுக்கு ஆத்திரம்தான் வரும். கையில் [illegible]

தூக்கி எறிவாள். நான் கூட அக்காவிடம் பல தடவை எச்சரித்திருக்கிறேன். நாளை திருமணம் ஆக வேண்டிய பெண் இந்தக் குணம் நல்லதில்லை. பார்ப்பவர்கள் தவறாக நினைப்பார்கள் என்று."

பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்று முன்பு அவன் கூறியது தன்னைக் குறித்து என்று தப்பாக எண்ணியது மாதுரிக்கு நினைவு வந்தது. கணவனைப் பற்றி அவள் எதைத்தான் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறாள். தன்னிடமே அலுப்பு கொண்டவளாக மேலே அவன் பேச்சைக் கவனித்தாள்.

"மிகவும் மனம் நொந்தால் மட்டும்தான் அவள் அழுவதே அழத் தொடங்கினால் நிறுத்த மாட்டாமல் கண்ணீர் பொங்கிக் கொண்டே இருக்கும் அப்படி அவள் அழுது நான் பார்த்திருப்பது இவ்வளவு ஆண்டுகளில் இரண்டு மூன்று முறைதான் இருக்கும். அவள் வயது வந்த போது ஒருநாள்; பங்களூரில் ஒருநாள். அப்புறம் நேற்று இரவு ஏன். இதில் ஏதும் புதுக் கதை கண்டுபிடிக்கப் போகிறாயா?" என்றான் சசிதரன் கசிந்த குரலில்.

இருக்கிறது ஏதோ இருக்கிறது என்று பரபரத்தது மாதுரியின் மனம்.

பத்மினியின் முதல் அழுகையை அவள் பெரிதாக மதிக்கவில்லை. அன்றைய அதிர்ச்சியில் அழுவதும் இயற்கைதான்.

ஆனால் அடுத்த இரு தினங்களுமே மாதுரியின் வாழ்விலும் மிகவும் பாதிப்பை ஏற்படுத்திய நாட்களாக இருந்தது வெறும் தற்செயல் என்று நம்ப மாதுரி தயாராக இல்லை.

கடைசி இரு தினங்களும் மாதுரி அவளுடைய கணவனோடு நெருங்கி விடாமல் விரட்டுவதற்காக நடத்தப்பட்ட நாடகங்கள் என்றால்...ஆனால் பத்மினியால் அப்படி நடிக்க முடியுமா? மணிக்கணக்காக கண்ணீர் வடிப்பது அவளுக்கு

முடிகிற காரியமா? ஊகூம் மாதுரியாலேயே ஒத்துக்கொள்ள முடியவில்லை.

இந்தப் புதிருக்கு வேறு ஏதோ விடை இருக்கிறது என்று நிச்சயமாக நம்பி, மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தாள்.

ஆனால் அவளது இந்த முயற்சியையே கருவருத்தவம் போல விலகிச் சென்ற சசிதரன் உறங்கிய மகனிடம் சென்று அவனைப் பார்த்தபடி நின்றான்.

அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதால் தன் முயற்சியை அறைகுறையில் விட மாதுரிக்கு மனமில்லை. தான் மோசமானவள் இல்லை என்பதை அவனுக்கு நிரூபித்தே ஆக வேண்டும்.

பிடிவாதமாக அந்த இரு தினங்களையுமே மனதில் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள்.

பங்களூரில் முதல் இல துளைத்துத் துளைத்துக் கேட்ட தனலட்சுமி அப்புறம் அக்கறையற்றுப் போனாளே உதட்டு வெடிப்பு. கிளிசரின் என்று தன்னைப் பற்றித்தான்... கிளிசரின்!

முன் தினமும் கிளிசரின் வாங்கி வரச் செய்தாளே! அதை மறைக்க வேறு முயன்றாளே... ஆனால் உதட்டில் ரத்தம் கசிந்ததே... அப்போதுகூட... அப்போது முரண்பாடாக உணர்ந்தது என்னவென்று சட்டெனப் புரிந்தது மாதுரிக்கு.

உதட்டில் தானாக வெடிப்பு ஏற்பட்டால் குறுக்கு வாட்டில் புண் இருக்கும். உதட்டில் பல்லால் அழுத்திக் காயப்படுத்திக் கொண்டால்தான் தனலட்சுமிக்கு இருந்தது போல நீளவாட்டில் புண் இருக்கும். ஆக தனலட்சுமியின் உதட்டு வெடிப்பு பொய்! கிளிசரினை நியாயப்படுத்துவதற்கான நாடகம். ஆனால் கிளிசரின் எதற்கு?

கிளிசரின் கண்ணீர்!

சரசரவென்று புதிரின் எல்லாப் பகுதிகளும் உரிய இடத்தில் அமர்ந்து கொள்ள வடிவம் தெளிவாயிற்று.

சினிமாவில் கண்ணீர்க் காட்சிகளுக்கு கிளிசரினைப் பயன்படுத்துவார்கள் என்பது சினிமா நடிகை பெயரை மகளுக்கு வைக்கும் அளவுக்கு ரசிகையான தனலட்சுமிக்கு தெரிந்திருந்ததில் வியப்பில்லை.

எப்படியோ மிரட்டி, பத்மினியின் கண்களில், கிளிசரினை விடச் செய்து, அவள் அப்பா நினைவில் அழுவதாகக் கூறிச் சமாதானம் செய்ய சசிதரனை அவளிடம் அனுப்பி வைத்துவிட்டு, அவன் அங்கே சென்றதை மாதுரி அறியுமாறு செய்து, அதற்கு வேறு காரணம் கூறி நம்ப வைத்து... அடேயப்பா!

முத்து கூறியது ஒப்பிப்பது போல் இருந்தது, நினைவு வர எல்லாமே முழுக்க முழுக்கத் தெளிவாயிற்று அவளுக்கு.

இதைச் சசிதரனிடம் சொல்லிவிட்டால் விஷயம் முடிந்தது.

முகம் பிரகாசமுறக் கணவனைப் பார்த்தாள் மாதுரி.

அவன் முகம் வேறுபுறம் திரும்புவதைக் காணவும் அதுவரை அவன் அவளைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தான் என்பது புரிந்தது.

அவன் முகம் திரும்பியது சற்று வேதனையைத் தந்த போதும் அதை ஒதுக்கிக் கணவனிடம் ஓடினாள் மாதுரி. "எனக்காக ஒன்றே ஒன்று செய்வீர்களா? பத்மினியிடம் அவள் தன் கண்களில் ஏன் கிளிசரின் ஊற்றினாள் என்று ஒரே ஒரு கேள்வி, பிளீஸ், கேளுங்களேன்" என்றாள் கொஞ்சுதலாக.

முகம் கடுமையுற, "நீ மேலும் மேலும் கீழே இறங்குகிறாய், மாதுரி, கண்ணில் கிளிசரினை விட்டுக் கொண்டு அவள் நடித்தாள் என்கிறாயா? அதை நான் வேறு அவளிடம் விசாரிக்க வேண்டுமா? நோ. நிச்சயம் முடியாது. அந்த மாதிரி அவளை அவமானப்படுத்த நான் தயாரில்லை" என்று திட்டவட்டமாக அறிவித்தான் சசிதரன்.

இப்படி சொன்னால் எப்படி?

விசாரித்தால்தானே உண்மை தெரியும்? விசாரிப்பதே அவமதிப்பதுதான். அதைச் செய்ய முடியாது என்கிறானே இவன்?

ஆனால் இந்த அளவுக்கு வந்துவிட்ட பிறகு இடையில் விட மாதுரிக்கு மனமில்லை.

இதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்கிற எண்ணம் வர அவளுக்கு ஒரு தூண்டுகோள் வரவேண்டும்.

சட்டென்று ஒன்று தோன்றவும், "நீங்கள் நேற்று எப்போது- சரியாக எத்தனை மணிக்குத் திரும்பி வந்தீர்கள்." என்று விசாரித்தாள்.

"நீங்கள் திரும்பிவர எட்டு எட்டரை ஆகும் என்று அக்கா சொன்னார்கள். அதனால் இடையில் பாக்கியிருந்த வேலைகளை முடித்துவிட்டு நான் வந்தபோது மணி... ஏழரைக்கு மேல் இருக்கும். ஏன், இதில் என்ன துப்பு கண்டு பிடிக்கப் போகிறாய்!" என்றான் அவன் சற்று ஏளனமாக.

ஏழரை.

மாதுரிக்கே தனலட்சுமியின் வஞ்சனை தாங்க முடியவில்லை.

சற்று இரக்கத்துடன் கணவனை நோக்கி, "நீங்கள் [illegible] வழக்கம் போல் வந்ததாகவும் வந்த உடனே [illegible] அறைக்குள் போய்விட்டதாகவும் முத்து சொன்னான்" என்றாள்

அவன் சற்றே திடுக்கிட்டு நிமிரவும், "ஆனால் அவன் எதையோ உருப்போட்டு ஒப்பிப்பது போல எனக்குத் தோன்றியது" என்றாள் தெளிவான உச்சரிப்புடன்.

சசிதரன் திடுக்கிடக் காரணம் இருந்தது. ஏனெனில் அவன் சற்று நேரத்துக்கெல்லாம், அவனிடம் ஓடி வந்து, பத்மினி அழுவதாகக் கூறியதும் முத்துதான்.

ஒரு விநாடி யோசித்தவன் "என்னுடன் வா" என்று மாதுரியை அழைத்துக் கொண்டு பத்மினியின் அறைக்குச் சென்றான்.

அறை வாயிலில் அவளை நிறுத்தி விட்டு, அவன் மட்டும் உள்ளே சென்று படுக்கையில் தலையணை மேல் கால் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்த பத்மினியை "என்ன மாமா காலையிலேயே எழுப்புகிறீர்கள்" என்று சிணுங்கியவளை வெறித்து நோக்கி, "பத்மினி நீ ஏனம்மா நேற்று கண்களில் கிளிசரின் விட்டாய்?" என்று கேட்டான்.

"அதுவா?" என்று தூக்கக் குரலில் இழுத்தவள், "அம்மா தான் ஊற்றிக் கொள்ள வேணும் என்றார்கள் மாமா. அப்போது தான் நிறையக் கண்ணீர் வருமாம், அப்படி அழுதால்தான் இங்கேயே இருந்து கொண்டு வீடியோ பார்க்க முடியுமாம். இல்லாவிட்டால் அவள் இல்லை அந்த மாதுரி, அவள் எங்களை நடுத்தெருவுக்கு விரட்டி விடுவாளாம்... மாமா, கண்ணனை வைத்துக் கொண்டு அவளை விரட்டி விடலாமா, மாமா? மு...முன்னே மாதிரி... அய்யோ, எனக்கு இன்னும் தூக்கம் வருது. நான் தூங்கப் போகிறேன்" என்று மீண்டும் படுத்து விட்டாள்.

அதிர்ந்து போய் நின்ற கணவனைப் பார்க்கையில் பரிதாபமாக இருந்தது மாதுரிக்கு.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் அசையாமல் நின்றவன் திரும்பி மடமடவென்று வெளியே வந்து, மாதுரியைக் கையைப் பிடித்து அவளது அறைக்கு அழைத்து வந்தான்.

"முதலில் நான் உன்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் மாதுரி. இன்றைக்காக மட்டுமல்ல. இரண்டரை ஆண்டுகளாக அநியாயமாய் நீ அனுபவித்த துன்பங்கள் அத்தனைக்காகவும் சேர்த்துத்தான். மது... சாரி மது" என்றான் வேதனையோடு.

அவன் வருந்துவது பொறுக்க மாட்டாமல் "அதில் உங்கள் மீது ஒரு தப்பும் இல்லையே" என்றாள் மாதுரி இதமாக. "இந்த அளவு அன்றே நான் யோசித்திருந்தால் யாருக்கும் ஏந்தத் துன்பமும் நேர்ந்திராது" என்றாள் பழியைத் தன்மீது ஏற்று.

நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக் கொண்டு "சொல்லு மாதுரி, நடந்தது அத்தனையும் சொல்லு. அக்கா சொன்னது எதையும் மறையாமல் எல்லாவற்றையும் சொல்லு" என்று கேட்டான் சசிதரன்.

அவள் கூறுகையில் குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, "நாத்தனாரின் குற்றங்களைப் பெரிதாகக் காட்டாமல் [illegible] டுப்படுத்திக் கா[illegible]ர்களாக்கும்!" என்றான் ஏளனமாக.

உடனே முகம் மாறினான்: "பாதிச் சொத்தாவது ஒன்றாவது. அக்காவுக்குத் திருமணத்தின் போதே நிறையச் செய்தார் அப்பா. டீ எஸ்டேட், காபித் தோட்டம், பென்ஸ் கார் அது இது என்று... கிட்டத்தட்ட பாதிக் கணக்கு வைத்துத்தான் செய்தார். நகைகளும் அம்மாவுடையது போல வைரம், ரூபி, எமரால்ட் என்று செட் செட்டாகத்தான். ஆனால் எல்லாவற்றையும்- நகைகள் உட்பட அக்கா அத்தான் இருவருமாகத் தோற்று வந்தார்கள். குதிரைப் பந்தயம் அக்காவும் சேர்ந்து செய்தார்கள் என்பதில்தான் அப்பாவுக்கு மிகவும் வருத்தம். அப்போது அப்பா சொன்னபோது நான் அவ்வளவாக நம்பவில்லை. அக்கா அழுத அழுகையால் நான் அவர்களைத்தான் நம்பினேன்.

"அம்மா அப்பா இரண்டு பேருக்குமே [illegible] பற்றித்தான் மிகவும் கவலை. ஒரு [illegible] அவளுக்கு ஒரு நல்ல வாழ்வு [illegible] பொறுப்பு என்பது ஏன் [illegible] புரிகிறது.

"முன்பே அத்தானுடைய பெற்றோருடன் தகராறு செய்து கொண்டு பிரிந்து விட்டார்கள். பிறகு ஒன்றுமில்லாமல் விட்டுவிட்டு அத்தான் கண் காணாமல் போன பிறகு பத்மினியோடு அக்கா இங்கே வந்து சேர்ந்தார்கள்.

"வீட்டின் ஒரே சின்னக் குழந்தையிடம் எல்லோருக்குமே மிகுந்த அன்புதான்."

"அத்தான் பிரிந்து சென்ற பிறகு அக்கா பண விஷயத்தில் கொஞ்சம் ஒரு மாதிரி நடப்பதுண்டு. அறுவடைக்குப் போனால் அதில் கொஞ்சம் அமுக்குவது. வீட்டுச் செலவுப் பணத்தில் கொஞ்சம் எடுப்பது என்று கோடீசுவரியாக வாழ வேண்டியவள், பாவம் என்று காணாதது போல விட்டு விடுவேன்.

"அம்மாவின் நகைகளைத் திருமணம் போல விழாக்களுக்குச் செல்லும்போது கேட்டு வாங்கி அணிந்து கொள்வதும், பத்மினிக்கு அணிவிப்பதும், மறந்து போய்-மறந்து விட்டாற்போல நடித்து என்று இப்போது தோன்றுகிறது நெடுநாள் கழித்துத் திருப்பித் தருவதும் அக்காவின் வழக்கம். இதிலும் தவறாக எனக்கு ஒன்றும் தோன்றியது இல்லை" என்னைப் பொறுத்தவரை பத்மினி மகள் மாதிரி தான். என் மனைவி என்று வருகிறவளுக்கும் பத்மினி மகள் போலத்தானே; அக்கா ஒரு சகோதரி போலத்தானே. கொடுக்க மாட்டாளா என்று எண்ணிக் கொள்வேன். ஆனால் அவளுக்கு உரிமையற்ற இந்த நகை. பொருள் மீது அக்கா ஆசை வைக்கத் தொடங்கக்கூடும் என்று எனக்குத் தோன்றியது இல்லை.

"...உறவில் ஒரு பெரியவர் ஒரு தரம் என்னிடம் சொன்னார். உன் அக்கா இருக்கும் வரை உனக்குத் திருமணமே ஆகாது என்று. அப்போது அவர் மேல்தான் ஆத்திரம் வந்தது, என்னுடன் பிறந்தவள் எனக்காக மாசு மறுவற்ற வைரம் தேடுகிறாள். அதுபற்றி இந்த மனிதருக்கு என்ன தெரியும் என்று ஏளனமாக நினைத்தேன்... ஆனால்... ச்சு, என் அக்கா இப்படியா?"

மிகுந்த வேதனையில் பேசுவது மாதுரிக்குப் புரிந்தது. பெற்றாத தாய் என்று அவன் போற்றியிருந்தவனிடமிருந்து கிடைத்த குத்து அல்லவா? வலி மிகுதியாகத்தான் இருக்கும்.

ஆனால் கணவன் வேதனைப்படுவதை அவளால் தாங்க முடியவில்லை. இப்போது உயிருக்கும் மேலாகிவிட்ட கணவன் அல்லவா?

சற்றுமுன் அவன் அவளுக்கு ஆறுதல் அளிக்க முனைந்தது நினைவுவர அவனை நெருங்கி அவனது தோளை மென்மையாக வருடி, "கவலைப்படாதீர்கள் எல்லாம் சரியாகிவிடும்" என்றாள் ஆறுதலாக.

மனைவியின் கையைப்பற்றி நெஞ்சோடு அழுத்திக் கொண்டான் சசிதரன்.

சற்று நேரம் தீவிரமாக யோசித்தவன், "அக்காவையும் பத்மினியையும் அவர்கள் வீட்டுக்கு அனுப்பிவிடப் போகிறேன் மது" என்று அறிவித்தான்.

இவ்வளவு தூரம் சென்ற நாத்தனார் இனியும் என்னென்ன செய்வாளோ என்று மாதுரிக்கு உள்ளூர பயம் தான். ஆனால் இந்த ஏற்பாடு அவளுக்கு அவ்வளவாக உடன்பாடாக இல்லை. "அய்யோ வேண்டாம். பிறகு அவர்களை நான் வந்து விரட்டியதாக பேர்வரும் பத்மினி கூட சும்மாவே அப்படித்தான் மிரண்டு கொண்டு இருக்கிறாள் அதை மெய்யாக்க வேண்டாம்" என்று தடுக்க முயன்றாள்.

"இல்லை மது, உனக்கு விஷயம் புரியவில்லை" என்றான் அவள் கணவன். "இப்போது நாமாக ஒன்றும் பேசாவிட்டாலும் நீ இங்கேயே இருப்பதிலிருந்தே தன் சதி வெளியாகிவிட்டது என்பது அக்காவுக்குப் புரிந்து போகும் என் முகத்தைப் பார்த்தும் பேச அக்காவுக்குக் கூசும். அதே போல, [illegible] பிரதியாக அவர்கள் செய்த அநியாயம் பற்றியும் [illegible] அவர்களைப் பார்த்துப் பேச எனக்கும் கூச [illegible]

ஒரேயடியாய் ஒதுக்கிவிட மாட்டேன். ஆனால் கொஞ்ச காலம் பிரிந்து இருப்பது இருவருக்கும் நல்லது. அதிலும் அவரவருக்கு உரிய இடத்தில் இருப்பது எல்லோருக்குமே நல்லது... இன்னொன்றும் கூட..."

"என்னது?"

"மாமியார் மாமனார் என்ற மூத்த உறவினரோடு ஒத்து வாழ்வது எப்படி என்று அக்காவுக்கும் தெரிய வேண்டும் இல்லையா? முன்போல் சொந்த சொத்துக்கள் கணக்கில்லாத கைப்பணம் என்று இல்லாதபடியால் அவர்களோடு இனித் தகராறு பண்ணமாட்டார்கள் என்று தான் தோன்றுகிறது. கூடவே, பத்மினிக்கும் தான் நினைத்த தெல்லாம் நடக்கிற இந்தச் சூழ்நிலை மாறுவது நல்லது என்று நினைக்கிறேன். இந்தக் குழந்தைத்தனம் மாறி அவளும் ஒரு பெண்ணாக உருவெடுக்க அது ஒன்று தான் வழி. அதற்காக அவளையே கைவிடுவேன் என்று இல்லை. அம்மா அப்பாவுக்குக் கொடுத்த வாக்குப்படி அவளுக்கு நல்லதொரு வாழ்வை அமைக்கும் பொறுப்பை நான் கட்டாயமாக, நல்ல படியாக நிறைவேற்றுவேன். ஆனால் இனி அவள் இருக்க வேண்டிய இடம் அவளுடைய தாத்தா பாட்டி இடம்தான்" என்றான் தீர்மானமாக.

"அவர் குணம் எப்படி?" என்று யோசனையோடு வினவினாள் மாதுரி.

"நல்லவர்கள் தான், கொஞ்சம் கண்டிப்பு உண்டு இப்போது பத்மினிக்கும் அக்காவுக்கும் அதுதானே மிகவும் தேவை. முன்னெல்லாம் அக்கா சொன்ன கதைகளைக் கேட்டு அவர்கள் மகாமோசம் என்று நினைத்திருந்தேன். ஆனால் மது, அம்மா அப்பா இருவருக்குமே அவர்களிடம் நல்ல அபிப்ராயம் உண்டு. 'அதிலிருந்தே' நான் அறிந்திருக்க வேண்டும், அவர்களது குடும்பத்தையே கலைத்து விட்ட பிறகுகூட அக்காவைப் பற்றி அவர்கள் குறைவாகப் பேசினார்கள் என்று காதில் விழுந்தது

இல்லை... திருமணம் போன்ற விழாக்களில் பார்க்கும்போது உன்னைப் பற்றிக் கேட்டார். உன் தாத்தாவுக்கு ஏதோ தூர உறவாம் "சிவநேசர் நல்லவர் அப்பா, எங்கேயோ ஏதோ தப்பு நேர்ந்திருக்க வேண்டும்! தீர விசாரி என்பார். அதுபோல் சந்தர்ப்பங்களில் கூடப் பேத்தியைப் பார்த்துக்கொள் என்பார்களே தவிர அக்காவைப்பற்றி குறை கூறியது இல்லை... பெரிதாக சொல்ல வந்துவிட்டார் என்று நினைத்துக் கொண்டு வேண்டாவெறுப்பாய்த் தலையாட்டி விட்டு வந்து விடுவேன்... என்னவோ, ஆண்டுக்கு ஒரு தரம் பத்மினி வந்து தங்கும் பதினைந்து நாட்களுக்காக ஏங்குவது போலப் பேசுவார்கள். அப்போது நம்பாமல் வேஷம் என்று ஒதுக்கினேன்... அதற்கெல்லாம் இப்போது ஈடுகட்டப் போகிறேன்... பேசிக் கொண்டே போனவன், "இனி இந்தப் பேச்சு போதும் என்று நினைக்கிறேன்" என்று கூறி மனைவியின் கையைப் பற்றி லேசாக முத்தமிட்டான்.

பார்வையில் பரவசப்புடன், "அத்தோடு?" என்று அவன் இழுக்கவும், "அத்தோடு?" என்று ஆவலாக கேட்டாள் மாதுரி.

வெண்பற்கள் பளிச்சிட முறுவலித்தபடி, "அத்தோடு திடீரென்று நான் ஒரு பக்கா சுயநலவாதியாக மாறிவிட்டேனா, நான் வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் என் மனைவி என் கைகளுக்கு இடையேதான் இருந்தாக வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். வேறு யாருக்காகவும் அவள் அரை விநாடி நேரம் செலவழிப்பதைக் கூட நான் அனுமதிக்கத் தயாராயில்லை" என்றான் சசிதரன் மிகவும் கண்டிப்பான குரலில்.

"ஓகோ, அப்படியா சார். ஆனால் மகாப் பெரிய மனிதர் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொள்ள மாட்டாரே சார்" வெறுமை மாதுரியும் முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு.

"அது யாரம்மா அவ்வளவு பெரிய மனிதர்?" என்று பயந்தவன் போல வினவினான் சசிதரன்.

உறக்கம் கலைவதற்கு அறிகுறியாக லேசாகப் புரண்ட மகனைக் கண்ணால் காட்டி நகைத்த மனைவியை சட்டெனப் பற்றி, ஆசையுடன் தழுவி, அழுத்த முத்த மிட்டான் அவளுடைய அருமைக் கணவன்.